J.M.C
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 14.00 பக்கங்கள்:- [08+20] Registered as a News paper in Sri Lanka

மங்கையர் மனம் கொள்ளை
கொள்ளும் தங்க
நகைகளுக்கு

சாரங்கா
நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-2480

வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 31 திங்கட்கிழமை (16.09.2002) தொலைபேசி 3378 ஒலி 271

புலிகள் பிரதிநிதிகள்


அன்ரன் பாலசிங்கம்


வி.உருத்திரகுமாரன்


ஜோய். மகேஸ்வரன்



## நோர்வேயின் மத்தியஸ்தத்துடன்

# தாய்லாந்தில் இன்று அரசு- புலிகள் பேச்சு

## பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

**(தாய்லாந்தில் இருந்து நமது சிறப்புச் செய்தியாளர் அன்ரனி ஜீவா)**

**இலங்கை அரச பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முதற்கட்ட நேரடிப்பேச்சுவார்த்தை இன்று பிற்பகல் 3மணிக்கு தாய்லாந்தின் சட்டாஹிப் (Sattahip) கடற்படைத் தளத்தில் ஆரம்பமாகவுள்ளது.**

**இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நடைபெறும் இச் சமாதானப் பேச்சுவார்த்தை வெளிநாடு ஒன்றில் நடைபெறுவது இது இரண்டாவது தடவையாகும்.**

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டு பல மில்லியன் ரூபாய்களுக்கு அழிவுகளை ஏற்படுத்திய கொடிய யுத்தத்திற்கு முடிவு கட்டும் வகையில் இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நாலாவது சமாதானப்பேச்சுவார்த்தை இதுவாகும்.



ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் 1985ஆம் ஆண்டு பூட்டான் தலைநகர் திம்புவில் முதலாவது பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதுவே வெளிநாடொன்றில் நடைபெற்ற சமாதானப்பேச்சுவார்த்தை ஆகும். இதனையடுத்து 1989இல் கொழும்பிலும், 1994 யாழ்ப்பாணத்திலும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அப்போதைய அரசுகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இவை யாவும் தோல்வியில் முடிவடைந்தன.

இன்று தாய்லாந்தில் இடம்பெறவுள்ள சமாதானப்பேச்சுவார்த்தை முன்னைய பேச்சுவார்தைகளிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் இடம்பெறுகிறது.

நோர்வே அரசின் ஏற்பாட்டில் அதன் மத்தியஸ்தத்துடன் இடம்பெற

(08ம் பக்கம் பார்க்க)

பேச்சு நடக்கும் கடற்படைத் தளம்



அரச பிரதிநிதிகள்


ஜீ.எல்.பீரிஸ்


மிலிந்த மொறகொட


ரவூப் ஹக்கீம்





ஜோய். மகேஸ்வரன்



அடேல் பாலசிங்கம்

மில்லியன் ரூபாய்களுக்கு அழி வுகளை ஏற்படுத்திய கொடிய யுத்



பாதுகாப்பில் தாய்லாந்துப்படை வீரர்

நாலாவது சமாதானப்பேச்சுவார்த்தை இதுவாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட் சிக்காலத்தில் 1985ஆம் ஆண்டு பூட்டான் தலைநகர் திம்புவில் முத லாவது பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதுவே வெளிநாடொன்றில் நடை பெற்ற சமாதானப்பேச்சுவார்த்தை ஆகும். இதனையடுத்து 1989இல் கொழும்பிலும், 1994 யாழ்ப்பாணத்


யாவும் தோல்வியில் முடிவடைந் தன.

இன்று தாய்லாந்தில் இடம்பெற வுள்ள சமாதானப்பேச்சுவார்த்தை முன்னைய பேச்சுவார்தைகளிலும் பார்க்க முற்றிலும் வேறுபட்ட கோணத தில் இடம்பெறுகிறது.

நோர்வே அரசின் ஏற்பாட்டில் அதன் மத்தியஸ்தத்துடன் இடம்பெற

(08ம் பக்கம் பார்க்க)

பேச்சு நடக்கும் கடற்படைத் தளம்





ரவூப் ஹக்கீம்



பேர்னாட் குணதிலக

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

### திலீபனின் எழுச்சி நிகழ்வில்

# மாவீரர் துயிலும் இல்லங்களில் தேசியக் கொடி ஏற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையின் போது அழிக்கப்பட்ட கோப்பாய், மற்றும் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லங்கள் புனரமைக்கப் பட்டு நேற்றைய தினம் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

தியாகி லெப். கேணல் திலீபனின 15ம் ஆண்டு நினைவு நாள் தொடக்க எழுச்சி நிகழ்வின் போது இம் மாவீ ரர் துயிலும் இல்லங்களில் தேசியக் கொடியேற்றப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல் லத்தில் இந் நிகழ்வு மு.பகல் 11 மணியளவில் துயிலும் இல்லப் புன ரமைப்புக் குழுத் தலைவர் பெ.கனக சபாபதி தலைமையில் ஆரம்பமா கியது.

பொதுச்சுடரினை விடுதலைப்புலி களின் யாழ் மாவட்ட அரசியல்

(08ம் பக்கம் பார்க்க)

# இன்றைய பேச்சுக்களுக்கு எரிக்சோல்ஹெய்ம் நடுவர்

(சட்டாஹிப்)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடு தலைப் புலிகளுக்குமிடையில் இன்று தாய்லாந்து சட்டாஹிப் கடற்படைத் தளத்தில் ஆரம்பமாகவுள்ள சமா தானப் பேச்சுவார்த்தையில் நோர் வேயின் விசேட சமாதானத் தூது வர் எரிக்சொல்ஹெய்ம் நடுவராகச் செயற்படவுள்ளார். சமாதானப் பேச்சு வார்த்தையில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன், சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் உட்பட ஐந்து நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அம்பாசிடர் சிற்றியிலுள்ள ஜோம் தீன் விடுதியில் ஆரம்பமாகும் பேச் சுவார்த்தையின் தொடக்க நிகழ்வை தாய்லாந்து வெளியுறவுச் செயலர் கேஜ்புனா வைபரீதியாக ஆரம் பித்து வைப்பார்.

இந் நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெறும் அரச, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கிடையி லான பேச்சு வார்த்தையில் எரிக் சொல்ஹெய்ம் நடுவராக செய லாற்ற உள்ளார். (த)

## தமிழக கலைஞர்கள் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் பேராசிரியர் அலெக்ஸ் மற்றும் பிரபல திரைப்பட இயக் குநர் அருண்மொழி ஆகிய இரு வரும் யாழ்ப்பாணம் வருகைதந் துள்ளனர். (08ம் பக்கம் பார்க்க)

### யாழ். குடாநாடு எங்கும்

# தியாகி திலீபனின் 15ம் ஆண்டு நினைவு நேற்று எழுச்சி பூர்வமாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் 15ம் ஆண்டு எழுச்சி நிகழ்வுகள் யாழ். குடா நாட்டில் நேற்று மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வலிகாமம்,வடமராட்சி, தென் மராட்சி மற்றும் தீவகம் உட்பட யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தியாகி திலீபனின் எழுச்சி நிகழ்வுகள் உணர்வு பூர்வ மாக அனுஷ்டிக்கப்பட்டதாக எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவித் தனர்.

பாரதத்தின் அராஜகத்திற்கு எதி ராக நல்லூர்க் கந்தசுவாமி கோவி லின் வடக்கு வீதியில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாகி திலீபனை நெஞ்சுருக எண்ணும் வகையில் நேற்றைய நிகழ்வுகள் மு.பகல் 10 மணியளவில் நல்லூர் ஆலயச் சூழலில் பலநோக்குக்

(8ம் பக்கம் பார்க்க)

### ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் வன்னி மாவட்ட முன்னாள் எம்.பி

# இம்மானுவேல் சில்வா எரிந்த நிலையில் சடலமாக மீட்பு

(வவுனியா)

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் அன்ரனி இம்மா னுவேல் சில்வா இவரது வீட்டில் இருந்து உடல் எரிந்து கருகிய நிலையில் நேற்றுக் காலை சடல மாக மீட்கப்பட்டுள்ளார். இவரது 11 வயது மகனும் எரிகாயங்களுக்

(08ம் பக்கம் பார்க்க)

## இன்று பொதுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலைய பொதுக்கூட்டம் இன்று பி. ப 5 00 மணிக்கு தலைவர் வி. விநாயகமூர்த்தி தலைமையில்சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க-75)

## நிதிஉதவி வழங்கப்பட்டது

(யாழ்ப்பணம்

சத்ஜெய இராணுவநடவடிக்கையால்கிளிநொச்சிநகரை விட்டு வெளியேறி தற்போது மீண்டும் செந்தஇடங்களில் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு தலா 15,000 ரூபாப்படி நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது மேலும் நிதிவழங்கப்படாதவர்களுக்கு விரைவில் நிதிவழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிமாவட்ட அரசஅதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார். (க-225)

## வைத்திய அதிகாரி நியமனம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக டாக்டர் எஸ் அம்பிகைபாகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு பளை அரசினர்வைத்தியசாலையில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம)

சங்கானை கல்விககோட்டம் நடத்தும் 16-18 வயதின் கீழ் உதைபபந்தாட்டப் போட்டியிலஇன்றுபி.ப.1.30மணிக்கு வட்டுககோட்டை யாழ்ப்பாணககலலூரிமைதானத்தில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைஅணிஎதிர்சங்கானை சிவபபிரகாச ம.வித்தியாலய அணி,

விக்ரோறியாக் கல்லூரி அணிஎதிர் சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தி அணி,வட்டுஇந்துக் கலலூரி அணிஎதிர் பண்ணாகமெய்கண்டான ம.வி. அணி,வட்டு மத்திய கலலூரி அணிஎதிர் அராலி சரஸ்வதி ம.வித்தி அணிஆகியன மோதவுள்ளன. (க-03)

## சான்றிதழை பெறலாம

(யாழ்பபாணம)

மாகாண மட்ட சமூகக்கல்வி போட்டியில வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சானறிதழ்களை யாழ் வலயக்கல்விபபணிமனையில உதவிக் கலவிப்பணிப்பாளர் த.ராசலிஙகத்திடமபெறறுக்கொளளலாம என அறிவிககப்பட்டுளளது.

ரி.மிதுனாகந்தர்மடம்சைவப் பிரகாச வித்தியாசாலை, வி.தனுசன பரியோவான கல்லூரி, பி.மைதிலி வேம்படி கலலூரி அந்தக்கலலூரி, லை.நிரோஜா பதமதம்யனி, ரடமினஸ் வரி அ.த.க.,

லை.பிரசாந்த பானுகிஅச்சுவேலி புனித திரேசாள கலலூரி, எஸ்.கமலதீபன அச்செழு சைவபபிரகாச வித்தியசாலை, என.வாணி கொககுவில இநதுககலலூரி,

எஸ சுவர்ணா கோப்பாய் மகா வித்தியாலயம ஆகியோருக்கான சானறிதழ்களையேகுறிப்பிடப்பட்ட பாடசாலைகளின அதிபர்கள அலலது பொறுப்பான ஆசிரியாகள் அலலது மாணவாகள் செவ்வாய்,வியாழன தவிர்ந்த ஏனைய நாட்களில பெற்றுக் கொளள முடியுமென தெரிவிக்கப்பட்டுளளது (உ-19)

# பிராந்திய வல்லரசின் ஆதிக்க மாயைக்குள் அகப்படாத தியாகச்செம்மல் திலீபன்

## யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

எமதுபோராட்ட வரலாற்றிலே பிராந்திய வல்லரசின் ஆதிக்கம் ஏற்பட்டபோதும் அதன் மாயைகளுக்கு மத்தியில் தமிழ்மக்களுக்கு விடுதலையின் உண்மையான பாதையைக் காட்டிய வீரன் தியாகச்செம்மல் திலீபனாவான்.

நல்லூரில் நேற்று நடைபெற்ற தியாகி திலீபனின் 15வது ஆண்டுநினைவு தினத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி மேற்கண்டவாறு தெரிவித்தார்,

அவர்தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழீழவிடுதலையை நேசித்த தியாகி திலீபன் தனது கொள்கையில் அணுவளவிலும் மாற்றம் கொள்ளாது தமிழ்மக்களின் நலனுக்காக பசித்தீயை வயிற்றில் மூட்டி அணு அணுவாக மரணத்தைத் தழுவினான்.

அந்தத் தியாகத்தினால் இன்றுதமிழ்மக்கள் மனதிலே என்றும் நினைவுகூரப் படுகின்றான்.

திலீபன்மறைந்து இப்பொழுது சுமார் 15வருடங்கள் ஆகிவிட்டன அன்று திலீபன் கண்டகனவு நனவாகிக் கொண்டு வருகின்றது இன்று தமிழ்மக்கள் கௌரவமாக வாழும் ஒரு சூழ்நிலை தோன்றியுள்ளது.

எந்தவொருஆதிக்க சக்தியும் அதன் அசுரபலமும் உண்மையான விடுதலை உணர்வு கொண்டமக்களுக்கு முன்னால் தாக்குப்பிடிக்க முடியாது என்ற உண்மையை உலகத்திற்கு திலீபனும்தமிழ் மக்களும் பறைசாற்றிநிற்கின்றார்கள்.

1990ம் ஆண்டு தியாகி திலீபனுக்கு இந்தஇடத்திலே நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டிருந்தது ஆனால் இன்று அந்ததூபி இங்கில்லை இடித்தவர்களால் தூபியை மட்டுமே இடிக்கமுடிந்தது தலைவனின் இலட்சியத்தையோ மக்களின் அபிலாசைகளையோ அழிக்கமுடியவில்லை.

தியாகி திலீபனின் போக்குகள் இன்றுஎம்மக்கள் மத்தியில் இன்னமும் எதிரொலித்துக் கொண்டுதான் இருக்கின்றது

1995 ஆண்டிற்கு பிற்பட்ட காலங்களிலே மக்கள் இப்புனித தினத்தை கொண்டாட முடியாத நிலை காணப்பட்டது.

ஆனால்இம்முறை அவ்வாறு அடக்கி வைக்கப்பட்டிருந்த உணர்ச்சிக்குமுறல்கள் தற்பொழுது வெளியேறி வருவதை அவதானிக்க முடிகிறது.

திலீபன் உண்மையில் ஓர் தீர்க்க தரிசனமான வீரன் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்கின்றார்கள் கோட்டையின்மீது புலிக்கொடி எப்பொழுது பறக்கிறதோ அன்றுதான தமிழ்மக்களுக்கு விமோசனம்பிறக்கின்றது என்ற திலீபனின் கூற்று இன்றுவரை எதிரொலிக்கின்றது.

திலீபன் மரணமடைந்த அதேதினம் யாழ்கோட்டையில் புலிக்கொடி பறந்ததை நாம் நினைவு கூரவேண்டும் என்றார்.

(க-19)

# அர்ப்பணிப்புடனும் நிதானத்துடனும் புலிகள் பேச்சுநடாத்த வேண்டும்

## ஈ. பி. ஆர். எல். எவ் (சுரேஸ்) அணி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அபிலாசைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடிய பேச்சு வார்த்தையை தமிழீழ விடுதலைப் புலிகள் நிதானத்துடனும் அர்ப்பணிப்புடனும் துணிச்சலுடனும் முன்னெடுத்துச் செல்லவேண்டுமென விரும்புகின்றோம்.

தாய்லாந்தில் இன்று ஆரம்பமாகும் அரசு- விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை ஒட்டி ஈ. பி. ஆர். எல். எவ் சுரேஸ் அணியினர் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஈழத்தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு கௌரவமான தீர்வொன்றைக் காண்பதற்கான முதலாவது கட்ட ஆரம்பப் பேச்சு வார்த்தைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்குமிடையில் இன்று தாய்லாந்தில் ஏற்படுவதையிட்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பெருமகிழ்ச்சி அடைவதுடன் யுத்தம் நிரந்தரமாகநிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தைமூலம் கௌரவமான தீர்வு கிட்ட வேண்டும் எனவும் வாழ்த்துகின்றது.

அது மாத்திரமல்லாமல் கடந்தபலவருடங்களாகவிடா முயற்சி செய்து இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசையில் அமர்த்திய நோர்வே அரசையும் பிரத்தியேகமாக எரிக்சொல்ஹேய்மையும் நோர்வேயின் வெளிநாட்டமைச்சர் விடார்ஹெல்சினையும் வாழ்த்துகின்றது.

நீண்டதும் நெடியதுமான தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் மிகப் பாரிய இழப்புக்களைச் சந்தித்து விட்டது. வட-கிழக்கு மாகாணங்கள் யுத்தத்தின் கோரத் தாண்டவத்தால் எண்ணிப் பார்க்க முடியாதளவுக்கு சின்னாபின்னமாகி சீரழிந்து விட்டது. விதவைகளும் அநாதைச் சிறார்களும் பெருகி விட்டனர். இலட்சக் கணக்கான அகதிகளும் இலட்சக்கணக்கான நிலக்கண்ணி வெடிகளுமே மீதமாக உள்ளதாக பயப்படவேண்டி உள்ளது.

சமாதானம் உருவானாலும் வாழ்க்கைக்கு உத்தரவாதம் இல்லாத அளவுக்கு மூலை முடுக்கெங்கும் கண்ணிவெடிகள் விதைக்கப்பட்டுள்ளன.

உயிரிழப்புக்களும் சொத்து இழப்புகளும் சொல்லி மாளாதவை யுத்தம் மக்களை பஞ்சைகளாய் பராரிகளாய் நடைப்பிணங்களாய் மாற்றி விட்டது.

இந்தப் பின்னணியில் மக்களின் மனதில் ஓர்புத்துணர்ச்சியை உருவாக்கும் விதத்தில் கடந்த பெப்ரவரி மாதம் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் ஓர் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது அதன் தொடர்ச்சியாக இன்றுதாய்லாந்தில் ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதானது மக்கள்மனதில் நம்பிக்கையையும் பாரிய எதிர்பார்ப்புக்களையும் உருவாக்கி உள்ளது.

நிரந்தரதீர்வொன்றை சிறிலங்கா அரசு காணவிரும்பும் பட்சத்தில் தமிழர்களின் தாயகம் அவர்களது சுயநிர்ணயஉரிமை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அதனடிப்படையில் ஓர்தீர்வு முன்வைக்கப் படுமாயின் பேச்சுவார்த்தைகள வெற்றிபெற நீண்ட காலமெடுக்காது.

எனவே தாய்லாந்துப் பேச்சுவார்த்தையின் வெற்றியும் தோல்வியும்பெருமளவில் அரசாங்கத்தின் மனமாற்றத்திலும் விட்டுக்கொடுப்பிலும் தங்கியுள்ளது என்பதைஅரசு உணரவேண்டும் சிங்கள பேரினவாதத்துக்கு அடிபணிந்து போகாமல் துணிச்சலான முடிவுகளை எடுப்பதன் மூலமே பிரதமர்ரணில் விக்கிரமசிங்காவால் இதனை சாதிக்கமுடியும்.

தமிழ்மக்கள் தமது சொந்தப் பிரதேசத்தில் கௌரவமாகவும் சுயாட்சியுடனும் வாழ்வதற்கேற்ற வகையில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பேச்சுவார்த்தையை திடமாக முன்னெடுத்துச் செல்வார்கள்என நாம் நம்புகின்றோம்.

தமிழ் மக்களும் தமிழ்தேசியக் கூட்டமைப்பும் தம்சார்பாகப் பேசுவதற்கான ஏகோபித்தஉரிமையை தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு கொடுத்துள்ளார்கள்.

நிரந்தரமான யுத்த நிறுத்தம்,தமிழ்மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யக் கூடிய கௌரவமான தீர்வு ஆகியவை எட்டப்படவேண்டும் என்பதற்காகவும் அவற்றை எட்டுவதற்கான பேரம் பேசும் ஆற்றல் விடுதலைப் புலிகளுக்கு உண்டென்றும் அவர்கள் நம்புகின்றார்கள் இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## இன்று ஏகாதச ருத்ரயாகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீகமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ ஏகாதச ருத்ர மஹாயாகம் இன்று காலை 7.00 மணி முதல் டாக்டர் பிரம்மஸ்ரீ எஸ்.ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் (ஜோதிஷர்) தலைமையில் நடைபெறவுள்ளது. (க-03)

## இன்று நடமாடும் வங்கி சேவை

(தென்மராட்சி)

பளையில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் மத்தியில் வங்கியின் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தும் பொருட்டு சாவகச்சேரி மக்கள் வங்கி இன்று பளையில் நடமாடும் வங்கிச் சேவையைநடத்துகின்றது. (க-77)

## இறைவரி சேகரிப்பு அதிகார சபை அமைக்க துரித நடவடிக்கை

(கொழும்பு)

இறைவரி சேகரிப்புஅதிகார சபையை அமைப்பதுதொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவ்வரித்திணைக்கள அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஜப்பான் தொழில் நுட்ப வசதிகளை வழங்குவதுடன், ஆசிய அபிவிருத்தி வங்கி 50 ஆயிரம் டொலரை வழங்கவுள்ளது.

கடந்த காலத்தின் போது இவ் வரித்திணைக்களத்தின் அசமந்தப் போக்கினால் அரசாங்கத்தின் வருமானத்தில் கணிசமான தொகை குறைந்துள்ளதும்குறிப்பிடத்தக்கது. (க-08)

## வான் விபத்தில் 3 பேர் பலி

பொலநறுவை 'பெதுவிவ' என்னும் இடத்தில் வான்-பவுஸர் மோதிக்கொண்டதில் 5 வயது சிறுமி உட்பட 3 பேர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளதுடன்மேலும் பலர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

தனியாருக்கு சொந்தமான இவ்வான் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறி செலுத்தப்பட்டதாலேயே இவ் விபத்து ஏற்பட்டதாக பொலநறுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-08)

## சிறைத் தண்டனை

(ரங்கூன்)

மியான்மார் நாட்டின் தற்போதைய ஆட்சியைக்கைப் பற்றத் திட்டமிட்டிருந்த 83 வீரர்களுக்கு இராணுவ விசாரணை மன்றம்15 ஆண்டுகால சிறைத்தண்டனைவிதித்திருப்பதாக அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன;

எனினும் இது குறித்த அதிகார பூர்வ ஒப்புதல்கள் எதுவும் வெளியாகவில்லைஎன்பது குறிப்பிடத்தக்கது. (க)

## அனுமதி பெற்று தொழிலுக்குசெல்லுமாறு
# மணற்காட்டு மீனவர்களுக்கு
# கடற்படையினர் நிர்ப்பந்தம்

(திருநெல்வேலி)
வடமராட்சி கிழக்கு பணற்காடு கடற்றொழிலாளர்கள் தொழில் புரியச் செல்வதற்கு கடற்படையினரிடம் பாஸ் பெறுமாறுமீண்டும்நிர்ப்பந்திக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை மீறுவோர் தாக்கப்படுவதாகவும், வெயிலில் காக்க வைக்கப்படுவதாகவும், அதிகாலை 4 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடையில் மட்டுமே தொழில் செய்யப்படையினர் அனுமதிப்பதாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பிடம் எடுத்துக்கூறியபோதும் அவர்கள் எவ்வித நடவடிக்கை யையும் எடுக்கவில்லை எனவும் மணற்காட்டு மீனவர்கள் மனக்கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, தொழில் உரிமை மறுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அகிம்சைப் போராட்டம் ஒன்று நடத்துவது குறித்தும் இம் மீனவர்கள் ஆலோசித்து வருகின்றனர். (உ-6,43)

## அ. அட்டைகள்
## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். அரசினர் பொது வைத்தியசாலை வளவினுள் கனகசபை வாசுகி என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், உரியவர்வந்து காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## உதவிப் பதிவாளர்கள்
## நால்வர் புதிதாக நியமனம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நான்கு உதவிப் பதிவாளர்கள் புதிதாசநியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தற்பொழுது பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. அப்பயிற்சிகள் நிறைவுபெற்ற பின்னர் சேவையில் அமர்த்தப்படுவர்.

செல்வி சுமித்திரா குமாரு, எஸ்.கே. ரெஜினோல்ட் எஸ். கே. பிரபாகரன், எ. ஜி ஜெயசித் ஆகியோர் உதவிப்பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-9)

## தாய்லாந்துப் பேச்சில்
# லலித் கொத்தலாவலயை
# இணைக்கக் கோரிக்கை

(கொழும்பு)
அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில்தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில், இந்நாட்டு குடிமக்கள் சார்புப் பிரதிநிதியாக தேசமான்ய லலித் கொத்தலாவலயைச் சேர்த்துக் கொள்ளுமாறு பல்வேறு அமைப்புக்களும் பிரதமரிடம் ரணிலைக் கோரியுள்ளன.

இது தொடர்பில் காணாமல் போனபடை வீரர்களின் சங்கம்-அங்கவீனமுற்ற படைவீரர்களின் சங்கம் ஆகியன விடுத்துள்ள கோரிக்கையில்;

லலித் கொத்தலாவல ''சோலோயூ'' (சமாதானம்) அமைப்பினூடாகசமாதானத்துக்காகப் பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளார் என்ற வகையில், இவரைத் தெரிவு செய்வது பொருத்தமானது என்பதுடன்,சமாதான முன்னெடுப்புக்குப் பெரிதும் உதவும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

சோலோயூ (சமாதானம்) அமைப்புவிடுத்துள்ள கோரிக்கையில்,

காணாமல் போன படைவீரர்கள், அங்கவீன முற்ற, படைவீரர்கள் அங்கவீன முற்ற விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆகியோர்க்கு லலித் கொத்தலாவல உதவிவருகிறார்.

இந்த வகையில் இலங்கைக் குடிமக்கள் சார்பில் கலந்து கொள்ள இவரேபொருத்தமானவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

## நியாப் திட்டத்தில்
# புனரமைக்கப்பட்ட குளம்
# விவசாயிகளிடம் கையளிப்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு கரடியான் ஆற்றுப்பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட மாவளையாறு குளம் மட்டக்களப்புசமநல சேவைத் திணைக்கள உதவிப் பணிப்பாளரினால் விவசாயிகளிடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.

சுமார் 15 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இக்குளம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட முதலாவது குளம் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## களவு முயற்சி கைகூடவில்லை
# பெண்ணின் கழுத்தை திருகி
# கொலை செய்ய முயற்சி

(யாழ்ப்பாணம்)
தமது முயற்சி பலிக்காததால் ஆத்திரமுற்ற கள்வர் சம்பந்தப்பட்ட பெண்ணின் கழுத்தைத் திருகிய சம்பவம் அண்மையில் சுதுமலை தெற்கில் இடம்பெற்றுள்ளது.

அதிகாலை 4 மணியளவில் பிரஸ்தாப பெண்மணி, உறவினர் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் தலைக் கவசம் அணிந்து வந்த இருவர் கழுத்தைத் தடவியதாகவும்,

தங்க நகைகள் ஏதும் அணிந்திராததால் ஆத்திரமுற்ற அவர்கள் கழுத்தைதிருகியதுடன், காலைத்தாக்கியதாகவும்,

வலி தாங்க முடியாத அப்பெண்மணி கூக்குரலிட அயலவர்கள் அவ்விடம்வரவேகள்வர் தப்பியோடி விட்டதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி பெண்மணி தற்போதுசிகிச்சையின்பொருட்டு யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-6)

## தேங்காய் திருடிய
## சிறார்களுக்கு
## பிரம்படி

(புத்தளம்)
300 ரூபா பெறுமதியான 30 தேங்காய்களை திருடிய 3 சிறார்களுக்கு 12 பிரம்படி வழங்குமாறு சிலாபம் நீதிவான் எஸ் ஏ.கம்லத் ஆராச்சி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்

மாதம்பை மணல்குளம் தோட்டமொன்றிலிருந்து 30 தேங்காய்களை திருடியதாக மாதம்பை பொலிஸில் தோட்ட உரிமையாளர் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து சந்தேக நபர்களான மூன்று சிறார்களையும் மாதம்பை பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது மூவருக்கும் முறையே 5,4,3 பிரம்படிகளை தண்டனையாக வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ)

## மீனவர் சங்க
## பிரதி நிதிகள்
## சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
வன்னி மற்றும் யாழ்ப்பாண மீனவர்களிடையே நிலவி வரும் பிணக்குகள் தொடர்பாக வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் பூநகரி கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ஏ நீக்கிலாப்பிள்ளை மற்றும் கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் எதிர் வரும் 19ம் திகதி வியாழக்கிழமை சந்தித்துப் பேசவுள்ளனர். (உ-6)

## விசேட
## வழிபாட்டுக்கு
## வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
தாய்லாந்தில் இன்றுஆரம்பமாகவுள்ள அரசு- புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக இடம்பெற சகல இந்து மக்களையும், ஆலயங்களிலும் வீடுகளிலும் இன்று விசேட வழிபாட்டுப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு அகிலஇலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ)

## பூசை வழிபாட்டுக்கு
## அனுமதி

(கொழும்புத்துறை)
கொழும்புத்துறை கிழக்குப் பகுதி மக்கள் மீளக்குடியேறியதைத் தொடர்ந்து கொழும்புத்துறை உப்புக்குளம் ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் பூசைவழிபாடுகள் செய்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அதேவேளை ஆலயத்தின் பின்வீதிக்கு செல்வது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது அப்பகுதியில் மிதிவெடிகள் உள்ளதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-262

## தாய்லாந்து பேச்சுவார்த்தைகளுக்கு
# பத்திரிகையாளர்கள் 240
# பேர் படையெடுப்பு

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் அரசாங்கப் பிரதி நிதிகளுக்கும் இடையே தாய்லாந்து சட்டாஹிப் கடற்படைத்தளத்தில் இன்று ஆரம்பமாகவுள்ள பேச்சுவார்த்தைகளின் விபரங்களைத் திரட்டுவதற்காக சர்வதேச ரீதியாக சுமார் 240 பத்திரிகையாளர்கள் நேற்று நண்பகல் வரை போய் சேர்ந்துள்ளனர் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப் பேச்சுவார்த்தைகளின் போது எந்தவொரு பத்திரிகையாளர்களிற்கும் நேரடி அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இரண்டாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகளின் போது இவர்கள் அனுமதிக்கப்படலாம் என நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-08)

## மீளக்குடியமர்ந்த 616 குடும்பங்கள்
# அடிப்படை வசதிகள்
# எதுவுமின்றி அல்லல்

(தென்மராட்சி)
வன்னியில் இருந்து அண்மையில் வலிகாமம் தெற்கு பிரதேசத்துக்கு மீளக்குடியமரும் பொருட்டு வருகை தந்துள்ள 616 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 156 பேர் போதிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

குப்பிளான், ஏழாலை தெற்கு மற்றும் புன்னாலைக் கட்டுவன் தெற்குப்பகுதிகளில் வாழும் இக் குடும்பங்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கு தொழில் வாய்ப்புகள் ஏதும் இல்லாத நிலையில் உள்ளனர். (உ-77)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## கணவனால் கைவிடப்பட்ட
# பெண்களுக்குப் பயிற்சிப்
# பட்டறை ஆரம்பமானது

கணவனால் கைவிடப்பட்ட வருவாய்குறைந்தபெண்களுக்கான சுயதொழில் பயிற்சி பட்டறை ஒன்று யாழ். செயலக கேட்போர் கூடத்தில் சமுர்த்திபிரதிப் பணிப்பாளர் திருமதிபந்துசேனவின் நெறியாள்கையில் சனிக்கிழமை இடம்பெற்றது.

சமுர்த்தித் திணைக்கள ஆணையாளரின் அலுவலர் திருமதி எஸ்.பெர்னாண்டோ மற்றும் மகளிர் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர்சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். பிரதேச ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, கணவனால் கைவிடப்பட்ட நூற்றுக் கணக்கான பெண்கள் இப் பயிற்சிப் பட்டறையால் பயனடைந்தனர்.

இதேபோன்றதோர் பயிற்சிப்பட்டறை இன்னும் இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-19,6)

# தியாகி திலீபனின்
# நினைவுகள்



## தேசத்தின் தீபம் திலீபன்

விழிக்குள் நெருப்பை விதைத்தான்
விடியலுக்கு உடலைக் கரைத்தான்
தமிழ்நிலம் முளைக்க கதைத்தான்
தனிவளம் செழிக்க வியர்த்தான்

மக்கள் புரட்சிக்கு வித்திட்டான்
மனுகுலச் சிரிப்பை முத்தமிட்டான்
திக்குகள் வாழ்த்திட மறைந்தான்
திரைகள் விலகிட நிறைந்தான்

அசுரங்கள் தோன்றிட உழைத்தான்
அமிழ்தங்கள் கடைந்திட அலைந்தான்
சிகரங்கள் உயர்ந்திட விரைந்தான்
செந்தமிழ் ஓங்கிட கரைந்தான்.

- தமிழீழக் கவிராயர்

# பெண்களின் வளமான வாழ்வுக்கு அயராத முயற்சி மிக அவசியம்

## சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்கள் தமது எதிர்கால வாழ்க்கையை வலுப்படுத்த வேண்டுமாயின் அயராத முயற்சி அவசியம். இம் முயற்சியைக் கொண்டு எதிர் கால செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும்.

சமுர்த்திப் பிரதிப் பணிப்பாளர் திருமதி ச.பந்துசேன தெரிவித்தார்.

யாழ் செயலகத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான பயிற்சிப் பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

பெண்களின் அபிவிருத்திப் பணிகளை மேம்படுத்த அயராத முயற்சியும் அர்ப்பணிப்பும் அவசியம். எதிர் கால குறிக்கோள்களோடு அசைக்க முடியாத மனஉறுதியோடு கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் இருக்க வேண்டும்.

குடும்பத்தைக் கட்டிக் காக்க வேண்டுமாயின் வருமானம் அவசியம். அந்த வருமானத்தை பெறுவதற்கு, நாங்கள் சுயதொழில் செய்வதற்கு பண உதவியைச் செய்யாமல் பொருள் உதவிகளை வழங்குகின்றோம். தையல் இயந்திரம், உடுபுடவை துணி வகைகள்என்பவற்றைவழங்குவவதற்கு எண்ணியுள்ளோம்.

பெண்கள் என்றும் எதிலும் புயலாகசெயற்படவேண்டும். அப்பொழுது தான் சமூக நீரோட்டத்திற்குள் தாக்குப் பிடிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அலுவலர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட பெருமளவினர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-06)

## பூநகரியில் இயங்கும்

(அரியாலை)

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக, பூநகரி மகாவித்தியாலயம், பூநகரி மருத்துவமனை, தபாலகம், ப. நோ. கூ. சங்கம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை என்பன மீண்டும் மிக விரைவில் பூநகரியில் இயங்க உள்ளன.

தற்போது பூநகரி மருத்துவமனை முழங்காவிலிலும், பூநகரி மகாவித்தியாலயம் ஜெயபுரத்திலும், ப. நோ. கூ. சங்கம் ஜெயபுரத்திலும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-225)

# சட்டமா அதிபர் திணைக்களத்தால் மட்டு. மேல் நீதிமன்றில் 30 வழக்குகள் வாபஸ்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த 30 வழக்குகள் கடந்தவாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் கமலசபேசன் இவ் வழக்குகளை தாக்கல் செய்திருந்தார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதைத் தொடர்ந்து, இவ் வழக்குகளுக்குரிய சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜே விஸ்வநாதன் உத்தரவிட்டுள்ளார்.

இந்நீதிமன்றத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சுமார் 500 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும், இவற்றில் பெரும்பாலான வழக்குகளுக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் அந்நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேசமயம் திருகோணமலையில் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற அமர்வுகள் அடுத்த வாரம் இடம்பெறும்போது, மேலும் பல வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் வாபஸ் பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க-8)

# மருத்துவ, சுகாதாரசேவைகள் இன்றி பச்சிலைப்பள்ளி மக்கள் அதிருப்தி

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் இதுவரை 850 க்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் கூட அங்கு வாழ்கின்ற மக்களுக்கான சுகாதார, மருத்துவ மற்றும் தபால் சேவைகளுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வருவது குறித்து அப்பகுதி மக்கள் பெரும் அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ளனர்.

அங்கு இருந்த பளை அரசினர் வைத்தியசாலை, யுத்தத்தத்தின் போது சேதமடைந்தமை காரணமாக அதனை மீளவும் இயங்கச்செய்து மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கான வைத்திய சேவையை வழங்குவதில் தொடர்ந்தும் பின்னடைவுகள் எதிர்நோக்கப்பட்டு வருகின்றன.

இதனால் பளைப் பிரதேசத்தில் சுகவீனமுறும் மக்கள் தமது வைத்திய தேவைகளுக்கு, சாவகச்சேரி, மந்திகை, மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதேவேளை கடும் சுகவீனமுற்றவர்களையும், அவசரசிகிச்சை பெற வேண்டியவர்களையும் பெரும் பணச் செலவில் தனியார் வாடகைக் கார்களிலேயே மேற்படி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை நிலவி வருகின்றது.

அதே போலவே மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கான தபால் சேவையும் மறுக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பளைப்பிரதேசத்தில் வைத்திய சாலையையும், தபாலகத்தையும் மீளவும் இயங்கச் செய்யும் பொருட்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பளை நகரப் பகுதியில் இரு தனியார் வீடுகளை ஏற்பாடு செய்துள்ள போதிலும் கூட, அவற்றினை இதுவரை பயன்படுத்துவதற்கான முனைப்புகள் எதனையும் குறித்த இரு திணைக்களங்களும் மேற்கொள்ளாமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இது இவ்வாறிருக்க பளை அரசினர் வைத்தியசாலையில் பொறுப்பாளராக இருந்த வைத்தியரான டாக்டர். எஸ்.அம்பிகைபாகன் சில நாட்களுக்கு முன்னர் சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலைக்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், பளை அரசினர் வைத்தியசாலையில் முன்பு பணியாற்றிய பணியாளர்கள் கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. அதேசமயம், பளை பிரதேசத்தில் போதிய தனியார் மருத்துவ சிகிச்சை நிலையங்களும் இன்னமும் இயங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பளை பிரதேசத்தில் மருத்துவ, சுகாதார தபாலக சேவைகளை தாமதமின்றி ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என அப்பகுதியிலுள்ள மக்கள் மற்றும் பொது அமைப்புகள் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-77)

## விளையாட்டுப் போட்டி

(சுண்டுக்குளி)

ஊர்காவற்றுறைதம்பாட்டி காந்திஜி சனசமூகநிலைய 37 வது ஆண்டு நிறைவையொட்டி விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

ஊர்காவற்றுறை அரசியல் பொறுப்பாளர் எஸ். ரதன், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், கல்விக்கோட்ட அதிகாரி ஆர். ரட்ணசிங்கம் கப்டன். டி. ஏ. எம். குணசிங்கம் உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (க-110)

## வாந்திபேதி ஒழிப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வாந்திபேதி ஒழிப்புக் குறித்து குட்டியப்புலம் அ. த. க. பாடசாலையில் சுகாதாரப் பகுதியினரால் கருத்தரங்கு ஒன்று அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் செ. கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வாந்திபேதி நோய் பரவாது தடுக்கும் நடவடிக்கைகள் குறித்து மாணவர்களுக்கு சுகாதாரப் பகுதியினர் போதிய விளக்கமளித்தனர்.

இப் பகுதியில் வாந்திபேதி நோய்க்கு இலக்காகி 15 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்தமையும் ஏற்கனவே தெரிந்ததே. (க)

# சங்கே முழங்கு

## புறக்கணிப்பு ஏனோ!

யாழ்ப்பாண குடாநாட்டின் மூலை முடுக்குகள் எல்லாம் மின்சாரம் வழங்கும் வேலைகள் துரிதகதியில் நடைபெற்றுவருவது குறித்து பொதுமக்கள் தரப்பில் மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளையில் சில பகுதிகள் இதுவிடயத்தில் புறக்கணிக்கப்படுவது குறித்து அப்பகுதி மக்கள் மத்தியில் பலத்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டுவருவதும் இங்கு நோக்கத்தக்கது.

குறிப்பாக நீர் வேலிச் கிராமத்தில் அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்திற்கு வடக்குப்புறமாக உள்ள பகுதி நீண்டகாலமாக மின்சார விநியோகம் வழங்கப்படாமல் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்ட பகுதியாகவே கருதப்படுவது போலவே எண்ணத் தோன்றுகின்றது.

25 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கும் இப்பகுதி ஏன் புறக்கணிக்கப்படுகிறது என்பது குறித்து எதுவுமதெரியாது அப்பகுதி மக்கள் குழம்புகின்றனர்.

சம்பந்தப்பட்ட சபையினருக்கு அறிவித்தும் கூட எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதே வேளையில் நீர்வேலிக் கிராமத்தின் ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு பலவருடங்களாகிவிட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட சபையினர் இது விடயத்தில் தக்க நடவடிக்கை எடுத்து மின்சார விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்தால் அப்பகுதி மக்கள் பெரிதும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

நீர்வேலி

க. கணேசராசா.

## கர்நாடக இசைக் கச்சேரி

(தென்மராட்சி)

கர்நாடக இசைத்துறையில் புகழ்பூத்தவரும்பத்மபூஷணர் டி. கே. பட்டம்மாளின்பேர்த்தியுமான திருமதி நித்தியஸ்ரீ மகாதேவனின் கர்நாடக இசைக்கச்சேரி இன்று மாலை 6 45 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பீடத்தின் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா பிரதமவிருந்தினராக வருகைதருகின்றார். (க-77)

## தெய்வீக பேருரையும் கலை நிகழ்வும்

(கொழும்பு)

'நியந்த்ரீ' வழங்கிவரும் தெய்வீக பேருரையும் கலை நிகழ்வும், நிகழ்ச்சியில் இன்று நல்லூர் சிவன்மண்டபத்தில் மாலை 3.30 மணிதொடக்கம் 4.30 மணிவரை வீணை இசை நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து சென்னை, மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வர தேவஸ்தான வேதவாத்தியார் வேதசாஸ்திர யக்ஞசம்ரக்ஷகர் டாக்டர் எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகளின் தெய்வீகப் பேருரையும் நடைபெறவுள்ளது.

2002ம்ஆண்டு க. பொ. த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (க-8)

## முதுமையில்

நால்... நீங்கள் எல்லோரும் சின்னப்பிள்ளைகள் தானே... அதற்குள்ளேஉங்களுக்கு ஒன்றும் ஆகிவிடாது! என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பாடசாலை மீள் வியூகம்

6-11 வரையான வகுப்புக்களுக்குப் பின்வருமாறு ஆசிரியர் ஆளணி வழங்கப்படவுள்ளது.

| மாணவர் எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| 0-72 | 1 | 1 | - | - | - | 2 | 4 |
| 73-200 | 2 | 1 | - | - | - | 4 | 7 |
| 201-240 | 2 | 1 | - | - | - | 5 | 8 |
| 241 310 | 3 | 1 | 3 | 1 | 1 | 3 | 12 |
| 311-400 | 4 | 2 | 3 | 1 | 1 | 4 | 15 |
| 401-440 | 4 | 2 | 3 | 1 | 1 | 5 | 16 |
| 441-460 | 4 | 2 | 3 | 1 | 1 | 6 | 17 |
| 461-480 | 4 | 2 | 3 | 3 | 1 | 6 | 19 |
| 481-510 | 6 | 3 | 3 | 3 | 1 | 6 | 22 |

1. விஞ்ஞானம் கணிதம்
2. ஆங்கிலம்
3. அழகியல் கல்வி
4. தொழிநுட்பம்
5. 2 வது மொழி
6. பொது
7. மொத்தம்

# இன்று ஒரு தகவல்

## முதுமையில் இன்பம்

ஒருவயதான தாத்தா வயதான காலத்தில் கூட எதையும் வேண்டாம்என்று சொல்லமாட்டார்: எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவார் ஜீரணமாகிவிடும். அவர் உடல்வாகு அப்படி 'என்ன தாத்தா இது?, தள்ளாத வயதிலே இப்படிக் கண்டதையெல்லாம் சாப்பிடலாமா?" என்றுகேட்டால், 'இது எதையுமே தள்ளாத வயதடா கண்ணா!' என்று சினிமா வசனம் பேசுவார். அதுசரி! வயதானகாலத்தில் எல்லாருமே இப்படி உற்சாகமாக இருக்கமுடியுமா? 'முடியும்' என்று சொல்கிறார்கள் முதியோர்நல மருத்துவநிபுணர்கள்.

சரி! அதற்கு என்ன செய்ய வேண்டும்என்றுகேட்டால் ஐம்பது வயதிலேயே அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்துவிடவேண்டும் என்கிறார்கள். முதுமை என்பது நம் எல்லோருக்கும் வந்தே தீரக்கூடியஒன்று 'எனக்கு அதுவேண்டாம்' என்று யாரும் சொல்லமுடியாது. சொன்னாலும் அது ஒதுங்கிப்போய்விடாது. அப்படி இருக்கும்போது அந்தக் கடைசிக்காலத்திலே சந்தோஷமாக இருப்பதற்கு வழியிருக்கிறதென்று சொன்னால் அதைத்தெரிந்து வைத்திருப்பதில் தப்புஇல்லையே!

முதுமையில் இன்பமாக வாழ்வதற்கு வழிஎன்ன என்று கேட்டால் அதற்கு மூன்று வழிகள் சொல்கிறார்கள். ஒன்று உடல்நலம், இரண்டாவது, மனநலம் மூன்றாவது- குடும்பத்திலும், சமுதாயத்திலும் நல்லஇடம் இவ்வளவுதான். முதலில் உடல் நலத்தை எப்படிக் காப்பாற்றுவதுஎன்று பார்ப்போம். வயதானகாலத்தில் பசியும், சுவையும் குறையும். அதனால் சாப்பிடுகிற ஆகாரத்தின் அளவும் குறையும். இப்படி நிலைமை இருப்பதனால் சாப்பிடுகிற கொஞ்சஆகாரமும் சத்துள்ள ஆகாரமாக இருக்கவேண்டியது அவசியம். வயதானகாலத்துக்கு கேழ்வரகு(ராகி) மிகவும் பொருத்தம். இதில் கலோரிகள் அதிகம். சுண்ணாம்புச்சத்தும் அதிகம். நார்ச்சத்தும் அதிகம். சுலபமாகச் செரிக்கும், விலையும் மலிவு.

கோதுமை, கீரை, பருப்பு வகை, பழங்கள் எல்லாம் சாப்பிடலாம். பொட்டுக்கடலை, பட்டாணி இவற்றிலெல்லாம் புரதச்சத்து அதிகம் சாப்பிடலாம். வயதான காலத்தில் ரத்தச் சோகை வருவதற்கான வாய்ப்புகள் அதிகம், அதனால் இரும்புச்சத்து அதிகமாக இருக்கும் ஆகாரங்களாகப் பார்த்துச் சாப்பிட வேண்டும். கீரை வகையில் அது நிறைய இருக்கின்றது. அதனால் தினம் ஒரு வகை கீரை தவறாமல் சேர்த்துக் கொள்ள வேண்டும். வெல்லம், பேரீச்சம்பழம், தேன், கல்லீரல் ஆகியவற்றில் கூட இரும்புச் சத்து அதிகமாகஇருக்கின்றது.

முதுமையில் எலும்பு பலவீனமாகஇருக்கும். அதனால் சுண்ணாம்புச்சத்து அதிகமாக உள்ள ஆகாரத்தையும் சாப்பிடவேண்டும். பாலில் அந்த சத்து அதிகம். முருங்கைக் கீரை, வெந்தயக்கீரை, கேழ்வரகு ஆகியவற்றிலும் அது அதிகம், வயதான காலத்திற்கென்று தனியான ஆகாரம் எதுவுமில்லை. சாப்பிடுவது சத்துள்ளதாகஇருக்கவேண்டுமென்பதுதான் முக்கியம். அடுத்தபடியாக உடற்பயிற்சி மிகவும் அவசியம். அதனால் உடம்பும், மனதும் நன்றாக இருக்கும். முடிந்த அளவுக்கு தினமும். 45 நிமிஷநேரம் உடற்பயிற்சி செய்யலாம். இல்லையென்றால் தினமும் மூன்றிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரம் நடக்கலாம். அதற்கு முன் வைத்தியரிடம் ஆலோசனை கேட்டுக்கொள்வது நன்று. காலாகாலத்தில் மருத்துவ பரிசோதனை செய்து கொள்வதும் அவசியம். இவை உடல் நன்றாக இருப்பதற்கு.

இரண்டாவது மன நலம். வயதாகி விட்டதென்று நினைத்து சும்மா உட்கார்ந்து விடக்கூடாது. அப்படி முடங்கிக் கிடந்து விட்டால் மூப்பின் விளைவு ஆறு மடங்கு அதிகமாகி விடும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். நடுத்தரவயதுக் காலத்திலேயே நமக்கென்று ஒரு நல்ல பொழுது போக்குப் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். புஸ்தகம் படிப்பது. ரேடியோ கேட்பது, நண்பர்களைக் கண்டு உரையாடுவது இப்படி ஏதாவது இருக்க வேண்டும். முதுமைக்கு முக்கியமானவிரோதி, தனிமை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். வீட்டில சிறு சிறு வேலைகளைச் செய்யலாம். மன நலம் நன்றாக இருக்க தியானம் ஒரு நல்ல மருந்து!

மூன்றாவது விஷயம், குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒரு நலல இடத்தைப் பெறவேண்டும். கூட்டுக் குடும்பம தான்நல்லது. குடுமபத்தில் இருக்கிறவர்கள் பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்களின் அனுபவமே பெரிய சொத்து, நேரம் கிடைக்கிற போது எல்லாம் கலகலப்பாகப் பிரியமாகப் பேசிக் கொள்ள வேண்டும். பெரியவர்களின் யோசனையைக் கேட்டு நடப்பது தான் என்றைக்கும் நல்லது. நடுத்தரவயதுக்காலத்திலேயே வயதான காலத்துக்கென்று கொஞ்சம் பணத்தைச் சேமிக்க ஆரம்பித்துவிட வேண்டும். மற்றவர்களை நம்பி இருக்கக் கூடாது, பணம் கையிலே இருந்தால் பாசம் தானாக நெருங்கி வரும்!

மூப்பியல் மருத்துவம் என்பது இப்போது மிகவும் முக்கியமான ஒரு மருத்துவப்பிரிவு, சென்னை, அரசு பொது மருத்துவ மனையில் இதற் சென்று ஒரு தனிப் பிரிவே இருக்கிறது. இந்தியாவிலேயே இதற்கென ஆரம்பிக்கப்பட்டிருக்கிற முதல பிரிவே இது தான், அங்கேயிருக்கிற டாகடர் தான் இவ்வளவு விபரங்களையும் சொன்னார். அதனால், வயது வர வர அதிகமாகிக் கொண்டு வருகிறதே என்பதை நினைத்து யாரும் கவலைப் பட்டுக் கொண்டிருக்காதீர்கள். உங்களுக்கு மட்டுமா அப்படியாகிறது? எல்லோருக்கும் தான்! வயதான காலத்திலும் உற்சாகமாக இருக்கிறார்கள் பலரைப் பாருங்கள். அவர்களைப் பார்த்துகற்றுக் கொள்ளுங்கள்.

ஒரு தாத்தாவுக்கு 100 வது பிறந்த நாள், அவருடைய பேரப் பிள்ளைகளெல்லோரும் வந்து அவரின் காலில் விழுந்து ஆசீர் வாதம் வாங்கினார்கள். காலில் விழுந்து எழுந்ததும், '' தாத்தா! ஆண்டவன் புண்ணியத்தினால் அடுத்த வருஷமும் உங்கள் பிறந்த நாளன்று உங்கள் ஆசீர்வாதத்தைப் பெறக் கூடிய பாககியம் எங்களுக்குக் கிடைக்க வேண்டும்!'' என்று மிகவும் பணிவாகக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அந்த தாத்தா ''கவலைப் படாதீர்கள்! நிச்சயமாக அது நடக்கும். ஏனென்

4 ம்பக்கம் பார்க்க

# யாழ். கண்டி வீதியை 24 மணிநேரமும் திறந்துவிடுவதற்கு விடுதலைப்புலிகள் தயாராம்

## ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் கண்டி வீதியை24 மணிநேரமும்மக்களின் பாவனைக்காக திறந்து விடுவதுபற்றி அரசமட்டத்தில் ஆராயப்பட்டுவருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வவுனியா செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டிலேயே செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகள் இப்பாதையை இரவுபகலாக திறப்பதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

தற்போது இப்பாதையூடாக நாளாந்தம் 6 ஆயிரம் பொதுமக்கள் பிரயாணம் செய்து வருகின்றனர் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கணேஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இது விடயம் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவிதகருத்தும் இது வரையில் தெரிவிக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-08)

## யுவதிகளைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் குட்டியப்புலம் பகுதியில் கடந்த இரு வாரங்களுள் இரு இளம் யுவதிகள் காணாமல் போயுள்ளனர்.

பிரஸ்தாப யுவதிகளுள் ஒருவர் பாடசாலை ஒன்றில் தொண்டர் ஆசிரியராகக் கடமை ஆற்றுபவர்என்றும், மற்றையவர் பல்கலைக்கழக மாணவி என்றும் அறியப்படுகிறது.

இவர்கள் காணாமல் போனமை குறித்து உரிய இடங்களில் அறிவிக்கப்பட்ட போதிலும் இது வரையில் எதுவித பயனும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அடுத்து இப்பகுதி மக்கள் மத்தியில் பலத்த பதற்றம் நிலவுகிறது.

(க)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பயணிகள் பேருந்தும் சைக்கிள்களும் விபத்துக்குள்ளானதில், சைக்கிளில் சென்றவர் படுகாயமடைந்தார்.

கடந்த வெள்ளி மருதனார் மடம் சந்தியில் இடம் பெற்ற இவ் விபத்தில் இணுவில் கிழக்கைச் சேர்ந்த மா. சின்னத்துரை (வயது 64 ) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-6)

## சிற்றூழியர்களுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும், தகுதியுடைய 3 ஆம் தர பாடசாலை சிற்றூழியர்களுக்கு II, I ஆம் தர பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இம்முடிவு வட - கிழக்கு மாகாண கல்வியமைச்சுடன் இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் கடந்த திங்களன்றுநடத்தியபேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்டுள்ளது.

இப்பதவி உயர்வுக்கான விண்ணப்ப படிவம், அதற்கான சுற்றுநிருபங்கள் சில தினங்களில் அனுப்பப்படும் என கல்வியமைச்சு இச்சந்திப்பில் உறுதியளித்துள்ளது.

(உ-3)

## மகாபொல கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 2001/2002 கல்வியாண்டில் மகாபொல புலமைப் பரிசிலுக்குத் தெரிவானவர்கள் அதற்குரிய கொடுப்பனவு இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழக நலச்சேவைக் கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு உதவிப் பதிவாளர் ஜே. ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

(உ-19,6)

## வாந்திபேதியைக் கட்டுப்படுத்த தீவுப் பகுதியில் ஐஸ்கிறீம் விற்பனைக்கு முற்றாக தடை

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியில் வாந்திபேதி நோயின் தாக்கம் அதிகரிப்பதை அடுத்து அதனைத் தடுக்கும் வகையில் அங்கு ஐஸ்கிறீம் வகைகள் விற்பனை செய்யப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தீவகப்பகுதியில் பரவிவரும் வாந்திபேதி நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் ஒரு நடவடிக்கையாக தீவக சுகாதாரப் பகுதியினர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர். ஐஸ்கிறீம் வகைகள் சூடாக்காத உணவுப் பொருளாக இருப்பதனால் அதன் மூலம் தொற்று நோய்கள் அதிகரிக்க வாய்ப்புகள் இருப்பதாகவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

(ம)

## இரத்த பரிசோதனை

(ஊர்காவற்றுறை)

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து மண்டை தீவில் குடியேறியோருக்கான இரத்தப் பரிசோதனை அண்மையில் இடம்பெற்றது.

வேலணைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஏற்பாட்டில் மண்டை தீவில் மலேரியா காய்ச்சலை கட்டுப்படுத்தும் முகமாக இவ் இரத்தப் பரிசோதனை இடம் பெற்றது.

(க-75)

## பத்திரன மீது ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

முன்னாள் கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரனவுக்கு எதிராக, ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு, பொதுஜன ஐக்கிய முன்னணி ஆராய்ந்து வருகிறது.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் 19 ஆவது அரசியல்திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு அளிக்கப்போவதாக றிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி ஆராய்ந்து வருகிறது.

இதேவேளை, 19 ஆவது அரசியல் திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவு அளிக்கப் போவதாக, பத்திரன தெரிவித்திருப்பது அவரின் சொந்தக் கருத்தென்றும், அது கட்சியின் கருத்தல்ல என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(இ)

## நீதி மன்ற வளவில் போதை பொருள்விற்பனை

(கொழும்பு)

கண்டி நீதிமன்ற வளவில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்த நபருக்கு கண்டி நீதிமன்ற நீதிவான் லியோன் செனவிரட்ன 9மாத கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளார்.

நீதிமன்றவளவில்போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாக கண்டி போதைப் பொருள் தடுப்புப்பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்ட போதே இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(க-03)

## புத்தளம்-மன்னார் நெடுஞ்சாலை அமைக்க அரசு தரப்பில் முயற்சி

(கொழும்பு)

புத்தளம்-மன்னார்ஊடாக அதிவேக நெடுஞ் சாலை ஒன்றை அமைப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் உபாலிபியசோம தெரிவித்துள்ளார்.

அண்மையில் புத்தளம் மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ் டிப்போக்களுக்குச் சென்றிருந்த அமைச்சர் அங்கு வைத்தே இதனை தெரிவித்துள்ளார்,

அதேவேளை புத்தளத்திலிருந்து ஏனையநகரங்களுக்கு பஸ் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு டிப்போ முகாமையாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

120 கிலோமீற்றர் நீளமுடைய புத்தளம்-மன்னார் வீதியை புனரமைத்து மீண்டும் பயன்படுத்துவது பற்றி ஆராய்வதற்காக வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர் தலைமையிலான குழுவொன்று அங்கு செல்லவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(க-08)

# அரபாத்தின் ஆதரவாளர் வீட்டில் குண்டுத்தாக்குதல்; மூவர்பலி!

(ஜெருசலேம்)

சாஸப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் இடம் பெற்ற குண்டுவெடிப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர்பலியானதுடன் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான இந்த வீடு பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தின் தலைமையிலான பலஸ்தீன விடுதலை இயக்க ஆதரவாளர் ஒருவருக்கு சொந்தமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எகிப்திய எல்லைக்கருகிலுள்ள பலஸ்தீன நகரமான றொக்காவில் இருக்கின்ற இரு அகதி முகாம்கள் மீது இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இத்தாக்குதலின் போது பரஸ்பரம் இருசாராக்கும் இழப்புக்கள் நேர்ந்துள்ளதாக தெரியவருகிறது.

இஸ்ரேலியப் படையினர் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாகவே இத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக பலஸ்தீன இராணுவத்தினர் கருதுகின்றனர்.

இந்தச் சம்பவத்துக்கான நேரடிக் காரணம் இன்னமும் தெளிவாகவில்லை என பலஸ்தீன புலன் விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (உ-8)

# ஜோர்ஜியாவின்இறைமையை அமெரிக்கா ஆதரிக்கும்

(வாஷிங்டன்)

ஜோர்ஜிய பிரதேசத்திலுள்ள செச்சினியத்தளங்கள் மீது ரஷ்யா தாக்குதல் மேற்கொள்வதை அமெரிக்கா ஆதரிக்காது எனவும், ஜோர்ஜியாவின் இறைமையை அமெரிக்கா எப்போதும் ஆதரித்து வந்துள்ளது என்றும் வாஷிங்டன் அறிவித்துள்ளது.

உலகளாவிய பயங்கரவாத ஒழிப்பு என்ற போர்வையில் செச்சினிய போராளிகளை ஒழிக்கும் திட்டத்தை ரஷ்யா மேற்கொள்ளவுள்ளது.

செச்சினியப் போராளிகளைப்பிடித்து ரஷ்யாவிடம் ஒப்படைக்கத் தவறின் ஜோர்ஜியா தாக்கப்படுமென ரஷ்யா அந்நாட்டிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை அமெரிக்கா 64 மில்லியன் செலவு செய்து ரஷ்ய துருப்புக்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-08)

# எண்ணெய் தாங்கிக் கப்பலில் தீப்பற்றியது

(கேப்டவுன்)

தென்னாபிரிக்க கிழக்கு கடற்பிரதேசத்தில், எண்ணெய் தாங்கிக் கப்பலில் ஏற்பட்ட கசிவால் தீப்பற்றியுள்ளது.

தாஜோலிறூபியா என்ற இந்தக் கப்பலில் பற்றிய தீயை அணைக்கும் முயற்சிகள் பெரும் சிரமமாக இருப்பதாகவும்,

தொடர்ந்தும் எண்ணெய்கசிவதால் கடலின் அருகில் ஓடும் உம் போலோஜி நதியுடன் இந்நீர் கலந்து பாரிய உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தும் எனவும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# ஈராக் ஆயுத உற்பத்தி அமெரிக்காவுக்கு உடனடி ஆபத்து எதுவும் இல்லை

(வாஷிங்டன்)

பாரிய அழிவுகளைஏற்படுத்தும் இரசாயன உயிரியல் ஆயுதங்களை ஈராக்உற்பத்திசெய்வதுகுறித்து அமெரிக்கா முன் வைத்துள்ள காரணங்கள் எதுவுமே அமெரிக்காவின் பாதுகாப்புக்குஉடனடி ஆபத்தை உருவாக்காது என அமெரிக்க ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஈராக்கிற்கு அணுஆயுத உற்பத்தி தொடர்பான பொருட்களை வாங்கும் வல்லமை இருக்கின்றது 'அந்திரக்ஸ்' கிருமிகளை உற்பத்தி செய்தது போல் மேலும் பேரழிவு தரக் கூடிய ஆயுதங்களையும் அது வைத்துள்ளது.

இவைகளை ஐக்கியநாடுகள் சபை கவனிக்க வேண்டும் என்றும் ஈராக் அதிபர் சதாம் ஹுசைனிமிருந்து இவற்றை அப்புறப்படுத்த ஐக்கியநாடுகள்சபை முன்வர வேண்டும் என்றும் ஆய்வாளர்கள்தரப்பில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-03)

# அமெரிக்கா இலங்கை வர்த்தகஒப்பந்தம் விரைவில் கைச்சாத்து

(நியூயோர்க்)

இரட்டை வரிவிதிப்பைத் தவிர்க்கும் நோக்கில்அமெரிக்காவும் இலங்கையும் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவுள்ளனர்.

அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இவ் வர்த்தக ஒப்பந்தத்தில் இந்த வாரம்கைச்சாந்திடவுள்ளார்.

இந்தஒப்பந்தத்தின் மூலம் இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் மேலும் விரிவடையும் எனதெரிவிக்கப்பட்டுள்ளது; (க-த)

# அந்தமானில் நிலநடுக்கம்

அந்தமான தீவின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் நில நடுக்கம் ஏற்பட்டதால் 2 பேர் பலியானதுடன், 40 வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

நேற்று முன்தினம் ஏற்பட்ட இந் நிலநடுக்கம் றிசிட்டர் கருவிகளின் வாசிப்பின்படி 6 புள்ளிகளை காட்டியதாகவும் அதிகாலை 4 மணியளவில் ஏற்பட்ட இந் நிலநடுக்கம் மாலைவரை நீடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதில் காவல்துறை கட்டடங்கள் பலவும் பலத்த சேதத்திற்கு உள்ளாகியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-07)

# உலக சமாதான முன் முயற்சிகளில் ஐரோப்பிய ஒன்றியம்

(இலண்டன்)

இஸ்ரேலிற்கும் பலஸ்தீனத்திற்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் கூறியுளது

அத்துடன, மத்திய கிழக்கு பிரச்சினையையும் முடிவிற்கு கொண்டு வருவதற்கான சர்வதேச மாநாடு விரைவில் நடத்தப்படவேண்டும் என ஐக்கிய நாட்டு பொதுச் செயலாளர் நாயகம் கோபி அனான் விடுத்த அழைப்பிற்கும் ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு தெரிவித்துள்ளதுடன்.

ஈராக் விவகாரம் பெரும் சிக்கலை தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது எனவும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (உ)

# சிறுவரை கடத்தும் கும்பல் வசமாக மாட்டியது

(சென்னை)

தமிழ் நாட்டிலிருந்து குஜராத்திற்கு சிறுவர்களை கடத்தும் தொழிலில் ஈடுபட்ட கும்பல் ஒன்று பொலிஸாரிடம்வசமாக மாட்டிக் கொண்டுள்ளது.

சென்னையிலிருந்து புறப்பட்ட ரயிலில் 10 குழந்தைகள் வரை கடத்தப்பட்டதாகவும் ஆந்ரா பொலிஸார் தக்க சமயத்தில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையினால் இம் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

55 சிறுவர்கள் வரையில் இக்குழுவினரால் இது வரை கடத்தப்பட்டுள்ளதாகவும், இச் சிறுவர்களை மீட்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் அறியப்படுகிறது.

இதேவேளையில் சிறுவர்களை வேலைக்கமர்த்தும் முயற்சியில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் ஆந்திர மாநில அரசு தெரிவித்துள்ளதும் ஏற்கனவேதெரிந்ததே. (க-7)

## தாய்வானுக்கு வழங்கும் சுதந்திரம்

# ஆசிய பசுபிக் பிராந்திய சமாதானத்திற்கு பங்கம்

(தைபீ)

தாய்வான் ஒருபோதும் சுதந்திர நாடாகப் போவதில்லையென ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சீனாஉறுதிபடக் கூறியுள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சர் ரங்சி அஸ்வான் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும் போது; அந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தால் அது ஆசிய பசுபிப்பிராந்தியத்தின்சமாதானத்திற்கும் ஸ்திர நிலைக்கும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

தாய்வான் சுதந்திரம் அடைவதற்கு எடுக்கும் எந்த முயற்சியும் முறியடிக்கப்படுவதுடன் சீனாவில் இருந்துதாய்வான் பிரிவதை ஒருபோதும் அனுமதிக்கப்போவதுஇல்லை எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை, தாய்வான் 1993 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறுவதற்கு விண்ணப்பித்து வந்தமையும் பத்தாவது தடவையாகவும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமையும் ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் 191 நாடுகளில், 90 நாடுகள் தாய்வானிற்கு அங்கத்துவம் கொடுக்க எதிர்ப்பு தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

# ஜப்பானுடன் உறவை ஆரம்பிக்க வட-கொரியா தயார்

(ப்யாங்யொங்)

ஜப்பானுடன் ராஜதந்திர உறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்புவதாக வடகொரியாத் தலைவர் கிம் யோன்கில்தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் பியோடோ செய்தித்தாபனத்திற்கு அளித்த எழுத்துமூலமான பேட்டி ஒன்றின்போதே வடகொரியத்தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜப்பானியப் பிரதமர் பில்கிறோ கொச்சினியுடன் வடகொரியாத் தலைவர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உச்சிமாநாடுஒன்றை நாளை செவ்வாய்க்கிழமை பியாங்யொங்கில் நடத்தவுள்ளார் எனினும் பரஸ்பரஉறவுகள் விருத்தியடையும பட்சத்தில் தாம் ஜப்பானிய விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாகவும் கிம் மேலும் கூறினார்.

வடகொரியா குடியரசை ஜப்பான் ஆட்சிசெய்து வந்ததால் அந்தநாடு அதற்கான மன்னிப்புகேருவதுடன், நஷ்டஈடு வழங்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை ஜப்பானுடன் உறவுகளை விருத்திசெய்து கொள்வது ஜப்பானிய மக்களின் அபிலாசையாகும் என்று வடகொரியாவின் செய்திஸ்தாபனம்ஒன்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# அமெரிக்க தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி கராச்சியில் கைது

(கராச்சி)

அமெரிக்காவில் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலின் முக்கிய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கராச்சிநகரில் வைத்து கைதுசெய்யப்பட்ட அல்கெய்டா அமைப்பினைச் சேர்ந்த ரம்சிப் பினால்சிப் என்னும் இந்தத்தீவிரவாதி கடந்த ஒரு வருட காலத்தில் இந்தத் தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமான நபராவார்.

இவர் 4 தடவைகள் அமெரிக்கா செல்ல முயற்சித்ததாகவும் நான்கு தடவைகளும் விசாமறுக்கப்பட்டதாகவும் விசாரணையின் போதுதெரியவருகிறது.

மேலும்கைதுசெய்யப்பட்ட இந்தநபர் தெரிவித்த தகவலின் படி இத்தாக்குதலுக்கு அல்கெய்டா அமைப்பின் தலைவர் ஒசாமாபின்லேடன் தான் முக்கிய கர்த்தாவாக செயற்பட்டார் என்பது புலனாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

# சிம்பாவே ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய்வு

(ஹராரே)

சிம்பாவே ஜனாதிபதி றொபேட் முஹாபே மீது நடவடிக்கை எடுப்பது பற்றி பொதுநலவாயத்தைச்சேர்ந்த மூன்று நாடுகளின் குழு எதிர்வரும் 23 ஆம் திகதி கூடி ஆராயவுள்ளது

சவுதிஅரேபியப் பிரதமர் தலைமையில் கூடவுள்ள இக் கூட்டத்தில் நைஜீரியா ஜனாதிபதி தென்னாபிரிக்க ஜனாதிபதி ஆகியோர் இக் குழுவில் அடங்குகின்றனர்.

சிம்பாவே விவசாயப் பண்ணைகள் கைவிடப்பட்டதால் அங்கு கடும் பஞ்சம் நிலவிவருகிறது இதனால் சிம்பாவேயின் 60 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிம்பாவே ஜனாதிபதி வெள்ளை நிறப் பண்ணையாளர்களை அவ்விடங்களை விட்டு வெளியேற வேண்டும் என உத்தரவிட்டதே இப் பஞ்சத்திற்கான காரணம் என்று கருதப்படுகிறது. (உ-8)

# தமிழர் தேசிய இயக்க பேச்சாளர் பாவாணன் மீது மற்றோர் வழக்கு

(புதுடில்லி)

தமிழர் தேசியஇயக்கத்தின் பேச்சாளர் பாவாணன் மீது தமிழ்நாட்டுப் பொலிஸார் மற்றோர் வழக்கினை தாக்கல் செய்யவிருக்கின்றனர்.

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர்பழநெடுமாறன் தலைமையில் நடைபெற்ற கொள்கைக் கூட்டத்திலும் இவர் புலிகளுக்கு ஆதரவாக பேசினார் என குற்றம் சாட்டப்பட்டே பொலிஸாரால் இவர் மீதுவழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

வில்லிபுத்தூர் போன்ற பல இடங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக பேசினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் ஏற்கனவே இவர் கைது செய்யப்பட்டுதற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

நட்பிற்கு வீற்றிருக்கை
யாதெனில் கொட்பின்றி
ஒல்லும் வாய் ஊன்றும் நிலை

குறள்

# வலம்புரி

## சமாதானப் பேச்சு!

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கு மிடையே இன்று தாய்லாந்தில் முதற்கட்ட சமாதானப் பேச்சு ஆரம்பமாகிறது. நோர்வே நாட்டின் அனுசரணையுடன் நடைபெறுகின்ற இச் சமாதானப்பேச்சு வெற்றியளிக்க வேண்டுமென்பதே அனைவரதும் பிரார்த்தனை. இருபது வருடகால யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதென்பது இலேசான காரியமன்று. ஆயினும் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் பேச்சுக்கள் ஆரம்பமாவதால், இரு தரப்புக்கும் நடுவராக மூன்றாந்தரப்பு இருப்பது சமாதானப்பேச்சிலிருந்து எவரையும் விலகிச் செல்லாமல் பாதுகாத்துக் கொள்ளும்.

அரசும் விடுதலைப் புலிகளும் இன்று தாய்லாந்தில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு நோர்வே நாட்டின் பங்களிப்பே காரணமாகும் குறிப்பாக நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹேய்ம் மேற்கொண்ட சமாதான முயற்சியும், அவர் கையாண்ட வழி முறைகளும் சமாதானப் பேச்சுக்கு வித்திட்டது.

அதேவேளை எரிக் சொல்ஹேய்ம் சார்ந்த கட்சி ஆட்சியில் இல்லாத போதும நோர்வேயின் ஆட்சியைக் கைப்பற்றிய புதிய அரசும் தூதுவர் எரிக் சொல்ஹேய்மை விலக்கவில்லை என்பதும் தூதுவர் எரிக்சோல் தனது கட்சி ஆட்சியில் இல்லாதபோது நமக்கேன் இது என்று விலகிச் செல்லாமையும் நோர்வே அரசினதும் எரிக்சோலினதும் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

இது இலங்கை அரசாங்கத்திற்கு ஓர் நல்ல படிப்பினையாகும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முன்வந்த தூதுவர் எரிக்சொல் மீது நம்பிக்கை இழந்துள்ளதாக அப்போதைய அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியபோதும்எரிக்சொல்ஹேய்ம் தனது சமாதானப் பணியை இடையறாது தொடர்ந்ததன் பயனாக இன்று தாய்லாந்தில் அரசும்-விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சில் ஈடுபடுகின்றன.இப்பேச்சுவார்த்தையைஇருதரப்பினரும்நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

# பாடசாலை மீள் வியூகம் கட்டமைப்பின் மூலம்

# வளங்களின் வீண் விரயம், பங்கீடுகளுக்கு தீர்வு

தொகுப்பு :

**மு. விக்னேஸ்வரன்**

கோப்பாய்.

பாடசாலை மீள் வியூகம் கட்டமைப்பு (Rationalizatjon of School என்பதற்குப் பாடசாலை வசதிகளை நியாயப் படுத்தல் என்கின்ற அடிப்படையிலும் கருத்து வழங்கப் படுகின்றது. பாடசாலைகளிடையே நிலவுகின்ற வளப்பங்கீடு வளங்களின் வீண் விரயம் ஆகிய வற்றுக்குத் தீர்வு காணும் வகையில் இக் கட்டமைப்பு 1996/31ம் இலக்க சுற்று நிருபத்துக்கமைவாக 18.11.96 அன்று வெளியிடப் பட்டது. இக் கட்டமைப்பின் படி இலங்கை முழுவதுமுள்ள பாடசாலைகளில் 1999,2000 2001, 2002, 2003 ஆகிய ஐந்து வருடங்களில் படிப் படியாக கட்டமைப்பில் மாற்ற மேற் படுத்தப் பட வேண்டும் என எதிர் பார்க்கப் படுகின்றது. அதாவது 1999 - 2003 வரையான காலப் பகுதியில் ஆண்டுக்கு ஒன்று என்ற அடிப்படையில் ஒரு வகுப்பைக் கூட்டுதல் அல்லது குறைத்தல் என்ற அடிப் படையில் மாற்றங்கள் விதந் துரைக்கப்பட்டன. ஆயின் இக் கட்டமைப்பின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு விதந்துரைக்கப்பட்டுள்ளன.

1) ஆசிரிய வளங்களையும் பௌதிக வளங்களையும் விரயமாக்காத வகையில் ஒன்று சேர்த்தல்.

2) கல்விக்கான வாய்ப்பை மேலும் விருத்தியாக்கல்.

3) கல்வியின் தரத்தை மேலும் விருத்தியாக்கல்.

4) ஆசிரியர்களுக்குத் தேவையான கல்வியும் பயிற்சியும் வழங்கல்.

5) அதிபருக்கு வளங்களும் முகாமைத்துவப் பயிற்சியும் வழங்குதல்.

6) தொழிற்றிட்ட முறை சார்ந்த தொழில்சார் கல்வியை மேம்படுத்தல் ஆகியன வாகும்.

### மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் பாடசாலைகள்

1996ல் எடுக்கப்பட்ட புள்ளிவிபரத் தகவல்களின் படி, இலங்கையிலுள்ளமொத்தம் 1-15வரையான மாணவர்களின் எண்ணிக்கையுடைய பாடசாலைகளின் எண்ணிக்கை 167ஆகவும் 15-30 வரையான எண்ணிக்கையுடையவை432ஆகவும் 31-50 வரையான எண்ணிக்கையுடையவை 678 ஆகவும் 50-75வரையான எண்ணிக்கையுடையவை 758 ஆகவும் 76-100 வரையான எண்ணிக்கையுடையவை 654 ஆகவும் 101-150 வரையான எண்ணிக்கையுடையவை 1138ஆகவும் காணப்பட்டன. இவ்வாறாக விரிவடைந்து 5000க்கு மேல் மாணவர்எண்ணிக்கையுடைய பாடசாலைகளின் எண்ணிக்கை 06 ஆக இருந்தது.

மீண்டும் 1999ல் எடுக்கப் பட்ட புள்ளி விபரத் தகவல்களின் அடிப்படையில் நாட்டிலுள்ள 10093 பாடசாலைகளில் மொத்தமாக 07(ஏழு) மாணவர்கட்குக் குறைந்த எண்ணிக்கையுடைய ஆரம்ப பாடசாலைகளின் எண்ணிக்கை 539 ஆகவும் தரம் 12ல் 05 (ஐந்து)மாணவர்கட்குக் குறைவான எண்ணிக்கையுடைய பாடசாலைகள் 178 ஆகவும் தரம்12, தரம்13கலை வர்த்தகம் பிரிவுகளில் (பத்து) 10மாணவர்கட்கு குறைவான எண்ணிக்கையுடைய பாடசாலைகள் 818 ஆகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றை அடிப்படையாகக்கொண்டே இம் மீள் வியூகக்கட்டமைப்புமுதன்மை பெறவலிமையூட்டப்பட்டது.

### கனிஷ்ட சிரேஷ்ட பாடசாலைகள்

இக் கட்டமைப்பின் அடிப் படையில் 3-5 வயது வரை முன்பள்ளிக் கல்வியும் 5-14 வயது வரை அனைவருக்கும் கட்டாயக் கல்வி எனவும் விதந்துரைக்கப்பட்டுள்ளது. இவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவைக்கும் பொறுப்பு சமுர்த்தி உத்தியோகத்தரைச் சார்ந்ததாகும்.

பாடசாலை மீள் வியூக ட்டமைப்பின் வகையில் பாடசாலைகள் கனிஷ்ட பாடசாலைகள், சிரேஷ்ட பாடசாலைகள் என இரு வகைப் படுத்தப்பட்டுள்ளன.

கனிஷ்ட பாடசாலைகள் தரம் 1- தரம் 5 வரையான ஆரம்பப்பிரிவையும்தரம் 6-9 வரையான கனிஷ்ட இடைநிலைப் பிரிவையும் உள்ளடக்கியதாகவும் அமையும். சிரேஷ்ட பாடசாலைகள் தரம் 10-11 வரையான சிரேஷ்ட இடை நிலைப் பிரிவையும் தரம் 12- தரம் 13 வரையான வகுப்புக்கள் கல்லூரி மட்டப்பிரிவையும் கொண்டதாக இருக்கும்.

1999- 2003 வரையான காலப் பகுதியில் ஆண்டுக்கு ஒரு வகுப்பு கூட்டுதல், அல்லது குறைத்தல் என்ற அடிப் படையில் 2003 ல் முறையாக ஒழுங்கு படுத்தப் பட வேண்டும். ஆயின் குறிப்பிட்ட சில பிரதேசங்களின்புவியியல் அமைப்புக்கேற்ப தரம் 1-5 வரையான பாடசாலை, தரம் 1- தரம் 11 வரையான பாடசாலை, தரம் 1- தரம் 13 வரையான பாடசாலை இயங்க அனுமதிக்க முடியும் எனவும் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

### மாற்று ஏற்பாடு

தரம் III (Type III) ஆரம்ப பாடசாலையொன்றில் ஒரு வகுப்பில் (10) பத்துக்குக் குறைவான மாணவர்கள் காணப்படின், அப்பாடசாலை மாணவர்கள் 2 KM தூரம் வரையான வேறொரு பாடசாலைக்கு மாற்றப்படுவார்கள். இப்பாடசாலை மூடப்படும் 2K.M தூரத்தில் வேறொரு பாடசாலை இல்லாத விடத்து மட்டும் தொடர்ந்து இயங்க முடியும். இவ்வாறாக மூடப்படுகின்ற பாடசாலை, முறைசாராக் கல்வி நடாத்தும்பாடசாலையாக மாற்றப்படவேண்டும். இவ்விடயம் வெற்றியளிக்கஅதிபர்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும்எனஎதிர்பார்க்கப்படுகிறது.

தரம் II பாடசாலைகளைப் பொறுத்த வரை வகுப்பொன்றில் 15 மாணவர்கட்குக் குறைவாக இருந்தால் அப்பாடசாலை மாணவர்களை 4 K M தூரத்திலுள்ள வேறொரு பாடசாலைக்கு மாற்றப்பட வேண்டும். இப் பாடசாலை IIIம் தரம் பாடசாலையாக மாற்றமடையும் இங்கும் மீள்வியூகக் கட்டமைப்பில் அதிபர்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகிறது. 4.K M தூரத்தில்மாற்றுப் பாடசாலை இல்லாத விடத்து அதே பாடசாலை தொடர்ந்து இயங்க முடியும்.

1, A, B பாடசாலையொன்றில் க.பொ.த. உயர்தர வகுப்பு ஒன்றில் 15 மாணவர்கட்கு குறைவாக விருப்பின் அம்மாணவர்களை 8.K M தூரத்திலுள்ள வேறொரு பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். இவ்விடயத்தில் பாடசாலை அதிபர்களின் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது.

### அதிபர்களின் ஒத்துழைப்பு

இவ்வாறான பாடசாலைக் கட்டமைப்பின் மீள் வியூகக் கட்டமைப்பின் வெற்றிக்கு அதிபர்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் ஆசிரியர்களின் பங்கீடு, வளப்பங்கீடு, வள வீண் விரயம் என்பவற்றைநீக்கலாம்எனக்கூறப்படுகின்றது.

இப் புதிய கட்டமைப்பின் கீழ் ஆரம்பப் பாடசாலைகளில் பகுதித் தலைவர் முறை நீக்கப்பட்டுள்ளதுடன் மேற்பார்வை அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்பபிரிவு பாடசாலை (பாடக் கற்பித்தல்)

| மாணவர் எண்ணிக்கை | ஆரம்ப கல்வி | ஆங்கிலம் | 2ம்மொழி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 0-65 | 2 | 1 | - | 3 |
| 66-100 | 3 | 1 | - | 4 |
| 101-135 | 4 | 1 | - | 5 |
| 136-200 | 5 | 1 | - | 6 |
| 201-280 | 7 | 1 | 1 | 9 |
| 281-320 | 8 | 1 | 1 | 10 |
| 321-360 | 9 | 1 | 1 | 11 |
| 361-400 | 10 | 1 | 1 | 12 |
| 441-480 | 12 | 2 | 1 | 15 |
| 481-520 | 13 | 2 | 1 | 16 |
| 521-600 | 15 | 2 | 1 | 18 |

ஆரம்ப பாடசாலை ஒன்றின் மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர் எண்ணிகலைக வழங்கப்பட்டுள்ளது. பிரிவுகளின் எண்ணிக்கைக் கேற்ப ஆசிரிய ஆளணி வழங்கப்படமாட்டாது.

4ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## விழித் தெழுங்கள்

இலட்சக் கணக்கான பிறவிகளில்நீங்கள் உலகஇன்பங்களை அனுபவித்திருக்கிறீர்கள். இதுவரையில் உங்களுக்கு இதில் திருப்தி ஏற்படவில்லை யென்றால், இனி எப்போது அது கிடைக்கப் போகிறது? இவ்வின் பங்களாகிய கானல் நீரின் பின்னால் ஓடாதீர்கள். துறவு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். ஆத்மாவை உணருங்கள். அப்போது தான் அழிவற்ற மகிழ்ச்சியையும், நிலைத்த நிம்மதியையும் பேரின்பத்தையும் பெற முடியும். ஆகவே, அறியாமையாகிய உறக்கத்திலிருந்து விழித்தெழுங்கள்.

சுவாமி சிவானந்தர்

# வவுனியாவில்

# மீளக் குடியேற்றும் நடவடிக்கை துரிதம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியேற்றுவதுதொடர்பான நடவடிக்கைகள் துரிதமாக்கப்பட்டுவருகின்றன என வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் நூர்டின்மசூர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அகதிகளை மீளக் குடியேற்றுவது தொடர்பான மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் இம்மாவட்டத்தில் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் சுமார் ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியேற்றப்படவுள்ளதாகவும், இதற்கென 13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மண்ணியபுரம், தாலிக்குளம், புலிதரித்தபுளியங்குளம், மினிபாம் மற்றும் கனகராஜன் குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர். (க-8)



தியாகி திலீபனின் 15வது ஆண்டு நினைவு எழுச்சி நிகழ்வுகள் நேற்று நடைபெற்ற போது மாவீரர் துயிலும் இல்லங்களில் தேசியக் கொடி ஏற்றப்படுவதையும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தையும் படங்களில் காணலாம்.

## தாய்லாந்தில்...

வுள்ள தாய்லாந்துப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக அரசும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு உடன் படிக்கையொன்றைச் செய்து அதன் மூலம் சமாதானத்திற்கான செயல் வடிவத்தைக் கொடுத்து 6மாதங்களுக்குப் பின் சர்வதேச வல்லாதிக்கம் மிக்க நாடுகளின் ஆசீர்வாதத்துடன் இன்று தாய்லாந்தில் பேசுகின்றனர்.

இன்று நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப்புலிகள், நோர்வே அரசின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இலங்கை அரசின் சார்பில் அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம், சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலகவும்

விடுதலைப்புலிகளின் சார்பில் லண்டனில் இருந்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அடேல் பாலசிங்கமும் அமெரிக்காவில் இருந்து புலிகளின் சட்டத்துறை நிபுணர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன், அவுஸ்திரேலியாவில் இருந்து விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வு நிபுணர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும்

நோர்வேயின் சார்பில் நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோரும் கலந்து கொள்கின்றார்கள்.

சமாதானப்பேச்சுவாத்தை நடைபெறவுள்ள சட்டாஹிப் கடற்படைத்தள மண்டபத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பூட்டிய மண்டப அறைக்குள் இப் பேச்சுவார்த்தை நடைபெறும் போது பத்திரிகையாளர்கள் படப்பிடிப்பாளர்கள் எவரும் அனுமதிக் கப்படமாட்டார்கள் என்று எமது சிறப்புச் செய்தியாளர் அறிவித்துள்ளார். இச்சமாதானப் பேச்சுவார்த்தை இன்று முதல் 18ம் திகதி புதன் கிழமைவரை சுமார் 12மணித்தியாலங்கள் நடைபெறவுள்ளது.

## இம்மானுவேல்...

குள்ளான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் உள்ள அவரது வீட்டில் மனைவியின் 30வது பிறந்த நாள் நிகழ்வு இடம் பெற்றுள்ளது. மறுநாள் காலை அவர் படுக்கையறையில் இருந்து எரிந்து கருகிய நிலையில், முகத்திலும் நெஞ்சிலும் பலத்த அடி காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேற்படி மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகவும் இதனால் இறந்தவரின் மனைவி மற்றும் அவரது மெய்ப்பாதுகாவலர் ஆகியோரின் வாக்கு மூலங்களைப் பெறவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-8)

## தமிழகம்...

யாழ் வந்துள்ள இவர்கள் யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டனர். இவர்கள் இருவரும் நேற்று வலம்புரி பத்திரிகை காரியாலயத்துக்கு வருகை தந்து ஆசிரிய பீடத்தினருடன் கலந்துரையாடினர். (இ)

## மாவீரர்...

துறை பொறுப்பாளர் இளம்பரிதி ஏற்றி வைக்க ஈகச் சுடரினை துயிலும் இல்லப் புனரமைப்புக் குழுப் பொறுப்பாளர் சந்திரன் ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றி வைத்தார்.

தியாகி திலீபனின் திருவுருப்படத்திற்கு மாவீரர் லெப்.சுஜியின் சகோதரன் ரஞ்சன் மலர் மாலை அணிவித்தார்.

நினைவுரையினை யாழ்மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி நிகழ்த்தினார்.

இதேவேளை வடமராட்சி எள்ளங்குள மாவீரர் துயிலும் இல்ல நிகழ்வு பி.ப 12.55 மணிக்கு துயிலும் இல்ல புனரமைப்புக்குழுத் தலைவர் சி.கணபதிப்பிள்ளை தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை வட மராட்சி வடக்கு கொள்கை முன்னெடுப்புப் பிரிவை சேர்ந்த போராளி நிஷாந்தன், வடமராட்சி வடக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் பாரதி ஆகியோர் ஏற்றி வைக்க ஈகச் சுடரினை மாவீரர் பணிமனை துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழரசி மாவீரர் செந்தமிழினியின் தந்தையார் அரசன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன.தியாகம் ஏற்றி வைத்தார்.

திலீபனின் திருவுருவப் படத்திற்கு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மலர் மாலை அணிவித்தார்.

நினைவுரையினை மாகாண சபைக் கல்விப்பணிப்பாளர் ந.ஆனந்தராசா, போராளி செல்வி கோமதி, மற்றும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வுகளில் பெருந்திரளாக பொதுமக்கள் மற்றும் போராளிகள் கலந்து கொண்டனர். (இ)

## தியாகி...

கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகியது.

நிகழ்வில் பொதுச் சுடரை விடுதலைப்புலிகளின் மாவீரர் பணிமனைத துணைப் பொறுப்பாளர் செல்வி தமிழரசி ஏற்றி வைக்க ஈகச் சுடரை மாவீரர் நிலவனின் தாயார் திருமதி ச. சின்னம்மா ஏற்றி வைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை புலிகளின் யாழ்.நல்லூர்க் கோட்ட அரசியல் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஏற்றி வைத்தார்.

திலீபனின் திருவுருவப்படத்திற்கு வலி கிழக்கு கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்மாறன் மலர் மாலை அணிவித்தார்.

அக வணக்கத்தைத் தொடர்ந்து திலீபனின் நினைவுத் தூபிக்கான அடிக்கல் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் அவரகளால் நாட்டி வைக்கப்பட்டது.


தொடர்ந்து யாழ் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன தியாகம் ஆகியோரின் அஞ்சலி உரைகள் இடம்பெற்றது.

இதேவேளை வடமராட்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் இடம் பெற்ற எழுச்சி நிகழ்வில் தேசியக் கொடியை அரசியல் பிரமுகர் நிஷாந்தன் மாஸ்ரர் ஏற்றி வைத்தார். ஈகச் சுடரினை கோட்ட அரசியல் பொறுப்பாளர் தயா, அரசியல் பிரமுகர் நல்லையா. விநோதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

எழுச்சி நிகழ்வுகள் தொடர்ந்து எதிர்வரும் 26ந் திகதி வரை இடம்பெறும் என்பது குறிபபிடதக்கது. (இ-19-23-246-75)


ஓராண்டு நினைவஞ்சலி

வைரமுத்து சுதர்சன்



உன்னோடு நாம் சேர்ந்து
அன்பாக உரையாடி
ஒன்றாக நாம் படித்தோம்
அந் நாளில்.....

இன்றோ நீ
தமிழீழ விடுதலைக்காய்
தமிழ் தாயின் மடியில்
தலை சாய்த்து விட்டாய்
நாம் கண்ணீரில் நனைகின்றோம்.

இந் நாளில் சந்திக்க
எந் நாளும் காத்திருந்தோம்
நாம் தோற்றுவிட்டோம்
நீயோ களம் சென்று
வென்று விட்டாய் மாவீரனாய்



கப்டன் துளசி (முகில்வண்ணன்)

(யாழ் இந்துக் கல்லூரி 96ம் ஆண்டு
உயிரியல் பிரிவு மாணவன்)
மட்டக்களப்பு - திருநெல்வேலி

என்றும் உன் நினைவுடன்
யாழ் நண்பர்கள்




கணனி இயக்குநர் தேவை

தொலைத்தொடர்பகம் ஒன்றிற்கு கணனி (Computer) இயக்குநர் தேவை. 18.09.2002 புதன் கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

தொடர்புக்கு: 27, சப்பல் ஸ்றீற்
யாழ்ப்பாணம்
T.P NO :_ 021-2222765

[C/5910]





எமது போராட்டத்தை நாமே தோற்கடிப்பதா?

எமது அடையாளத்தை நாமே அழிப்பதா?

எமது வரலாற்றை நாமே குலைப்பதா?

எமது நாட்டை அன்னியனுக்கு விற்பதா?

பழைய வீடுகள் பழைய மரத் தளபாடங்கள், மரவாகனங்கள், உலோகப் பாத்திரங்கள் இந்த மண்ணை விட்டு வெளியேறுவதைத் தடுப்போம். அரும் பொருட்களைப் பாதுகாப்போம். அரும்பொருட்கள் தேசத்தின் அடையாளமாகும்.

முதுசம் VII, கலைவட்டம், யாழ். பல்கலைக்கழகம்



யாழ். மண்ணில்
உங்கள் அபிமான பத்திரிகை
VIRAKESARI
வீரகேசரி
பெருமையுடன் வழங்கும்



நல்லூர் நல்லை ஆதீனத்தில்
செப்டம்பர் 16.2002
பி.ப. 6.45 மணிக்கு
அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்
பிரதம விருந்தினர்
பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள்
தலைவர் நுண்கலைப்பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

நித்தியஸ்ரீயின்
இன்னிசை
விருந்து

அனுமதி இலவசம்

அனுசரணை
NSB
தேசிய சேமிப்பு வங்கி


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர்

பக்கங்கள் - 16+IV

# சங்கு நாதம்

# Sankunatham

திங்கட்கிழமை (16-22. செப். 2002)

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 தொலை பேசி 3378 நாதம்:- 29



பக்கம்-02 அரசியல் அலசல்


பக்கம்-08 மௌனத்தின் தேடல்கள்



பக்கம்-11 மகளிர் உலகம்


பக்கம்-14 சிறுவர் அரங்கம்


பக்கம்-16 சினிமாச் சிதறல்


# இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு

# பிரபா - ரணில் சந்திப்பில்!



15 ஆண்டுகளுக்கு முன்....
உண்ணாநோன்பிருக்கும் தியாகி
திலீபனுடன் தலைவர் பிரபா...

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு பிரபா- ரணில் சந்திப்பில்

பூச்சியத்துக்குள்ளே ஒரு இராச்சியத்தை ஆண்டு கொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன் அவனைப் புரிந்து கொண்டால் அவன் தான் இறைவன் என்ற திரைப்படப்பாடல்



இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

தந்தை செல்வநாயகம் அவர்கள் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் எனக் கூறிய வாசகம் மேலெழுந்தமானதல்ல. தனது




அரசியல் வாழ்வில் கண்ட ஆழமான அனுபவப் புலத்தால் விளைந்த கருத்தே அது. ஈழத்தமிழர்கள் உரிமையோடு வாழ வேண்டும் என்ற நோக்கோடு அதற்காக அகிம்சை வழி நின்று போராடியவர்கள் ஏராளம், சத்தியாக்கிரகப் போராட்டங்களால் மண்டை உடைப்பட்டவர்களும்- சிறைகளில் அடைப்பட்டவர்களும் பலர்.

அகிம்சைப் போரை சிங்கள ஆட்சியாளர்கள் அடக்கியதன் விளைவாகத் தோற்றம் பெற்றதே ஆயுதப் போராட்டம். ஆயுதப் போராட்டத்திற்குத் தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் ஆதரவு வழங்கினார்கள் என்று கூறுவதற்கில்லை. இன்னமும் அகிம்சை வழியில் நின்று சிங்கள ஆட்சியாளர்களோடு பேசிப்பார்ப்போம் என்பது அவர்களின் கருத்தாக இருந்தது. அவர்களின் அத்தகைய முடிவுக்கு அவர்கள் அகிம்சை மீது கொண்டிருந்த அசையாத நம்பிக்கையே காரணமாகும்.

எனினும் அவர்களின் கருத்தை சோதித்துப் பார்ப்பதற்கு கால அவகாசம் கிடைக்கவில்லை. அத்தகையதொரு கால அவகாசம் கிடைத்தி

**விதுரன்**

ருந்தால், அகிம்சை வழியில் தீர்வு கிடைத்திருக்குமா என்பது விவாதத்திற்குரியது. எனினும் இது விடயத்தில் தீர்வு இல்லாமல் விவாதிக்க முடியுமே ஒழிய அதனை யதார்த்தத்தில் கருதுகோள் அடிப்படையில் பரிசோதித்துப் பார்க்க முடியாது.

எனவே அகிம்சை வழி நின்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்க முடியும் என்ற விவாதம் காலம் கடந்து விட்டதொன்றாகும்.

## ஒற்றுமையில்லாத துர்ப்பாக்கிய நிலை

பாரதத்திற்கு விடிவு தேடிக் கொடுத்த அண்ணல் காந்தி ஆட்சிப் பீடத்தில் அமரவில்லை. அதனை அவர் விரும்பவும் இல்லை. அதனால் அவர் பாரதத்தின் தேச பிதாவாகப் போற்றப்படுகிறார். அதே வேளை இந்தியாவிற்கு சுதநதிரம் கிடைத்த போது காந்தி அந் நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்று இருப்பின் தேசபிதா என்ற உயரிய பதவி அவரிடம் இருந்து பறிக்கப்பட்டிருக்கும். சாதாரண அரசியல்வாதிகளுக்குரிய விமர்சனங்கள் காந்தியையும் பீடித்திருக்கும்.

ஆனால் அகிம்சையில ஆழமான நம்பிக்கை கொண்ட காந்தி தன்னை பாரததேசத்திற்கு அர்ப்பணித்தார். அதனால் அவர் பதவிகளைத் துறந்தார். அவரின் துறவு உலகத்தால் இன்று வரை போற்றப்படுகிறது.

அத்தகையதொரு தலைமை ஈழத்தமிழருக்கு இருக்கவில்லை என்பது ஓர் குறையாக இருப்பினும் மறுபுறத்தில் காந்தியின் அகிம்சையை மதித்த வெள்ளையன் போல் தமிழர்களின் அகிம்சையை மதிக்கும் சிங்களவர்கள் இல்லையே என்ற கருத்தும் எதிரொலிக்கவே செய்கிறது.

எதுவாயினும் அண்டை நாடான இந்தியாவில் பல்லின மக்கள் வாழுகின்ற போதிலும் அங்கு ஒலிக்கின்ற "வந்தேமாதரம்" என்ற பாரத அன்னைக்கு வந்தனம் செலுத்தும் பாங்கு சிறிய நாடான இலங்கையில் இல்லை என்பதை சகல இன - மதத் தலைவர் களும் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

இது ஒரு நாட்டிற்குள்ளான ஒற்றுமையை பிரதிபலிப்பதாக இருப்பின், ஈழத்தமிழர்கள் என்ற இனத்திற்குள் ஒற்றுமை இருந்ததா எனக் கேட்டால் அதற்குப் பதில் இல்லை என்பதாகவே இருக்கும்.

ஈழத் தமிழர்கள் சிங்கள ஆடசியாளர்களால் நசுக்கப்பட்ட போதிலும் தமிழ்த் தலைவர்கள் ஓரணியில் திரண்டு உறுதியோடு போராடத் தவறினர். குறிப்பாக தமிழர்களின் தலைவர்களாக இருந்த தந்தை செல்வநாயகம், சட்ட மேதை ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகிய இருவரும் இரு துருவங்களாக இல்



லாது ஓரணியில் திரண்டு இருந்தால் - தமிழர்களுக்கு விடிவைத் தரக்கூடியது "தமிழீழம்" தான் எனக் கூறிய சுயாட்சிக் கழகத் தலைவர் நவரட்ணத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி தனக்குள் உள்வாங்கி இருந்தால் இது காறும் நடந்த உயிரிழப்புக்களையும், சொத்து இழப்புக்களையும், புலம்பெயர்வுகளையும் தடுத்திருக்க முடியும் என்பது பொதுவான கருத்து. இவ்வாறு தமிழ்த் தலைவர்கள் ஆளொரு பக்கமாக நின்று தமது சுயலாபம் கருதி செயற்பட்டார்களே ஒழிய தமிழ் இனத்திற்கு விமோசனம் கிடைக்க வேண்டும் என்ற பொது நோக்கில் செயற்படாத காரணத்தால், தமிழினம் இத்துணை துன்பத்திற்கு ஆளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

## இளைய தலைமையும் ஓரணியில் திரளவில்லை

எமது மூத்த தலைவர்கள் விட்ட தவறு காரணமாகவே நாம் ஆயுதம் ஏந்த வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டதாக கூறிக்கொண்ட விடுதலைப் போராட்ட அமைப்புகள் பல கூறாக செயற்பட்டது. ஆயுதப் போராட்டக் குழுக்கள் பலவாறாக இருப்பினும் அவற்றின் இலக்கு ஒன்றுதான் எனக் கருதப்பட்டதால் தமிழ் மக்கள் தத்தம் நிலைமைகளுக்கேற்ப தமது ஆதரவுகளை வழங்கினர். பாதைகள் வேறுபட்டாலும் பயணிக்கும் இடம் ஒன்று எனக் கருதப்பட்ட போதிலும் பின்னர் போராட்ட அமைப்புக்களிற்குள் எழுந்த கருத்து முரண்பாடு, காட்டிக்கொடுப்பனவு வரை சென்று ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களின் உயிர்களைக் காவு கொண்டது.

இத் துன்பகரமான செயற்பாடுகள் போராட்ட உணர்வுகளிலிருந்து தமிழ் மக்களை அன்னியப் படுத்தியதுடன் சிங்களவர்களோடு சேர்ந்து வாழலாம் என்ற கருத்துக்கும் வழிவகுத்தது. ஓர் இலட்சியப் பயணத்திற்கு இத்தகைய கருத்துக்கள் தடையாக இருந்தன என்பது மறுக்க முடியாத உண்மை.

எமது மூத்த தலைவர்கள் விட்ட வரலாற்றுத் தவறுகளே இளையவர்களை ஆயுதம் ஏந்த வைத்தது என்ற கருத்துக்கு மேலாக ஆயுதம் தாங்கிய அமைப்புகள் ஒன்று சேராததன் தாக்கம் தமிழர் பிரதேசங்களில் பெரும் அழிவைத் தந்தது.

## விடுதலைப்புலிகளுடன் அரசு சமாதானப் பேச்சு

உரிமையைக் கொடு - தமிழர்களை சுதந்திரமாக வாழவிடு எனத் தமிழ்த் தலைவர்கள் அன்று கோரிக்கை விடுத்தபோது பரிகசித்த சிங்கள ஆட்சியாளர்கள் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலமே நாட்டைக் காப்பாற்ற முடியும் என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள் எனின் அதற்குப்பின் புலத்தில் இருக்கக் கூடியதான தியாகங்களை வெறும் வார்த்தை வடிவங்களில் சொல்லிவிட முடியாது. அரசும்- விடுதலைப்புலிகளும் சம பலத்தோடு சமநிலையில் இருந்து பேசவுள்ளனர். இப்படியொரு நிலை ஏற்படுமென சிங்களத் தலைவர்கள் கற்பனையிலும் சிந்தித்திருக்க மாட்டார்கள். நாம் சிந்தித்திருக்காததெல்லாம் நடக்காது என எண்ணுவது எவ்வளவு தவறு என்பது சிங்கள அரசுகளுக்கு இப்போது நன்கு புரிந்திருக்கும்.

## தாய்லாந்தில் பேச்சு

தியாகி திலீபன் உண்ணா நோனபிருந்து 15ஆண்டுகள் நிறைவில இன்று 16ம் திகதி தாய்லாந்தில் அரசும்- விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். தாய்லாந்தில் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தை தமிழர்களைப் பொறுத்தவரை கற்பனைக்கெட்டாத ஓர் விடயமாகவே உள்ளது. அரசும் - விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், யுத்தநிறுத்தம், ஏ-9 கண்டி வீதி திறப்பு இவையெல்லாம் நிஜமா என நம்ப முடியாதிருக்கும் தமிழர்களுக்கு தாய்லாந்தில் நடைபெறும் பேச்சுக்கள் நிச்சயம் மலைப்பை ஏற்படுத்தும் என்பதில் எந்த மிகையும் இல்லை. அரச பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இன்று தாய்லாந்தின் கடற் படைத்தளத்தில் பேசவுள்ளனர்.

பத்திரிகையாளர்கள் எவரையும் அனுமதிக்காதபடி இப்பேச்சுக்கள் இடம் பெறுவதால் பேச்சுத் தொடர்பான இரகசியம் பாதுகாக்கப்படும். எனினும் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக ஆரம்ப நிகழ்வு, அதாவது மங்கள விளக்கேற்றல் தாய்லாந்தில் ஜோம் தீன் ஹோட்டலில் நடைபெறும் இதில் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இங்கு மங்கள விளக்கேற்றும் போது கைதட்டுவதே பத்திரிகையாளர்களின் பணியாக இருக்கும். தாய்லாந்து செல்வது என்பது ஈழத் தமிழர்களுக்கு அதிசயமான ஓர் விடயம் அல்ல. வெளிநாட்டு முகவர்கள் வெளிநாடு செல்ல இருக்கும் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு முதல் காட்டுவது தாய்லாந்தைத்தான்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொங்கில் பல வருடங்கள் காலங் கழித்தவர்கள் தமிழர்கள் என்பதால் அந்நாட்டில் ஏதோ ஒரு பழக்கப்பாடும் உண்டு.

## இறுதித் தீர்வு வன்னியில் எடுக்கப்படும்

தாய்லாந்தில் அரச- புலிப்பிரதிநிதிகள் பேச்சுக்களை நடத்தினாலும் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வென்பது விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையில் வன்னியில் நடைபெறும் பேச்சுக்களின் போதே எட்டப்படும்.

தற்போதைய பேச்சுக்கள் தமிழர் பிரதேசங்களில் இயல்பு நிலையை



ஏற்படுத்துவதையும், இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதையும் அடிப்படையாகக் கொண்டதாக இருக்க, நிரந்தரத் தீர்வை தலைவர் பிரபாவும் பிரதமர் ரணிலும் நேருக்கு நேர் சந்தித்து முடிவு செய்வர்.

## ஜனாதிபதியின் ஆதரவு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியலமைப்பின் பிரகாரம் முப்படைத்தள கர்த்தர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே. இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் இராணுவத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு இராணுவம் சமாதானப்பேச்சிற்கு ஒத்துழைப்பு வழங்கத் தவறுமாயின் யுத்தம் வெடிப்பது நிச்சயம். இந்



நிலையில் இராணுவத்திற்கு சமாதானமா? சண்டையா? என்ற உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகாரம் ஜனாதிபதி சந்திரிகாவிடமே உண்டு. அதனை எவரும் மறந்து விட முடியாது. எனினும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஜனாதிபதியின் ஒத்துழைப்பு உண்டென்பதும், பிரதமர் ரணிலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் புரிந்துணர்வின் அடிப்படையில் செயலாற்றுவதும் மறைமுகமான உண்மை. நாட்டின் தற்போதைய அரசியலமைப்பின்படி ஜனாதிபதியை ஒதுக்கி விட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதென்ற உண்மையை அரசு உணராமலும் இல்லை. இத்தகையதொரு நிலைப்பாட்டில் தலைவர் பிரபாவும் ரணிலும் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வை எட்டும் போது அதில் ஜனாதிபதியின் பங்களிப்பும் இருக்கவே செய்யும்.

வலம்புரி
+
சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா:- 17.00

தொழிற் பயிற்சிகள்

- Radio TV and Vedio Deck Repairing
- Motor Rewinding and Electrical wiring
- Motor Cycle and water pump Mechanisam
- Air Conditioning and Refrigeration
- City and Guilds of London exam

சகல தொழிற் பயிற்சிகளும் ஒரு வருட
முழு நேர செய்முறைப் பயிற்சியுடன
(Practical Training)
பயிற்சியளிக்கப்படும்

பயிற்சிகள் ஆரம்பம்
23-09-2002-(கிழமை நாட்களில்)
21-09-2002-(சனி,ஞாயிறு தினங்களில்)
விப[illegible]ரங்களுக்கு:-

JAFFNA TECHNICAL INSTITUTE
11/10 B, STANLEY ROAD,
(Near K.K.S Road)
JAFFNA. T.P- 021-2223335 [C/5006]

# எத்தனை ராமர்கள் இருந்தார்களோ அத்தனை ராமாயணங்களும் இருந்திருக்கின்றன!

ராமாயணம் இந்தியாவில் மட்டுமல்லாமல் இந்தோனேஷியா, வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து என்று பல கிழக்காசிய நாடுகளிலும பரவியுள்ளது. இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, மூவாயிரம் ராமாயணங்கள் இருப்பதாகக் கூறுகிறார் ஏ.கே.ராமனுஜன். சங்கப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் இவர். ராமாயணம் பற்றிய இவருடைய அரிய கட்டுரையொன்றை சமீபத்தில் படித்தேன். அதிலிருந்து

ஒரு நாள் ராமன் தன் அரியணையில் வீற்றிருக்கும் போது அவனுடைய மோதிரம் விரலிலிருந்து கழன்று கீழே விழுந்து ஒரு துளை போட்டு அதற்குள் போய் விடுகிறது. 'அந்த மோதிரத்தைத் தேடி எடுத்து வா என்று அனுமனிடம் சொல்கிறான் ராமன்.

### அனுமனின் சிறுவடிவம்

அனுமனால் அந்தத் துளைக்குள் நுழைய முடியும். அவனால் எவ்வளவு சிறிய வடிவமும் எவ்வளவு பெரிய வடிவமும் எடுக்க முடியும். ஒரு சிறிய வடிவத்தை எடுத்து துளைக்குள் செல்கிறான் அனுமன். சென்றவன் கீழே அதல பாதாளத்துக்குப் போய்ச் சேருகிறான். அது ஒரு பாதாளலோகம். அங்கிருந்த பெண்கள் அந்தச் சிறிய உருவத்தை எடுத்து ஒரு தட்டில் வைத்து பாதாளலோக அரசனிடம் கொடுக்கின்றனர். அவனுக்கோ விலங்குகளைச் சாப்பிடுவதென்றால் ஏக இஷ்டம். சாப்பாட்டு மேஜையில் உணவுகளுக்கிடையே அமர்ந்திருக்கிறான் அனுமன்.

மேலே இதற்கிடையே பூலோகத்தில் ராமனைப் பார்க்க வசிஷ்டரும் பிரம்மதேவனும் வருகின்றனர்.

''நாங்கள் உன்னோடு அந்தரங்கமாகப் பேச வேண்டும். அதை யாரும் கேட்கவோ இடையில் குறுக்கிடவோ கூடாது. சரியா?''

''சரி, பேசுவோம்'' நாம் பேசிக் கொண்டிருக்கும் போது யாராவது குறுக்கே வந்தால் அவர்களின் தலையைவெட்டிவிட வேண்டும்.

ராமன் யோசித்தான். அனுமனோ கீழே போயிருக்கிறான். அவனை விட்டால் லட்சுமணன் தான். லட்சுமணனை அழைத்து வாயிலில் காவலிருக்கச் சொல்கிறான்.

### இலட்சுமணனின் முடிவு

அப்போது அங்கே வரும் விஸ்வாமித்திர முனிவர் ராமனை உடனடியாகப் பார்க்க வேண்டும் என்று லட்சுமணனிடம் சொல்கிறார்.

''இப்போது உள்ளே செல்ல முடியாது. சிலருடன் முக்கியமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்.

''என்னிடமிருந்து எதை மறைக்கப் போகிறான் ராமன்? நான் இப்போதே உள்ளே போக வேண்டும். என்னை விடு''

''உங்களை உள்ளே விட வேண்டுமானால் அதற்கு நான் ராமனின் அனுமதியைப் பெற வேண்டும்''


''அப்படியானால் உள்ளே போய் கேள்''

## இலக்கிய நயம்

''ராமன் வெளியே வரும் வரை நான் உள்ளே போக முடியாது. நீங்கள் காத்திருக்கத்தான் வேண்டும்.

''நீ இப்போது உள்ளே சென்று நான் வந்திருப்பதைத் தெரிவிக்கா விட்டால் இந்த அயோத்தி ராஜ்ஜியத்தையே என் சாபத்தால் எரித்து விடுவேன்''

லட்சுமணன் யோசிக்கிறான். 'இப்போது நான் உள்ளே சென்றால் நான் இறந்து விடுவேன். உள்ளே போக விட்டால் முனிவர் இந்த ராஜ்ஜியத்தையே எரித்து விடுவார். ராஜ்ஜியத்திலுள்ள எல்லாப் பொருட்களும் எல்லா உயிர்களும் அழிந்து போகும். அதைவிட நான் ஒருவன்



செத்துப் போவதே மேல்' உள்ளே வரும் லட்சுமணனிடம் ராமன் என்ன விஷயம் என்று கேட்கிறான்.

''விஸ்வாமித்திரர் வந்திருக்கிறார்.''

''அவரை உள்ளே விடு''

### இராம அவதாரம் முடிவு

பிரம்மதேவனும் வசிஷ்டரும் வந்த விஷயத்தை அதற்குள் ராமனிடம் பேசி முடித்திருந்தனர். 'நீ பூலோகத்துக்கு வந்த வேலை முடிந்து விட்டது. நீ எடுத்த ராமாவதாரத்தை இத்தோடு நீ விடவேண்டியது தான். இந்த சரீரத்தை விட்டு விட்டு எங்களோடு வந்துவிடு.'' இந்த விஷயத்தைப் பேசுவதற்காகத் தான் அவர்கள் ராமனிடம் வந்திருந்தனர்.

லட்சுமணன் ராமனிடம் சொன்னான். ''ராமா... என் தலையைக் கொய்துவிடு''

''நாங்கள் பேச வேண்டியதைப் பேசி முடித்தாகி விட்டது. உன்னைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை.

''ராமா.. நீ அப்படிச் செய்ய முடியாது. உன் தம்பி என்பதால் என்னை நீ விட்டுவிட முடியாது. உன் பெயருக்குக் களங்கம் உண்டாகி விடும் உன் பத்தினியையே நீ அப்படி விட்டு விடவில்லை. அவளைக் கானகத்துக்கு அனுப்பி விட்டாய். நான் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும். எனக்கு விடுதலை கொடு ராமா''

லட்சுமணன் சேஷனின்அவதாரம். விஷ்ணு உறங்கும் நாகம்சேஷன். அவனது காலமும் முடிந்து விட்டது. ஸரயு நதிக்குள் விழுந்து அவன் உலக வாழ்வை நீத்தான்.

லட்சுமணன் தன் பூதவுடலை விட்ட பிறகு ராமன் தனக்கு இஷ்டத்துக் குரியவர்களை யெல்லாம் அழைத்து தனது புதல்வர்கள் லவனுக்கும் குசனுக்கும் முடிசூட்டி வைத்து விட்டு அவனும் ஸரயு நதிக்குள் மூழ்கினான்.

### எத்தனை இராமர்கள்

இவ்வளவுக்கும் அனுமன் பாதாள உலகில்தான் இருக்கிறான். பாதாள அரசனின் சாப்பாட்டுத் தட்டில் அமர்ந்தபடி 'ராமா ராமா ராமா' என ஜெயித்தபடியிருக்கிறான்.

இதைக் கேட்டவுடன் அரசன் 'யார் நீ'' எனக் கேட்கிறான்.

''அனுமன்''

''அனுமனா... எங்கிருந்து வருகிறாய்?

''ராமனுடைய மோதிரம் ஒரு துளையில் விழுந்து விட்டது. தேடிக் கொண்டு வந்தேன்'' அரசன் அனுமனிடம் ஒரு தட்டைக் காண்பிக்கிறான். அதில் ஆயிரக்கண க்கான மோதிரங்கள் இருக்கின்றன. எல்லாமே ராமனின் மோதிரங்கள்.

அரசன் சொல்கிறான்.... ''இதிலிருந்து உன் ராமனின் மோதிரத்தை எடுத்துக்கொள்.

எல்லா மோதிரங்களும் ஒரே அச்சில் வார்த்தது போல் இருக்கின்றன.

''எனக்குத் தெரியவில்லையே'' எனத் தலையசைக்கிறான் அனுமன்.

அப்போது அரசன் சொல்கிறான்.. ''இதில் எத்தனை மோதிரங்கள் உள்ளனவோ அத்தனை ராமர்கள் உள்ளனர். நீ பூலோகத்துக்குத் திரும்பும் போது ராமனைக் காண முடியாது. ராமனின் அவதாரம் எப்போதெல்லாம் முடிவுக்கு வருகிறதோ அப்போதெல்லாம் அவன் மோதிரம் கீழே விழும். நான் அதையெல்லாம் இந்தத் தட்டில் சேகரித்து வைத்திருக்கிறேன். நீ இப்போது போகலாம்.''

எத்தனை ராமர்கள் இருந்தார்களோ அத்தனை ராமாயணங்களும் இருந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கே இந்தக் கதை சொல்லப்படுகிறது என்கிறார் ஏ.கே.ராமானுஜன்.

பாலி, வங்காளம், கம்போடியா, சீனா, குஜராத்தி, ஜாவா, கன்னடம், காஷ்மீரம், லாவோ, மலேஷியா, மராத்தி, ஒரியா, ப்ராக்ருதம், ஸந்தால், சிங்களம், தமிழ், தெலுங்கு, தாய், திபெத் என்று ஏகப்பட்ட மொழிகளில் ராமாயணம் எழுதப் பட்டுள்ளது. சமஸ்கிருதத்தில் மட்டும் 25 விதமான ராமாயணங்கள் உள்ளன.

## சாரதியின் சாமர்த்தியம்

இலண்டன் மாநகரில் ஒரு பேராசிரியர் பல ஆய்வுகள் நடாத்தி ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பினை நிகழ்த்தினார். அவர் தனது கண்டுபிடிப்பினை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் நகரிலுள்ள கல்லூரிகள்,பல்கலைக்கழகங்கள் எல்லாம் சென்று விரிவுரைகள் நிகழ்த்த எண்ணினார்.

அவ்வாறே ஒரு நாள் தனது காரிலேயே செல்ல முடிவெடுத்து, சாரதியையும் அழை



த்துக் கொண்டு புறப்பட்டார். முதலாவதாக ஒரு கல்லூரியில தனது விரிவுரையினை ஆரம்பித்தார்.அப்போது சாரதி அனைத்து மாணவர்களுக்கும் பின்னால் இருந்து விரிவுரைகளை அவதானித்துக்கொண்டிருந்தான். விரிவுரைகளின் இறுதியில் தங்களுக்கு ஏற்பட்ட தெளிவின்மைகளை மாணவர்கள் பேராசிரியரிடம் கேட்டுத் தெளிந்து கொண்டார்கள்.

இரண்டாவதாக ஒரு பல்கலைக்கழகத்தில் தனது விரிவுரைகளை நடாத்தினார். அப்போதும் சாரதி அனைவருக்கும் பின்னாலுள்ள இருக்கையிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்தான். இவ்வாறே ஆறு இடங்களில் விரிவுரைகளை முடித்துக் கொண்டு ஏழாவது இடத்துக்கு செல்லும் போது ''ஏன் சார் நீங்கள் எல்லா இடத்திலேயும் ஒரே மாதிரியான விரிவுரையையே நிகழ் த்துகின்றீர்கள். மாணவர்களும்ஒரே மாதிரியான வினாக்களையேதொடுக்கின்றார்கள்.திரும்பத்திரும்ப கேட்டு எனக்கு எல்லாம் மனப்பாடமாகி விட்டது. ஒரு மாறுதலுக்காக இப்ப நாங்கள் போகும் இடத்தில் நான் விரிவுரைகளை நிகழ்த்துகின்றேன். நீங்கள் சாரதியாக என்னுடைய இடத்தில் இருக்க முடியுமா?'' எனக் கேட்டான் சாரதி. பேராசிரியரும் அதற்கு இணங்கி சாரதியாகவே சென்றார்.

விரிவுரைகளை பேராசிரியர் போர்வையிலிருந்த சாரதி நிகழத்த, சாரதியின் போர்வையிலிருந்த பேராசிரியர் பின்னால் இருந்து அவதானித்துக் கொண்டிருந்தார். விரிவுரைகளை முடித்துக் கொண்டு ''தெளிவின்மைகள் இருப்பின் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்'' எனக் கூறி தனது இருக்கையில் அமர்ந்தான் சாரதி.

அப்போது ஒரு மாணவன் எழுந்து எங்குமே கேட்காத கேள்வி ஒன்றினை கேட்டான். இப்படியான ஒரு கேள்வியினை சற்றும் எதிர்பார்த்திராத சாரதி உடனே தன்னை சுதாகரித்துக் கொண்டு, ''இது என்ன சின்னக் கேள்வி, இதற்குஎனது சாரதி கூட பதிலளிப்பார்'' எனக் கூறிபின்னாலிருந்த பேராசிரியருக்கு சைகை காட்டினான். அப்போது பேராசிரியர் எழுந்து அந்த மாணவனின் சந்தேகத்தினை தீர்த்து வைத்தது டன், செல்லும் வழியில் சாரதியின் சாமர்த்தியத்தினையும் பாராட்டினார்.

தொகுப்பு:- க.சுதாகர்
(கிளிநொச்சி)

## ஐந்து பெரிது ஆறு சிறிது



சீமிருகமே!
என்று
மனிதனைத் திட்டாதே
மனிதனே

எந்த விலங்கும்
இரப்பைக்கு மேலே
இன்னொரு வயிறு வளர்ப்பதில்லை

எங்கேனும்
தொப்பைக் கிளியோ
தொப்பை முயலோ
பார்த்ததுண்டா?

எந்த விலங்குக்கும்
சர்க்கரை வியாதியில்லை தெரியுமோ?
இன்னொன்று
பறவைக்கு வேர்ப்பதில்லை

எந்தப் பறவையும்
கூடுகட்டி
வாடகைக்கு விடுவதில்லை

எந்த விலங்கும்
தேவையற்ற நிலம்
திருடுவதில்லை

கவனி மனிதனே
கூட்டு வாழ்க்கை இன்னும்
குலையாதிருப்பது
காட்டுக்குள் தான்

அறிந்தால்
ஆச்சரியம் கொள்வாய்
உடம்பை உடம்புக்குள் புதைக்கும்
தொழுநோய்
விலங்குகளுக்கில்லை

மனிதா
இதை
மனங்கொள்

கர்ப்பவாசனை
கண்டு கொண்டால்
காளை பசுவைச்
சேர்வதில்லை

ஒருவனுக்கொருத்தி
உனக்கு வார்த்தை
புறாவுக்கு வாழ்க்கை

எந்தப் புறாவும்
தன் ஜோடியன்றி
பிறஜோடி தொடுவதில்லை

பூகம்பம் வருகுதெனில்
அலைபாயும் விலங்குகள்

அடிவயிற்றில்சிறகடிக்கும்
பறவைகள்

இப்போது சொல்
அறிவில்
ஆறு பெரிதா?
ஐந்து பெரிதா?

மரணம் நிஜம்
மரணம் வாழ்வின் பரிசு

மாண்டால் -

மானின் தோல் ஆசனம்
மயிலின் தோகை விசிறி
யானையின் பல் அலங்காரம்
ஒட்டகத்தின் எலும்பு ஆபரணம்

நீ மாண்டால்.....
சிலரை
நெருப்பே நிராகரிக்கும்
என்பதால்தானே
புதைக்கவே பழகினோம்

ஒன்று கேட்கிறேன்
எல்லா விலங்கும்
மனிதனுக்குப் பாலூட்டும்
எவளேனும் ஒருதாய்
விலங்குக்குப் பாலூட்டியதுண்டோ?

'' சீமிருகமே''
என்று
மனிதனைத் திட்டாதே
மனிதனே

கொஞ்சம் பொறு
காட்டுக்குள் என்ன சத்தம்....

ஏதோ ஒரு மிருகம்
இன்னொரு மிருகத்தை
ஏசுகிறது

'' சீ மனிதனே''

## இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல:— 27



**படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?**

காதல் மன்னனின் உள்ளம் கவர்ந்த நடிகை இவர். இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**'இவரைத் தெரியுமா போட்டி இல:- 27'**
**"சங்குநாதம்"**
**இல.15,வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல:— 27

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................

அனுப்புபவரின் முழுப் பெயர் :-..............................

அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

### இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 26 சரியான விடை





**நடிகை ஜோதிகா**

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 26இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

முதற்பரிசு :— ச.பதுமன்
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

இரண்டாம்பரிசு:— சி.சோதிநாதன்
பண்ணாகம்,
சுழிபுரம்.


மூன்றாம்பரிசு:— வ.ராதா
134, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-**

*ச.மதன் கொடிகாமம், கோ. இராஜேந்திரம் திருநெல்வேலி, யோ. கலாரஞ்சினி சாவகச்சேரி, ம.திவ்யா கொக்குவில், சு.கிரிதரன் சுன்னாகம், இ. சங்கீதா கொடிகாமம், சி.நவரெத்தினம் ஆனைப்பந்தி, சி.ஜெகதா கோப்பாய், சா.சர்மிகா யாழ்ப்பாணம், லோ. அனுஷலா கரவெட்டி.*

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

### உத்தித பத்மாசனம்
(Uthitha Padmasanam)



பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் கைகள் இரண்டையும் பக்க வாட்டில் அமர்த்தி உடலை மேலே தூக்க வேண்டும்.பத்மாசனம் போட முடியாதவர்கள் சாதாரண நிலையில் உட்கார்ந்து உடலை மேலே தூக்கலாம். ஆரம்பத்தில் மூச்சுபிடிக்கத் தோன்றும். சாதாரண மூச்சுடன் செய்வது நல்லது. ஒரு முறைக்கு 5வினாடி 3 முறை செய்தால் போதுமானது. பார்வை நேராக இருக்க வேண்டும். கைகளை தங்கள் சௌகரியம் போல் வைத்துக் கொள்ளலாம். கால் மூட்டுக்கள் மேல் நோக்கிச் செல்ல முயற்சிக்கவும்.








### பலன்கள்


தொந்தி கரையும், ஜீரண உறுப்புக்கள் நன்கு வேலை செய்யும். புஜம், தோல் பட்டை பலன் பெறும். அஜீரணம், மலச்சிக்கல் தீரும். நீரழிவு நோய்க்கு சிறந்த ஆசனம்.

(தொடரும்.......)





பா.கஜானன்
வயது :- 11
280, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
பத்திரிகை, வானொலி, T.V



கு.சத்தியேந்திரன்
வயது :- 13
இல:- 23, B.A. தம்பிலேன்,
யாழ்ப்பாணம்.
கிரிக்கெட், வானொலி.



A.டென்ஷில்
வயது :- 18
17/2, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
பத்திரிகை, வானொலி,
தொலைக்காட்சி




த.டயசீலன்
வயது :- 23
இல:- 23, B.A. தம்பிலேன்,
யாழ்ப்பாணம்.
கவிதை, வானொலி, T.V
பத்திரிகை



ஸ்ரீ.முரளிகிருஷ்ணா
வயது:- 13
G.P.S வீதி,
கல்வியங்காடு.
பேனாநட்பு

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 28




*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல -28**
**'சங்குநாதம்',**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

பெயர் :- ..............................
விலாசம் :- ..............................
..............................
..............................

.................. இங்கே வெட்டுக..............................

### இடமிருந்து வ ம்

(1) கடிதம் (4) குழந்தைய ஆரம்பப் பேச்சு (5) இதனை கண்ணென மதித்து செயலார் வண்டும் (6) உலோகம் (7) ஐம்பூதங்களிலொன்று

### மேலிருந்து கீழ்

(1) வாழ்வில் ஒரு திருநாள் (2) நீர்வாழ் உயிரினம்
(3) அழுக்காறு (5) ஒட்டகம் (6) கோபம்

**குறுக்கெழுத்துப்போட்டி இல.27 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**

**1.பரிபக்குவம் 4. கரிசனை 5. செல்வி 7. சம்புகம் 8. மேனி**

**மேலிருந்து கீழ்**

**1. பங்கம் 2. பஞ்சபூதம் 3. வன்சொல் 5. செங்கல் 6. விழி 7. சனி**

**பரிசு பெற்றோர் பெயர் விபரம்**

முதற் பரிசு :~ ந.சஞ்சயன்
14, அன்னசத்திர லேன்,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு :~ ப.சிவசூரியர்
ஆசிரியர்,
சங்கானை.

மூன்றாம் பரிசு :~ ஆ.அன்பரசி
பூந்தோட்டம்,
வவுனியா.

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.**

*S. அலக்ஷி வவுனியா,த.சோதிசிவம் நாகர்கோவில், அ.மீனலோசினி சாவகச்சேரி, க.சசீலா வட்டுக்கோட்டை, அ.தணிகாசலம் சுன்னாகம், சி.துஷ்யந்தி பாண்டியன் தாழ்வு, சா. துலக்ஷி சுண்டுக்குளி, S.இராகுலன் சங்கானை, ச.பாரதி வேலணை, M.பாக்கியம் மானிப்பாய், க. சதீபன் யாழ்ப்பாணம், ஞா.துவாரகா கைதடி, S. முகிர் வெள்ளவத்தை, S. வேந்தன் கிளிநொச்சி, R.றொபினா கொட்டகேனா.*

குறிப்பு:~
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல.28" எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 21-09-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |

# உலகமயமாக்கல் தரும் பரிசே தாய்லாந்தில் நடக்கும் பேச்சு

ஈழத்திற்கான ஆயுதப் போராட்டத்தை இரண்டு தசாப்தங்களாக நடத்திவந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் அப்போராட்டத்தை ஆயுத முனையில் அடக்குவதில் போராடிக் களைத்து விட்ட ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் தாய்லாந்தில் தொடங்கிவிட்டன. இலங்கையர்கள் இனமதபாகுபாடின்றி இதனை ஏகோபித்து வரவேற்குமதே வேளை, உலகநாடுகளும் இதில் பெரும் உற்சாகம் காட்டுகின்றன. முன்னைய சமாதானப் பேச்சுக்கள் போலன்றி இம்முறை மேற்கு நாடுகள் இதில் காட்டும் ஆர்வம் அதிகமானது. நோர்வேயின் மகிழ்ச்சி கூறித் தெரிய வேண்டியதல்ல. தாய்லாந்தின் உற்சாகமும் குறிப்பிடக் கூடிய தாகவேயுள்ளது.

யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் அப்பாடா! என்று ஆறுதல் பெருமூச்சு விடுகிறார்கள். அரைகுறையாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டவர்கள் ''இந்த அளவில்தப்பி விட்டோமே! போதும்'' என்கிறார்கள். சமாதான விரும்பிகள் மிகுந்த அக்கறையுடன்; காத்திருக்கிறார்கள். முதலாளி வர்க்கத்தினர் முறுவலிக்கிறார்கள். சமாதானத்தினால் நன்மையடைய வாய்ப்பில்லை என்று கருதுபவர்கள் மூஞ்சியை சுழிக்கிறார்கள். வேற சில பகுதியினர் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நீண்டகால திட்டங்களுடன் கழுகு போல் காத்திருக்கும் மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் வரவேற்கின்றன. இலங்கை அரசாங்கத்தின் முன்னெடுப்பில் மேற்கு நாடுகளின் கூட்டுமுயற்சி இது எனலாம்.

### உலக மயமாக்கம்

உலக மயமாக்கம், ஆசியாவின் நாடுகளை பள்ளிக்கூட ஆசிரியர் போல, கையில் தடியுடன் விரட்டிக் கொண்டிருப்பது போல் தெரிகிறது.பொருளாதாரத்திலும், இராணுவ மேலாதிக்கத்திலும் முதலிடம் பெற்றுள்ள அமெரிக்கா உலகமயமாக்கலின் உந்துசக்தியாக நின்று செயற்படுகின்றது. மேற்கு நாடுகளின் தனியார்துறையினருக்கு சுரண்டலுக்கும், தனது வல்லாதிக்க நிலைப்பாட்டிற்கும் களம் அமைப்பதில் 'பயங்கரவாதத்தை அழித்தல்' என்னும் ஆயுதத்தை ஒரு கையில்ஏந்திய வண்ணம் அமெரிக்கா ஆசிய நாடுகளை உளவியல் ரீதியில் அச்சமூட்டிக் கொண்டிருக்கிறது. சோவியத் யூனியனின் மறைவுடன் உலக அரசியல் சக்திகளின் சமநிலை மாற்றம் கண்டு விட்ட சூழ்நிலையில், ஜனநாயகத்தின் வெற்றி என அதனைக் காட்டியபடியே ஒவ்வொரு நாட்டினதும் உள் விவகாரங்களில் கருத்துத் தெரிவித்துக் கொண்டும், சண்டைகளை சமாதானமாக தீர்த்து வைக்கும் பொலிஸ்காரன் போல நடித்துக்



கொண்டும், உலக நாடுகளை நேரடியாக கண்காணிக்கும் அதன் பழைய போக்கை தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறது. நன்றாகவே காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது. உலக நாடுகள் அனைத்தையும் தனது சுரண்டல் களமாகவும், சுய போட்டிச் சந்தையாகவும் மாற்றிவிடும் அவசரத்தில் செயற்பட்டு வரும் அதன போக்கின் ஒரு அம்சமாகவே இலங்கை இனப்பிரச்சினையிலும்(வெளிப்படையாக இல்லாவிட்டாலும்)தலையிட்டு வருகிறது. சுதந்திர வர்த்தக வலயங்களை அமைத்து, தொழிலாளர் சுரண்டலுக்காக நாட்டை திறந்து விட்டு, உலக மயமாக்கலுக்கு வழிவிட்டு நின்ற ஜே.ஆரின் வாரிசுகளை தேடிப்பிடித்து, தட்டிக் கொடுத்து வருகிறது. நோர்வே பெயரளவில் செய்யும் அனுசரனையின் பின்னணியில் சாணக்கியனாக நின்று தொழிற்படுகிறது. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு அளவுகோல் பாவித்து நீதிவழங்கும் நிலைப்பாட்டில் ஆப்கானிஸ்தானுக்கு அடிதடியையும், இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தையையும் அமெரிக்கா தீர்வாக முன்வைத்திருக்கிறது. உலக மயமாக்கலை வேகப்படுத்துவதற்கும், மூலதனத்தின் இயக்கத்திற்கு தடையாக நிற்கக் கூடியவற்றை அகற்றும பாரிய பணியில் தாய்லாந்தின் பேச்சுக்களை அது பெருமளவுக்கு ஆதரித்து நிற்கிறது.

உலக மயமாக்கல் என்பதற்கு அமெரிக்க மயமாக்கல் என்று அர்த்தம் கொள்ளலாமாயின் அமெரிக்கா இவ்விடயத்தில் காட்டும் ஆர்வத்தை புரிந்து கொள்வது சுலபம். சமாதானம் இலங்கை மக்களின் உடனடித் தேவையாக இருப்பினும், பொதுவில் முழு உலகத்தினதும் தேவையென்றே கருதப்படவேண்டும். தாய்லாந்தின் பேச்சுக்களுடாக நிறைவேறுவது அதுவே என்னும் பின்னணியில் நின்று அவதானிப்போமாயின், ஏற்படவிருக்கும் சமாதானத்தின் பரிமாணம் விசாலமானது எனக் கருத இடமுண்டு. முன்னைய பேச்சுக்களில் எட்டப்பட்ட தீர்வுகளுக்கு அப்பால் சென்று இனப் பிரச்சினைக்கான தீர்வு ஏற்படுத்தப் படலாம்.

### ஈழத்தமிழர் பிரச்சினை

ஐ.தே.மு. கொழும்பு மாவட்ட எம்.பி. மனோகணேசனின் சிந்தனை அடிப்படையில் அவ்வாறுதான் தொனிக்கிறது. புலிகள் மீதானதடை நீக்கப்பட்டதை வரவேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையின் அடித்தளத்தைகிளறிக் காட்டியிருக்கிறார்.

தமிழர்கள் சம அந்தஸ்துடன் நடத்தப்படாததிலிருந்து ஆரம்பித்ததே இலங்கையின் இனப் பிரச்சினை. இரண்டு தசாப்த கால யுத்தமும், இன்றைய பேச்சு வார்த்தையும் அங்கிருந்து ஆரம்பித்து தொடர்ந்து வந்தவையே! என்று அவர் கிளறிக்காட்டியுள்ளார்.

தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர் என்பதே 1956களில் தொட்டு மேடைமேடையாக பேசப்பட்டு வந்த வார்த்தைகள். அதே காலத்திலேயே தமிழர்களின் நேசசக்தியான சம சமாஜ மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் தமிழர்களுக்கு சம அந்தஸ்து தரப்படவேண்டும் என்று வாதிட்டு வந்தன. தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகள் என்று தமிழர் தரப்பில் பிரசாரம் நடத்தப்பட்டதற்கு முன்னரே, தமிழ் காங்கிரசின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது என்னும் கோட்பாட்டினடிப்படையில் அரசியலை முன்னெடுத்து வந்திருந்தார்.

### சமாதான சகவாழ்வு

மனோகணேசன் வலியுறுத்தியது போன்று தமிழர்கள் தாம் சிங்களவர்களுடன் சம அந்தஸ்தில் வைத்து நடத்தப்படவில்லை என்ற மனக்குறைகளுடனேயே போராட்ட அரசியலை ஆரம்பித்தனர். சம அந்தஸ்துடன் தாம் நடத்தப்படவில்லை என்று ஒருவரோ, ஒரு இனமோ கருதும் பட்சத்தில் அது சமாதான சகவாழ்வுக்கும், இனங்களுக்கிடையேயான அன்னியோன்னியத்திற்கும் குறுக்கே விரிந்து கிடக்கும் பாரிய தடைக் கல்லாகும். பேச்சுவார்த்தை மேசையில் சம அந்தஸ்தை அனுமதிக்காத ஒரு அரசாங்கத்திடம் மக்களின் சமாதான சக வாழ்வுக்கான திட்டங்களை எதிர்பார்க்கலாமா? இதனை இனங்கண்டு கொள்வதை விடுத்து, புலிகள் தலதாமாளிகையை தகர்த்தார்கள், ஆயுதங்களை கீழேபோட மறுக்கிறார்கள், தொடர்ச்சியாக பல கொலைகளை செய்து வந்தார்கள். அவர்கள் மீதான தடையை நீக்குவதா? என்று தர்க்க நியாயங்கள் பேசுபவர்கள் காரியத்தை நிறைவேற்றத் தகுதியற்றவர்கள். சமாதானம் ஏற்படுவதை தடுப்பவர்களாவர்.

### பரஸ்பர நம்பிக்கை

பொ.ஜ.மு. இந்த விடயத்தில் விடாப்பிடியாக இப்போதும் நின்று வருகிறது. நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் அல்லது பரஸ்பரம் நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவாவது தடை நீக்கத்தை ஆதரிக்காது விட்டமை தமிழர்களால் மறக்கப்பட முடியாதது. தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் தானே! அவர்கள் தடை செய்யப்பட்ட இயக்கமாக, சம அந்தஸ்து அற்றவர்களாக, அடிமைகள் போன்று பேச்சு வார்த்தை மேசையில் இருந்து, சொல்லக் கூடியவற்றை சொல்லி விட்டுப் போகட்டுமே! என்று வேண்டா வெறுப்புடன் அவர்கள் நினைப்பதை அவர்களின் செயல் எடுத்துக்காட்டுகிறது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இராணுவம் நடத்தும் விசாரணை போன்று பேச்சுவார்த்தையை நடத்தி விடலாம் என்று சிந்திப்பதையே இது காட்டுகிறது.

உலக மயமாக்கலின் வேகத்தோடும், தேவையோடும் அதனை முன்னெடுக்கும் தலைமையோடும் பொருந்திச் சிந்திக்காத போக்கே சமாதான நடவடிக்கைகளில் வேண்டா வெறுப்புடன் நடப்பதற்கு காரணமாக இருக்கலாம்.



ஐ.தே.மு. இத்தேசிய விவகாரத்தை கைதேர்ந்த நிபுணர்களின் போக்கில், எந்தவொரு குறுகிய சிந்தனைக்கும் இடமில்லாமல் முன்னெடுப்பது சமாதான பிரியர்களுக்கு பெரும் நம்பிக்கை தருவதாக உள்ளது. மருந்துவகைகளை வன்னிக்கு அனுப்புவதற்கே அறிக்கைகளும், ஆணைக்குழுகளும், அரச அதிபர்கள் இடமாற்றமும் என்றிருந்த காலத்து அரசியற் தலைமைகள், மாற்றங்களுக்குட்பட்டுள்ள இன்றைய சூழ்நிலையை கற்பனையிலும் கண்டிருக்க முடியாது. பொ.ஜ.மு.வின் வரட்டுத்தனமான பிடிவாதங்களுடன் ஐ.தே.மு.வின் நடைமுறைகளை ஒப்பிடுவதாயின் சமாதான முயற்சிகளினால் எவரும் தென்பூட்டப்படுவர் என்பது நிச்சயம்.

### ஜீ.எல்.பீரிஸின் அணுகு முறை

அரசின் சமாதான குழுத்தலைவர் அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் அணுகுமுறை மிகுந்த பக்குவமானதாக இருக்கிறது. முதற்கட்டத்திலேயே முக்கியமான விடயங்களை நாம் பேசக்கூடாது. கடந்தகால தவறுகளிலிருந்து நாம் பாடம் கற்க வேண்டும். உணர்வுகளைத் தூண்டும் விடயங்களை ஆரம்பத்தில் பேசப்போவதில்லை. வடக்கு- கிழக்கு மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தே ஆரம்பத்தில் பேசவுள்ளோம். பேச்சுவார்த்தை காரணமாக ஒரு இனம் தான் தோற்றுப் போய்விட்டதாக உணராத நிலையை உருவாக்கவேண்டும். சமாதான முயற்சிகளால் நன்மை கிட்டுவதாக மக்கள் உணர வேண்டும் என்று விளக்கியிருக்கிறார். இங்கே தர்க்கவாதங்களுமில்லை. பிடிவாதங்களுமில்லை. கட்சிச் சண்டைகளுமில்லை. பேரினவாத கண்ணோட்டமும் இல்லை. சிறிது சிறிதாகவும், கட்டம் கட்டமாகவும் பேச்சுக்களை நகர்த்தி, மேற்கொண்டிருக்கும் பொறுப்பை வெற்றிகரமாக நிறைவேற்றும் சாணக்கியம் மட்டும் தொனிக்கிறது. விடுதலைப் புலிகளின் சிந்தனைப் போக்கை அனுசரித்தும், ஆய்வு செய்தும் போகும் தன்மையும் வெளிக் காட்டப்படுகிறது.

**சர்வன்**

முக்கியமாக, சண்டையின் கோரத்தை தாங்கமுடியாத வாக்காளர்கள் சமாதானத்தை அடைய வேண்டும் என்று எடுத்த முடிவும், பதவி கிடைத்தபின் வார்த்தை ஜாலங்களினூடாக அந்த வாக்காளர்களை ஏமாற்ற விரும்பாத தலைமையும், நேர்மையான சமாதான முயற்சிகளை என்றுமே ஆதரிப்பதாக அறிவித்திருந்த 'விடுதலைப் புலிகளும், உள்நாட்டில் தமது நிலைப்பாட்டை மாற்றவுமில்லை. கைவிடவுமில்லை. அது போன்றே புறச்சூழல் மாறவுமில்லை. உலக மயமாக்கலென்ற கொள்கையை முன்னெடுப்பதில் தெற்காசியாவில் வர்த்தக வாணிப மையமொன்றைத் தேடும் மேற்கு வல்லரசுகளின் பக்குவமான செயற்பாடும் அணுகுமுறையும் கண்ணும் கருத்துமாக முன்னெடுக்கப்படும் நிலை என்னும்படியாக நன்முகூர்த்தங்கள் ஒன்றாக சேர்ந்திருப்பதே தாய்லாந்தின் பேச்சுக்கள் வரையாவது சம்பந்தப்பட்டவர்களை இழுத்துச் சென்றிருக்கிறது எனலாம்.

* * *

# மனையடி சாஸ்திரம்



(சென்றவராத் தொடர்ச்சி...)

கன்று எந்த இடத்தில் நின்று நீர் விடுகிறதோ, அந்த இடத்திலேயே கிணறு எடுப்பதற்கு முகூர்த்தம் செய்தால், அந்த இடத்தில் நல்ல குடிநீர் கிடைக்கும். எந்த இடத்தில் சாணம் போடுகிறதோ அந்த இடத்தில் கிணறு வெட்டினால், அங்கு கற்கள்தான் அதிகமாகக் காணப்படும்.

கிணறு எடுப்பதற்கு பல விதமான பரீட்சைகள் சொல்லப்படுகிறது. ஆனால் மேற் கூறிய முறை, நமது முன்னோர்கள் அனுபவித்து வந்த மரபு முறையாகும். இவ்வாறு கன்றின் மூலம் பரீட்சை செய்து காண்பதில் கன்று சிறுநீர் விடும் இடத்தில், கிணறு எடுத்தால் சுத்தமான ஊற்று நீர் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. கன்று சாணம் போடும் இடத்தில் கிணறு எடுக்க முயன்றால் அங்கு கற்பாறைகள் இருக்கும், அவற்றை வெட்டிக் கிணறு எடுப்பதற்கு மிகவும் அதிகமாகச் செலவாகும்.

### நான்கு வர்ணத்தாருக்குரிய மனைகள் கட்டும் திசைகள்

மனிதப்பிறவிகளுக்கிடையே சாதி வித்தியாசம் ஏதுவுமில்லை என்பது நவீன கல்வியறிவுடைய மக்கள் சொல்லி வரும் நியாயமே தவிர, நமது நாட்டில் நீண்ட நெடுங்காலமாகவே இந்த வர்ணாசிரம தர்மங்கள் நீடித்து நிலைத்து வருகின்றன. ஜாதிமத பேதமற்ற சமுதாயம் என்பது கொள்கைக் குறிக்கோளாக இருக்கிறதே தவிர, ஜாதிகள் எல்லாமே அதனதன் ஜாதியாசாரத்தை விட்டு விடவில்லை. அந்த வர்ணாசிரம தர்மங்கள் இன்றும் வேரூன்றிய நிலையிலேயே உள்ளன. அவற்றைப் பெயர்த்தெறிய முடியாமலேயே இருப்பதால், அந்தணர்களுக்கு வீடு கட்டும் திசை தெற்கிலும், க்ஷத்திரியருக்குரிய வீடு கட்டும் திசை மேற்கிலும், வைசியராகிய வணிகர்க்கு வீடு கட்டும் திசை வடக்கிலும், சூத்திரருக்கு வீடு கட்டும் திசை கிழக்கிலும், ஊர் நடுவில் நீதி மன்றம் அமையும் இடத்தை நிர்ணயம் செய்து, வாசம் செய்வோர்களாகில், புகழும் கீர்த்தியும் சௌபாக்கியங்களும் உண்டாகிச் சிறப்பாக வாழ்வார்கள்.

மேற்கூறிய நான்கு வர்ணத்தாள்களில் மனைகள் கட்டும் திசைகள் அல்லாமல் வீடுகள் கட்டினால், சமுதாயக கட்டுக்கோப்பு வலிமை இழக்க நேருமாகையால், துன்பங்களும் துயரங்களும் உண்டாகும்.

### அளவெடுக்கும் அளவுகோல்கள்

வீடுகட்டும் மனையை வீடுகட்வதற்காக அளவெடுப்பதற்கு பயன்படுத்தும் முழக்கோல்களை சாண் என்றும் முழம் என்றும் சொல்வது இந்தக் காலத்திற்கு ஒவ்வாததாக உள்ளது. இந்தக் காலத்தில் 12அங்குலங்கள் கொண்ட ஜாதி அடியின் அளவுப்படியே நான்கு வர்ணத்தார்க்கும் சொல்லிய மரங்களினால் அளவுகோல்கள் செய்து அளவு பார்க்க வேண்டும்.

தொகுப்பு
ஆசிரியர் குழு

நான்கு வித மனைகளும் முன்பு சொன்ன முறையில் 9அடிகள் குறைத்து வைக்க வேண்டும். அவ்வாறு அளவெடுக்கும் முழக்கோலானது. தனுமுஷ்டி என்று சொல்லும் ஆச்சாமத்தினால் செய்த முழக்கோலாகவிருக்க வேண்டும்.

### குடும்ப மனைகளின் திசை விபரம்

குடும்பத்தில் தாய் தந்தையர் குடியிருக்க வேண்டிய திசை தெற்கு அல்லது மேற்திசையாக இருக்க பிள்ளைகள் தாய் தந்தையர்க்கு கீழாக வடக்கிலும் கிழக்கிலும் மூத்தவருக்கு பின்புறமாக இளையவர்களின் மனைகளை படிப்படியாகக் கட்டி குடியிருப்பதானால் அந்தக் குடும்பம் விருத்தியடையும்.

(தொடரும்...)

# அர்த்தமுள்ள இந்து மதம்



இரண்டு வேஷ்டி வைத்துக் கொண்டிருப்பவன்இருபதுவேஷ்டி வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற அபிப்பிராயம் வளர்ந்தால், அது பெரிய தப்பு. வாழ்க்கைத் தரம் உயர்வது என்று சொல்லிக் கொண்டு வாழ்க்கைத் தேவைகள் நாளுக்கு நாள் மனுஷர்களுக்கு அதிகமாகிக் கொண்டே போனால், நாட்டில் தரித்திரந் தான் மிஞ்சும்.

மனுஷ்யர்களுக்கு மானம், உயிர் இரண்டையும் காப்பாற்றிக் கொள்ள மிகமிக அத்தியாவசியமானவை எவையோ அவை நாட்டில் உள்ள அத்தனை ஜனங்களுக்கும் கிடைக்க வேண்டும். அதற்காகத்தான் திட்ட ஒழுங்கு எல்லாம் வேண்டும். அப்படி வாழ வேண்டுமானால், வசதி உள்ளவர்கள்கூட, நாட்டில் இருக்கும் படியான பரம ஏழை எப்படி வசிக்கிறானோ அப்படி வசிக்கப் பிரயத்தனம் பண்ண வேண்டும். சௌகர்யம் இருக்கிறவர்களும் கூடத் தங்களிடம் பணம் இருக்கிறது என்று தேவைக்கு மேல் அதிகமான வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியாமல் இருக்க வேண்டும்.

வசதி இருக்கிறது என்று இவர்கள் பண்ணுகிற காரியங்கள் எல்லாம், அபரிகரம் என்பதற்கு விரோதம் தான். இந்தத் தோஷம் வந்து விட்டால் ஈசுவரானுக்ரகம் கிடையாது. மனுஷ்ய ஜன்மம், பிரயோஜனம் உள்ளதாக ஆக வேண்டுமானால், நமக்கு எவ்வளவு தேவையோ அதற்குமேல் ஓர் இம்மி கூட விரும்பக் கூடாது. வசதி இருக்கிறது என்றால், அதைக் கொண்டு கஷ்டப்படுகிற இதர குடும்பங்களுக்கு அந்தக் குறைச்சலான வசதியைக்கூடப் பெற முடியாதவர்களுக்கு உதவி செய்வதுதான் புண்ணியம். இதுதான் அவனுக்கு

## சம தர்மம்

மோட்சத்தை அளிக்கும்.

இது தெரியாமல், வசதி இருக்கிறவர்கள், தேவைக்கு மேல் பட்டுப்புடைவை, பட்டு வேஷ்டி என்கிற தோஷத்தை அதிகமாக இப்போது பண்ணிக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கம்; அந்தச் சமயம் இவர்களைப் பார்த்து வசதி இல்லாதவர்களும் கூட கடன் வாங்கியாவது அவற்றை வாங்க வேண்டும் என்று கடனாளியாகி அநேக உபத்திரவங்களுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

பட்டுப்புடைவையைப் போலத்தான் வைர ஆபரணங்களில் உள்ள ஆசை. இதில் போடுகின்ற பணம் வீண். 'கந்யாம் கநக ஸம்பந்தாம்' என்று பெண்ணைக் கொடுக்கும் போது ஸ்வர்ணம் கொடுப்பது என்கிற வழக்கம் இருந்திருக்கின்றது. தங்கத்தில் போடுகிற பணமாவது பிரயோஜனப்படுகிறது. வைரத்தில் பிரயோஜனம் இல்லை. உபத்திரவம் இருக்கிறது.

ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் எல்லாம் யாரும் காப்பி சாப்பிட்டது இல்லை. குடிசையில் தான் இருந்தார்கள். காதில் பனை ஓலைதான் போட்டுக் கொண்டிருந்தார்கள். கேழ்வரகுக் கூழோ கஞ்சியோதான் சாப்பிட்டார்கள். ஏழைகளோ, பணக்காரர்களோ எல்லோரும் ஒரே மாதிரியாகத்தான் இருந்தார்கள். நாம் பட்டுத்துணி உடுப்பது இல்லை. காப்பி குடிப்பது இல்லை என்று சங்கல்பம் செய்து கொண்டு விட்டால் இப்போது ஒரு குடும்பத்துக்குச் செலவாகிறதைக் கொண்டு, ஐந்து குடும்பங்கள் வாழ முடியும். தேவையை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகப்படுத்திக் கொள்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு சாந்தி ஏற்படாது. சௌக்கியம் ஏற்படாது. தரித்திரம், துக்கம் எல்லாந்தான் உண்டாகும்.

பட்டுப் புடைவையில் காசு போட வில்லை என்றால், காப்பிக் கொட்டையில் காசு போடவில்லை என்றால், எல்லாக் குடும்பங்களும் முன்னுக்கு வந்துவிடும். குடும்ப சௌகரியத்திற்காக மட்டும் சொல்லவில்லை. பட்டுப்புடைவையினால் வருகிறபாவங்கள் நமக்கு

**கவிஞர் கண்ணதாசன்**

இல்லை என்றால், மோட்சத்திற்குச் சிரமங்களே இல்லாமல் போகும். அஷ்டாங்க யோகத்தின் முதல் அங்கமே அஹிம்சை, அபக்ரகம் இவை எல்லாம் தான். ஒரு பிராணிக்குக் கூட நம்மால் ஹிம்சை உண்டாகக் கூடாது. நம்முடைய தேவைக்கு மேல் ஒரு துரும்பைக் கூட, வசதி இருக்கிறது பணம் இருக்கிறது என்பதற்காக வாங்கிக் கொள்ளக் கூடாது. பணம் இருக்கிறது என்றால், இன்னும் சிலகுடும்பங்களுக்கு உதவி செய்யலாம். இப்படிச் செய்தால் தான் செய்வதற்குப் பிரயத்தனமாவது செய்தால் தான் சீக்கிரத்திலே ப்ரம்ம சாட்சாத் காரத்தைப் பெற முடியும். அஷ்டாங்க யோகத்தின் முதல் படியே இது தான். முதல் படியை மிதிக்காமல் மேல் படிக்குப் போக முடியாது என்பதற்காக இதைச் சொன்னேன்.

## குட்டித் தேவதைகள்

இந்து மதத்தின் பேரால் தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் ஏராளமான சிறு தேவதைக் கோயில்கள் இருக்கின்றன.

இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இத்தகைய கோவில்கள் இருந்தாலும், தமிழகத்தில் உள்ளது போல் எல்லாக் கிராமங்களிலும் இருக்கவில்லை.

ரோமானிய நாகரிகத்திலும் ஒரு காலத்தில் இத்தகைய சிறு தேவதை நம்பிக்கை இருந்தது.

மழைத் தேவதை, காதல் தேவதை என்று பல தேவதைகள் வணங்கப்பட்டன.

அந்தக் காலத்தில் கிறிஸ்தவர்களிடையேயும் இந்த நம்பிக்கை இருந்ததாகத் தெரிகிறது.

கிரேக்க நாகரிகத்தில் இத்தகைய தேவதைகள் வணக்கம் பெருமளவில் இருந்தது.

ஆனால், அவையனைத்தும் மூல தெய்வத்தின் கிளைகளாகவும், தூதுவர்களாகவுமே வர்ணிக்கப்பட்டிருந்தன.

'ஊருக்கொரு தேவதை' என்ற நிலையில், இந்து சமயத்தைத் தவிர, வேறு எந்தச் சமயமும் சிறுதேவதை நம்பிக்கை கொண்டதில்லை. (தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

## சமதானி வளம்படுத்தல் (Isotopic Enrichment)

இயற்கையாகப் பெறப்படும் யூரேனியத்தில் கிட்டத்தட்ட 0.7% அளவு மாத்திரம் பிளவு படக் கூடிய யூரேனியம் - 235 இருக்கும்; மீதியாக இருப்பதெல்லாம் பிளவுபடமாட்டாத யூரேனியம் - 238 ஆகும். ஒரு அணு குண்டு செய்வதற்கு யூரேனியத்தில் கிட்டத்தட்ட 90% அளவு யூரேனியம் - 235 உள்ள வரை வளம்படுத்தப்பட வேண்டும். இச் சமதானி வளம்படுத்தல் மிகவும் இரகசியமாக ரெனசீ (Tennessee) மாநிலத்தில் ஒக் ரிட்ச் (Oak ridge) எனுமிடத்தில் மேற்கொள்ளப்பட்டது. இவ் யூரேனியம் பிரித்தெடுப்பின்போது பெறப்பட்ட சமதானிகள் இரசாயன ரீதியாக சர்வ சமனாக இருந்ததால், அவற்றை இரசாயனத் தாக்கங்கள் மூலம் பிரித்தெடுக்க முடியாமல் இருந்தது. இதனால் இப்பிரித்தெடுப்பானது எல்லா யூரேனியத்தையும் எளிதில் ஆவியாகக் கூடிய யூரேனியம் ஹெக் ஸா.்.புளோரைட்டு (Uranium hexafluoride) ஆக மாற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதனுடைய மூலக்கூறுகளில், யூரேனியம்-235 சமதானியைக் கொண்ட மூலக்கூறுகள், யூரேனியம் - 238 சமதானியைக் கொண்ட மூலக்கூறுகளை விட சிறிது பாரம் குறைந்ததாகவும்; அதனால் சிறிது விரைவாக அசையக் கூடியதாகவும் இருந்தன. இவ் யூரேனியம் ஹெக் ஸா.்.புளோரைட்டின் ஆவியானது ஆயிரக்கணக்கான, தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட நுண்துளைகளினூடு செலுத்தப்பட்டது. இதன்போது யூரேனியம் 235 இனைக் கொண்டுள்ள மூலக்கூறுகள் சிறிது வேகமாக நகர்ந்ததால், ஏனைய மூலக்கூறுகளிலிருந்து தூர விலக்கப்பட்டு பிரித்தெடுக்கப்பட்டது. விஞ்ஞானிகள் இறுதியில் 15Kg அளவு, போதுமான அளவு யூரேனியம்-235 இனைக் கொண்டுள்ள, வளம்படுத்தப்பட்ட யூரேனியத்தைப் பெற்றுக் கொண்டனர். இது ஒரு சிறிய வெடிதகு உபகரணம் செய்யப் போதுமானதாக இருந்தது.

## புளூத்தோனியம் தொகுப்பு (The Synthesis of Plutonium)

ஒக் ரிட்ச் (Oak Ridge) இல் யூரேனியம் பிரித்தெடுக்கும் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை, கிளென் ரீ.சீபோர்க் (Glenn T. Seaborg) எனும் விஞ்ஞானியின் தலைமையில், இப் பிளதகு சமதானி பெறும் பிரச்சினை, வேறு மார்க்கத்தில் அணுகப்பட்டது.

யூரேனியம் - 238 ஆனது நியூத்திரன்களால் மோதடிக்கப்படும் போது பிரிய மாட்டாது. ஆனால் இம் மோதடிப்பின்போது நெப்ரியூனியம் (Neptunium, Np) எனும் புதிய மூலகம் பெறப்பட்டது. அத்துடன் இப்புதிய விளைவு உடனடியாக புளூத்தோனியம் (Pu) எனும் இன்னோர் புதிய மூலகமாக உடனடியாக பின்வருமாறு தேய்வடைந்தது.

$$^{238}_{92}U + ^{1}_{0}n \rightarrow ^{239}_{92}U$$

$$^{239}_{92}U \rightarrow ^{239}_{93}Np + ^{0}_{1-}e$$

$$^{239}_{93}Np \rightarrow ^{239}_{94}Pu + ^{0}_{1-}e$$

இப்புளூத்தோனியம் - 239 எனும் சமதானி பிளவுபடக் கூடியதென கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் இதுவும் அணுகுண்டு தயாரிப்பதற்கான ஒரு பொருத்தமான சமதானியென இனம் காணப்பட்டது. வாஷிங்டன் (Washington) மாநிலத்தில் ஹன் போட் (Hanford) எனுமிடத்தில், புளூத்தோனியம் தயாரிப்பிற்காக தொடர்ச்சியான பாரியதாக்கிகள் (Reactors) நிறுவப்பட்டு புளூத்தோனியம் - 239 பெறப்பட்டது.

**கலாநிதி.நா.சிவயோகன்**
**பௌதிகவியல் துறை**
**யாழ். பல்கலைக்கழகம்.**

## அவதித் திணிவு (Critical Mass)

பிளதகு திரவியமொன்று சங்கிலித் தாக்கத்தை நிலை நிறுத்த ஏதுவாக, ஒரு குறிப்பிட்ட ஆகக் குறைந்தளவு (இதையே அவதித் திணிவு என்பர்) திரவியங்கள் ஒன்றாக சேர்க்கப்பட வேண்டும். ஏனெனில் ஒரு பிளவின் போது வெளிவிடப்படும் நியூத்திரன்கள், அத்திணிவை விட்டுத்தப்புவதற்கு முன், இன்னோர் பிளதகு கருவைச் சந்திப்பதற்குரிய சந்தர்ப்பம் போதுமானதாக இருப்பதற்கு, போதுமான அளவு பிளதகு கருக்கள் இருக்க வேண்டும். யூரேனியம் - 235 இற்கு இவ் அவதித்திணிவு கிட்டத்தட்ட 4Kg ஆகும். ஒரு அணுகுண்டை உருவாக்குவதற்கு தனித்தனியான குறைந்தளவு திணிவுகள் பயன்படுத்தப்பட்டன. இவ் உப அவதித் திணிவுகள், பின்னர், கருவெடிப்பின் தொடர்ச்சியான சங்கிலித் தாக்கத்தைத் தூண்டுவதற்கு பலவந்தமாக ஒன்றாக்கப்பட்டன.

## அழிவின் ஆரம்பம்

1945ஆம் ஆண்டு யூலை மாதமளவில், ஒரு அணுகுண்டு பொருத்துவதற்கு தேவையான அளவு புளூத்தோனியம் உருவாக்கப்பட்டது. முதலாவது அணு குண்டு புதிய மெக்ஷிக்கோ (New Mexico) மாநிலத்தில் அலமோகோடோ (Alamogordo) எனுமிடத்திற்கு அருகிலுள்ள பாலைவனமொன்றில் 1945ஆம் ஆண்டு யூலை மாதம் 16ஆம் திகதி பரிசோதிக்கப்பட்டது. இப்பரிசோதனை அணுகுண்டு வெடிப்பின் போது வெளிவிடப்பட்ட வெப்பமானது குண்டு வைக்கப்பட்டிருந்த 30 மீட்டர் உயரமான உருக்குக் கோபுரத்தையும், அவ்விடத்தைச் சுற்றியிருந்த பல ஏக்கர் கணக்கான மண்ணையும் அப்படியே ஆவியாக்கிவிட்டது. அவ்வெடிப் பின்போது வெளிவிடப்பட்ட ஒளியானது எவருமே பார்த்திராத அளவு பிரகாசமாக இருந்தது.

சில விஞ்ஞானிகள் அவ் வெடிப்பின் போது ஏற்பட்ட விசையினால் மிகவும் பயந்து, இக்குண்டு யப்பானுக்கு (Japan) எதிராகப் பயன்படுத்தக்கூடாது என வாதிட்டனர். அணுகுண்டு உருவாக்கத்தில் மிகவும் பங்காற்றிய லியோ சைலாட் இனது தலைமையில் பல விஞ்ஞானிகள் இக்குண்டின் சக்தியை எவருமே வசிக்காத ஒரு இடத்தில் செய்து காட்டினால் போதுமானது என வாதிட்டனர். ஆனால், இக் குண்டின் மகிமை பிரபலமாவதற்கு முன்னும், யப்பானின் தாக்குதலால் ஏற்படவிருந்த இலட்சக் கணக்கான உயிர்ப் பலியையும் நினைத்துப் பயந்த அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஹரி S. ரூமான் (Harry S. Trumann), இக் குண்டுகளை யப்பானின் நகரங்களில் போடும் படி உத்தர விட்டார்.

"குட்டிப் பையன்" (Little Boy) என அழைக்கப்பட்ட யூரேனியம் அணுகுண்டொன்று ஹிரோஷிமா (Hiroshima) எனும் நகரின் மீது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி போடப்பட்டது. இதன் போது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கருகிப் பலியானார்கள். இதன் பின் மூன்று நாட்களின் பின் "குண்டு மனிதன்" (Fat man) என அழைக்கப்பட்ட புளூத்தோனியம் அணுகுண்டு ஒன்று நாகசாகி (Nagasaki) எனும் நகரத்தில் போடப்பட்டது. இக் குண்டினாலும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். இவ் இரு அணு குண்டுகளால் எற்பட்ட தாக்கத்தினால் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி யப்பான் சரணடைந்ததுடன் இரண்டாம் உலகப் போர் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டது. இருந்தாலும் யப்பானிய மக்களில் அணுகுண்டால் ஏற்பட்ட பாதிப்புகள் இத்தனை வருடங்களின் பின்னும் ஓயவில்லை. எனவே நாமும் அணுகுண்டுப் பாவனைக்கு எதிராகக் குரல் கொடுத்து எதிர் காலத்தில் இது போன்றதொரு பாரிய அழிவைத் தடுப்போம்.

**இவ்வாரப் புதிர் 14**

நான் கடைக்குச் சென்ற போது என்னிடம் ரூபா நோட்டுக்களும் 20சதக் குற்றிகளுமாக் மொத்தம் 15 ரூபா இருந்தது. திரும்பி வந்த போது, ஆரம்பத்தில் என்னிடம் எத்தனை 20சதக்காசுகள் இருந்ததோ அத்தனை ரூபா நோட்டும், ஆரம்பத்தில் எத்தனை ரூபா நோட்டுக்கள் இருந்தனவோ அத்தனை 20 சதக் காசுகளும் இருந்தன. எடுத்துச் சென்ற பணத்தில் மூன்றில் ஒரு பங்கை நான் திருப்பிக் கொண்டு வந்தேன்.

நான் கடையில் செலவு செய்தது எவ்வளவு?

சரியான விடையைக் கூப்பனில் எழுதி 20.09.2002 இதற்கு முன்னர்

பத்திராதிபர், யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா.விலங்கியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக் அனுப்பிவைக்கவும்.

சரியான விடை எழுதும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா வழங்கப்படும்.

***புதிர் இல.11***

**சரியான விடை :5பேர்**
**எந்தவொரு கழகத்திலும் அங்கத்தவர் அல்லர்.**

*சரியான விடை எழுதி அனுப்பியோரில் பரிசு பெறும் அதிர்ஷ்ட சாலிகள.*

1. **அருந்ததி சிவக்கொழுந்து**
   **299, பலாலி வீதி,**
   **திருநெல்வேலி தெற்கு,**
   **திருநெல்வேலி.**
2. **மாலா நாகராசா**
   **70, காரைக்காட்டு லேன்,**
   **வண்ணார்பண்ணை,**
   **யாழ்ப்பாணம்.**
3. **கந்தையா ரஜீவன்,**
   **யாழ்.மல்லாகம்.**
   **மகா வித்தியாலயம்,**
   **மல்லாகம்.**

புதிர்றகான பரிசுப் பணத்தை அன்பளிப்புச் செய்வோர்,

**நெல்லியடி சனசமூக நிலையம்**
நெல்லியடி,
கரவெட்டி.

**குறிப்பு: பரிசுப் பணத்தினை வார நாட்கள் தோறும் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை விஞ்ஞான பீடாதிபதி அலுவலகம் யாழ். பல்கலைக்கழகம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 14**

சரியான விடை :-..........................................
முழுப்பெயர் :-..........................................
முகவரி :-..........................................
..........................................
கையொப்பம் :-..........................................

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்

'இம்முறை இவர் பிழைக்க மாட்டார்' என்றே எல்லோரும் அஞ்சினர். வைத்தியர்கள் எச்சரித்தும் அவர் விட்டுக் கொடுப்பதாக இல்லை. 'உயிரை விட்டாலும் உண்ணாவிரதத்தை விட மாட்டேன்' என்று மகாத்மா உறுதியுடன் இருந்ததால் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். உயிருடன் இருக்கும் போதே கணவரைப் பார்த்துவிடட்டும் என்று அதிகாரிகள் கஸ்தூரிபாவை விடுவித்தனர்.

படுக்கையின் அருகில் வந்து நின்ற கஸ்தூரிபாவை அரைக் கண் திறந்து பார்த்தார் காந்தி. அந்தப் பார்வையின் அர்த்தம் அன்னைக்குப் புரிந்து விட்டது. ''அவர்களாகவேதான் என்னை விடுதலை செய்தார்கள். உங்களிடம் வர வேண்டும் என்று நான் கேட்கவில்லை'' என்றார் மன்னிப்புக் கோரும் குழந்தையைப் போல். மகாத்மா லேசாகச் சிரித்தார்.

''கஸ்தூரி, உன் மன உறுதியை நான் சந்தேகிக்கவில்லை. இருந்தாலும் நீ தைரியமாக இருக்க வேண்டும். இம்முறை நான் பிழைக்க மாட்டேன் என்றே தோன்றுகிறது. உன்னைப் பார்ப்பதற்காகத்தான் உயிரைப் பிடித்து வைத்திருந்தேன். என்னுடைய உடைமைகளை எல்லாம் எடுத்து மருத்துவ மனையிலுள்ள பணியாட்களுக்கு ஆளுக்கொன்றாகக் கொடுத்து விடு'' என்று ஈனக் குரலில் மகாத்மா கூறியதும் குமுறி வந்த அழுகையையும் அடக்கிக் கொண்டு, தம் கணவரின் பொருள்களைச் சேகரித்து அவர் கூறியபடியே அங்கிருந்தவர்களிடம் கொடுத்துவிடடார் கஸ்தூரிபா. அதைப்பற்றி அவர் சிந்தித்துப் பார்க்கவில்லை. கணவர் விரும்பினார்; மனைவி அதை நிறைவேற்றி விட்டார்.

வெளியில் அதிகப் படபடப்பு இல்லாதது போல் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் கஸ்தூரிபா பட்ட வேதனை, அவரைப்படைத்தவருக்குத்தான் தெரியும். 'கணவரை இனி உயிருடன் பார்க்க முடியாது' என்ற முடிவுக்கு அவர் வந்து விட்டார். 'ஹேராமா! நான் உனக்குச் செய்த பூஜைகள் போதவில்லையா? நான் இவருக்குச் செய்த பணிவிடைகளில் தான குறைவுள்ளதோ? மஞ்சள் குங்குமத்துடன் இவர் மடியில் நான் மடிய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேனே. அந்த ஆசை நிறைவேறாமலே போய்விடுமோ?'' என்று ஒரு மூலையில் உட்கார்ந்து, உள்ளக் கோயிலில் உறைபவனுக்குக் கண்ணீரால் அபிஷேகம் செய்து ஆராதித்துக் கொண்டிருந்தார், உத்தமியின் உண்மையான பக்தியால் மனம் குளிர்ந்த ஆண்டவன் மனமிரங்கினான். மகாத்மா விடுதலை செய்யப்பட்டார். உடனேயே உண்ணாவிரதத்தை நிறுத்தும் பொருட்டு கஸ்தூரிபாவிடமிருந்து பழரசம் வாங்கி அருந்தினார். அவர் தொடர்ந்து ஆற்றிய பணி விடைகளால் காந்தி புத்துயிரும் புது வாழ்வும் பெற்றார்.

ஒருவருடச் சிறைத்தண்டனை முற்றுப் பெறாமலேயே விடுதலை செய்யப்பட்டு விட்டதால், காந்தி அடுத்த ஓராண்டுக் காலம் அரசியலில் ஈடுபடுவதில்லை என்று தமக்குதாமே ஒரு கட்டுப்பாடு விதித்துக் கொண்டு, தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காக நாடு பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்தார். அன்னையும் உடன் சென்றார். கடைசியில் வார்தாவுக்கு அருகில் உள்ள மகன்வாடி என்ற இடத்திற்கு வந்து சிறிது காலம் தங்கினார். உப்பு சத்தியாக்கிரகத்திற்குப் புறப்பட்ட போது 'சுயராஜ்யம் கிடைத்தால் தான் சபர்மதி ஆச்சிரமத்திற்கு திரும்பி வருவேன்' என்று சபதம் செய்திருந்ததால் அவர் மீண்டும் அங்கு போக முடியவில்லை. மகன் வாடியிலேயே தங்கி கிராமக் கைத்தொழில் சங்கத்தை நிறுவும் பணியில் கவனம் செலுத்தினார்.

ஒரு நாள் கஸ்தூரிபாவுக்கு கீதையைப் படித்து அர்த்தம் சொல்லிக்கெண்டிருந்தார் மகாத்மா. பாடம் முடிந்ததும் அன்னையின் கையைத் தொட்டுப் பார்த்தார் அண்ணல். ''உன்கை ரொம்பவும் மெலிந்து போயிருக்கிறதே கஸ்தூரி. பாவம் என்னால்உனக்கு ரொம்பக் கஷ்டம், இல்லையா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்கள் அன்பு நிலைத்து இருந்தால் அதுவே போதும். எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம்.''


''என் அன்பைப் பற்றி உனக்கு ஏன் திடீரென்று சந்தேகம் வந்துவிட்டது கஸ்தூரி?''

''உங்களை வெகு நாட்களாகவே ஒன்று கேட்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன், கேட்கலாமா?''

''தாராளமாகக் கேளேன். உன்னிடமிருந்து நான் எதை மறைக்கப் போகிறேன்?''

''சென்றமுறை நீங்கள் சிறைக்குச் சென்றபோது, நான் வழக்கப்படி உங்கள் காலைத் தொட்டு வணங்கினேனே, அப்போது நீங்கள் ஏன் உங்கள் வழக்கப்படி என் தலையைத் தொட்டு ஆசீர்வதிக்காமலே போய் விட்டீர்கள்?'' அன்னையின் குரல் தழுதழுத்தது.

''அட பயித்தியம்! இதையா இத்தனை நாள் நெஞ்சின் ஆழத்தில் புதைத்து வைத்துக் கொண்டிருந்தாய்? அந்த நாள் எனக்கும் நன்றாக நினைவு இருக்கிறது. அன்று ஏதோ யோசனையில் நான் புறப்பட்டுச் சென்று விட்டேன். காரில் செல்லும்போதுதான் நான் செய்யத் தவறியதை நினைத்து வருத்தப்பட்டேன். அதனால் என்ன கஸ்தூரி? நம்மிருவருக்குமிடையே நிலவும் அன்பு அழிக்க முடியாதது. அது கடல்போல் ஆழ்ந்தும், வானம்போல் பரந்தும் தெய்வீக




சக்தியாக என்னுள் வலிமை பெற்றுவருவதை நான் உணர்கிறேன். அன்பில் உருவாகிய நம் உறவு நாளுக்கு நாள் உறுதி பெற்று, தூய்மையுற்று புனிதமிக்க பேரொளியாக என் வாழ்வை வளமாக்கி வருவதைக் காண்கிறேன். நீ இல்லையேல் நான் இல்லை கஸ்தூரி!'' உள்ளம் நெகிழ, நெஞ்சுருகக் கூறினார் மகாத்மா.

''ஏன், இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? இதற்கெல்லாம் நான் அருகதையற்றவள். நான் சாதாரணமானவள். உங்களைக் கணவனாகப் பெற்றுப் புனிதமடைந்தவள். பூவுடன் சேர்ந்த நாராக மணக்கிறேன். அவ்வளவு தான்'' பணிவுடன் பகர்ந்தார் கஸ்தூரிபா.

உணர்ச்சிமிக்க இந்த உரையாடல் உன்னத நிலையிலிருந்து படிப்படியாகக் குடும்பப் பேச்சுக்கு இறங்கி வந்தது.

''ஹரிலால் வந்திருக்கிறானே, பார்த்தீர்களா? உங்களுடன் சரியாகப் பேசினானா?'' என்று மெதுவாகப் பேச்சைத் துவக்கினார் கஸ்தூரிபா.

''பார்த்தேன், பட்டதும் படாததுமாக ஏதோ பேசுகிறான். அவன் தற்போது இருக்கும் நிலைமைக்கு நான் தான் காரணம் என்று நினைக்கிறான். அவனுடைய கோபமும் வெறுப்பும் சற்றும் குறைந்ததாகத் தெரியவில்லை. அவனுடைய பிள்ளை காந்திலால் நம்முடன் இருப்பதுகூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனையும் படிக்க வைக்காமல் நான் கெடுப்பதாகச் சொல்கிறான் . . .''

''அந்த பம்பாய்க் கம்பெனி வேலையையும் விட்டு விட்டானாம். 'பிழைப்புக்கு என்னடா செய்கிறாய்?' என்று கேட்டால், சரியாகவே பதில் சொல்லமாட்டேன் என்கிறான். அவன் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. ராஜா மாதிரி இருப்பான். இப்போ இளைத்துக் கறுத்துப் போயிருக்கிறான். சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறான். குழந்தையா? நாற்பத்தைந்து வயதாகப் போகிறது. நீங்கள் தான் அவனை வழிக்குக் கொண்டு வர வேண்டும். இங்கேயே இருக்கும்படி நீங்கள் சொல்லிப் பாருங்களேன்...'' மனைவி மன்றாடினாள்.

''நான் சொல்லிப் பார்க்கிறேன். கேட்காவிட்டால் அவன் தலை விதிபோல் நடக்கட்டும்...'' கணவர் மறுமொழி கூறினார்.

மறுநாளே மகனை தன்னறையில் அழைத்துப் பேசினார் காந்தி.

தந்தையும் தனயனும் எதிர் எதிரே உட்கார்ந்திருந்தனர். காந்தி சொன்னார்.

''இதோ பார், ஹரிலால்! நடந்ததையெல்லாம் மறந்துவிடு. நானும் எல்லாவற்றையும் மன்னித்து விடுகிறேன். என் மீதுள்ள ஆத்திரத்தில் என்னைப் பற்றி நீ தாறுமாறாகப் பேசுவதைப் பற்றிக் கூட நான் கவலைப்படவில்லை. நீ இப்படி நாடோடி போல் திரிந்து கொண்டு, நாலு பேரிடம் கையேந்தி வயிறு வளர்க்கும் அவமானத்தையும் பொறுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீ மது அருந்துவதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை. அநத வழககத்தை விட்டுவிடு. உன் மனைவி குலாப் இறந்ததிலிருந்து நீ மனமுடைந்து, மதியிழந்து இந்த அரக்கனிடம் சிக்கிவிட்டதை நான் அறிவேன். அவள் நல்ல பெண். தெய்வமாகி விட்டாள். அவள் ஆத்மா சாந்தி பெறவேண்டுமானால், நீ நல்லவனாக வாழ வேண்டும். உன்னை ஒழுங்காகப் படிக்க வைத்து ஆளாக்கவில்லை என்று என் மீது உனக்கு ஆத்திரம் இருக்கலாம். ஆனால் 'பா' என்ன பாவம் செய்தாள்? அவள் உன்னைப் பற்றி என்னிடம் அதிகம் கூறாவிட்டாலும் உன் பொருட்டு அவள் மனம் புழுங்கி மறுகுவதை நான் அறிவேன். உனக்கு அவள் மீது உண்மையான அன்பு இருந்தால் நீ இங்கேயே தங்கி விடு. அவள் கையால் சமைத்துப் போட்டு நீ சாப்பிட வேண்டும் என்று ஏங்குகிறாள்.''

ஹரிலால் ஏதோ முணு முணுத்தார். ''இங்கிருக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உனக்கும் ஒத்துக் கொள்ளாது என்றுதானே கூறுகிறாய். புகைபிடிக்காமல் உன்னால் இருக்க முடியாது என்று நான் அறிவேன்.

நீ தாராளமாகப் புகை பிடிக்கலாம். ஆனால் ஒரு நிபந்தனை. இரண்டு வாரங்களுக்கு ஒருடின் சிகரெட்டுதான் பிடிக்க வேண்டும், தெரிந்ததா?

உன் மகன் காந்தி லால் தான் இங்கு காஷியர். அவனிடம் நீ கேட்டு வாங்கிக் கொள்ளலாம்.''

ஹரிலால் கண்களில் நீர் சுரந்தது கருணையே வடிவான வரின் பேச்சைக் கேட்டு அவர் நெஞ்சம் மெழுகென உருகியது.

(தொடரும்)

பரணீதரன்

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### நாட்டின் சொத்து

கம்யூனிஸ்ட் தலைவரான ஜீவானந்தம் தொடக்கத்தில் காங்கிரசில் இருந்த போது காந்தியை சந்தித்தார்.

''உங்களுக்கு ஏதேனும் சொத்து இருக்கிறதா?'' என்று கேட்டார் காந்தி,

''தாய் நாடு தான் என் சொத்து,'' என்றார் ஜீவா.

''இல்லையில்லை, நீங்கள்தான் தாய் நாட்டின் சொத்து, '' என்றார் காந்தி.

### தயங்க மாட்டேன்

லாயிட் ஜார்ஜ் பேச்சைக் கேட்டு ஒரு பெண் ஆத்திரம் அடைந்தாள்.

''நான் உம்முடைய மனைவியாக இருந்தால் உமக்கு விஷத்தைக் கொடுத்துக் கொன்றிருப்பேன்'' என்றாள்.

''நீ என் மனைவியாகும் துர்பாக்கியம் வாய்த்திருந்தால் தயங்காமல் நானே விஷத்தைக் குடித்திருப்பேன்!''

மற்றொரு கூட்டத்தில் பேசும் போது லாயிட் ஜார்ஜ் ''எல்லா நாடுகளுக்கும் சுதந்திரம் வேண்டும்'' என்றார்.''

''நரகலோகத்துக்கு? '' என்று ஒருவன் கேலியாகக் கூச்சல் போட்டான்.

''இப்படித்தான் ஒவ்வொருவரும் தமது நாட்டுக்காகப் பரிந்து பேசிக் குரல் கொடுக்க வேண்டும்!'' என்றார் அவர்.

### கேட்கவில்லையே!

சங்கீத மேதை மொசார்ட்டிடம் ஒரு இளைஞன் வந்தான்.

''சிறந்த பாடல்களை எப்படி இயற்றுவது? '' என்று கேட்டான்.

''நீ சிறியவன். முதலில் எளிய பாடல்களை இயற்ற முயற்சி செய்!''

நீங்கள் மட்டும் பத்து வயதிலேயே சிறந்த பாடல்களை இயற்றவில்லையா?

ஆமாம் ஆனால் எப்படி இயற்றுவது என்று நான் யாரையும் கேட்டுக் கொண்டிருக்கவில்லையே!''







பங்களாதேஷின் டாக்கா நகரில் வெள்ளம் சூழ்ந்ததால், அங்கிருந்து வெளியேறிய மக்கள் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். தற்போது வெள்ள நீர் வடிந்து வருவதால் அவர்கள் தங்களது வீடுகளுக்கு திரும்பி வருகிறார்கள். இந்த வெள்ளத்தில் சிக்கி 158 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஜோஹன்ஸ்பர்க் உலக மாநாட்டு துவக்க விழாவில் பல்வேறு இசை, நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 'ட்ரம்' வாத்தியக் குழுவினர்.



கோடை வெயில் காலம் முடிந்து, தற்போது மழைக்காலம் தொடங்கியிருக்கிறது. மழைக்காலம் என்றாலே நான்கு திசைகளும் பசுமைக் கோலம் பூண்டுவிடும். பசுமைக்கு மத்தியில் பூக்கள் தங்கள் இதழ்களை விரித்து அழகிற்கு அழகு சேர்த்துக் கொண்டிருக்கும் காட்சி.



லண்டனின் மத்திய பகுதியில் நடைபெற்ற குழந்தைகள் தின பேரணியில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் பங்கேற்றனர். பேரணியில் கலந்து கொண்ட குழந்தைகள் அவரவர்களின் திறமைகளை வெளிப்படுத்தினர்.



மலேசியாவின் சுதந்திர தினம் வரும் 31 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. இதனையொட்டி, கோலாலம்பூரில், மலேசியாவின் முன்னாள் பிரதமர்கள் 3 பேர் உட்பட நான்கு பிரதமர்களின் பனிச் சிற்பங்கள் செய்வதற்கான பணிகள் முடிவடைந்து, சிற்பங்கள் தயார் நிலையில் உள்ளன.

# மௌனத்தின் தேடல்கள்

## உலகோரை மயக்கும் வாத்தியம்!
ஆங்கில ஊதுகுழல்
எதுக்குக் கண்ணே!
உன்குரலே உலகோரை
மயக்கும் வாத்தியம்.

மாருதி,
ஆவரங்கால்.

## சமாதான கீதம்...!
மனதின் வார்த்தைகளை
மௌன வாசிப்புக்களால்
மூடிவைத்திருக்கும்
சிறுமியே.....
தாள்களில் பதிந்த
கேள்விப் புதிர்களை
அறிக்கைவிட எழுந்திரு
விடை கொடுத்திடு
காலம் மலர்ந்திடவே
அமைதி தேடும்
நெஞ்சங்களில் கொஞ்சம்
பாடிக்காட்டாயோ....
நாம் வேண்டிக் கிடக்கும்
சமாதான கீதத்தை...!

ஜோடஜெஸ்ரின்,
கொழும்புத்துறை.

## ஒத்திகை!
தாய்லாந்துப் பேச்சுக்கு
வாழ்த்துப் பாடவா
இசைக் கருவியில்
ஒத்திகை பார்க்கிறாள்
மழலை இவள்!

க.ஆனந்தன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## இசைக்க ......!
இசையிலே வசமாகிப்
போனதால்
எக்காளத்தைக் கையில்
எடுத்து
இசைக்க நினைக்குதோ
அக்காளின் குழந்தை.

பரம் விதுர்சன்,
கல்வியங்காடு.

## நான் ரெடி நீங்க ரெடியா...?
மழலையின் சொல் இனிதா?
எக்காளத்தின் ஒலி இனிதா?
பரிசோதித்துப் பார்க்க நான் ரெடி
முடிவைச் சொல்ல நீங்க ரெடியா?

பரணிபாதுசன்,
நல்லூர்.

## தேடல்!
இன்னிசைக் கருவியோடு
இவள் கொண்ட நேசத்தை
இயம்புகின்றதோ - இம்
மௌனத்தின் தேடல்.

S.முகிர்,
அளவெட்டி.

## இசையில் !
இறைவனே மயங்கிய
இசையில் நீ மட்டும்
மயங்காதிருப்பாயா - என்ன....!

R. சிவா,
யாழ்ப்பாணம்.

## எதிர்காலம்!
அன்பின் சிறுமியே!
உன் எதிர்கால
வாழ்க்கைக்காக
இப்போதே இவ்
வாத்தியத்தை
பயின்று கொள்
அது உன்னை ஒரு
கலைஞனாக்கும்.

மனோ,
நாவற்குழி.

## ஆர்வம்!
இத்தனை சிறிய வயதில்
எத்தனை பெரிய ஆர்வம்
இந்தப் பிஞ்சு உள்ளத்திற்கு
இவை எல்லாம் அ[illegible]ன் செயல்.

K.சர்மி.

## மனம்!
மலராத மொட்டே
இசைக் கருவியில் மட்டும்
மனம் கட்டுப்பட்டிருப்பதால்
உலகம் உனக்கு எட்டாது
பட்டாம் பூச்சியாய்
உன் மனம்
எங்கும் வட்டமிடட்டும்.

தமிழ் இதயம்,
தென்மட்டுவில்.

## புரியாத ராகம்!
இசையொரு கலை நயம்
ஜதீஸ்வரம் அதில் சுகம்
தாயன்பது தலாட்டிலா?
இறையதன் உறைவிடமா?
வெண்மையின் வெறுமையிலும்
சிந்து விற்காய் ஏங்கியதோ?
குழல் இசையீது இனியதா....
மழலையே.

தி.ஜெயராஜ்,
நல்லூர்.

## சரித்திரமாக்கு!
சிந்தனை எதற்கு
சீக்கிரம் எழும்பு
உந்தன் கல்வியை
நீயாய்த் தொடங்கு
வந்தனை செய்து
இவ்வாத்தியம் மீட்டு
சந்ததிக்குன்னைச்
சரித்திரமாக்கு

அ.மீனா,
சாவகச்சேரி.

## பார்த்தேன் யான்!
இசையோடு லயம் சேர்த்து
இனிதான ஒரு ராகம்
திசையெங்கும் நீவீச
தித்திக்கும் என்னிதயம்...
அசைபோடும் என் மனதில்
அள்ளிவரும் நினைவுகளில்
பசையாக உன்னன்பு
பார்த்தேன் யான் இந்நாளில்

சூரியநிலா,
ஈச்சமோட்டை.

## மறந்து விட்டேன்!
இசையிலே நீ
உன்னை மறக்க
உன்னைப் பார்த்த அழகில்
நான் என்னையே
மறந்துவிட்டேன்.

க. யசிதரன்,
வவுனியா.

## வரலாறு!
அன்று குமரன்
தந்தைக்கு உபதேசித்தான்
இன்று - இச்சிறியாள்
அறியாவயதில்
இசை மீட்க முயற்சிக்கிறாள்
இவை வரலாற்று
வளர்ச்சிகளன்றோ...!


N.ஜெனார்த்தனன்,
B.A.தம்பிலேன்.

## வாழ்த்துக்கள்!
மழலை மொழியையே
இசைக்குக் குறிப்பாக்கி
இப்போதே பயிற்சியா....?
வாழ்த்துக்கள் உனக்கு.

த.பிரதீபன்,
கொழும்பு.

## இதய இன்பமே இசை!
வாழ்க்கைப் பயணத்தில்
ஆயிரம் துன்பங்கள்
உன்னை நாடிவந்து போகட்டும்
இசைக்கு உன்
இதயத்தை அடகுவைத்துப்பார்
மகளே! மறுதலைச் சொத்தாக
இன்பங்கள் ஆயிரம்
வட்டியாய் உனை நாடிவரும்.

யோ.பிராஷாந்தி,
யாழ்.பல்கலைக்கழகம்.



## மழலைக் கீதம்!
இப்போ கணனி உலகம் அல்லவா!
தானும் வளரும் வரை
காத்திருந்தால் - காலம்
வீணாக ஓடி விடும் என்றோ
இப்போதே அனைவரையும்
அழைத்துச் சமாதான செய்தி கூறி
மழலைக் கீதம் இசைக்கின்றது
மழலை.

ப.தர்மினி,
யாழ்.பல்கலைக்கழகம்.

## சொல்கின்றாயோ!
அழகான சின்ன தேவதையே
மழலைச் சொல்லை விட
இனிது வேறொன்றில்லையென
வாத்தியத்திற்கு சொல்கின்றாயோ
நீயும்.

அஹமட்,
மட்டக்களப்பு.

## லயம் பெற . . !
பிஞ்சுமனமே!
இசையில் லயித்திட எண்ணிய
ஆசைகள் எல்லாம்
வசைகள் வந்து சேர்ந்ததால்
நிர்க்கதியாகினவோ?

N. கஜோல்,
வத்தளை.

## இசை!
இசை - நீ இசை
உன் இசையிலாவது
உலகில் சமாதானம்
உருவாகட்டும்.

R.ஸ்வஸ்திகா,
யாழ்ப்பாணம்.

## சொல்வாயா...?
சின்னப் பெண்ணே!
சங்குநாதத்தின்
மௌனத்தின் தேடலில் - புகுந்து
இனிய வாத்தியத்தில் நீயும்
எதைத் தேடுகின்றாய்!
எனக்கும் சொல்வாயா...?

குமரன்.

## தயாராகும் மழலை!
இரும்பு மனம் படைத்த
சனப் பிறவிகளை
இசையால் வசப்படுத்தவா
மழலை இவள்
இசைக் கருவியோடு
மழலை மொழி பேச
தயாராகிறாள்.

கா.மகிலன்,
கொக்குவில்.

## உயிரே . . .!
உயிரே . . .!
உள்ளத்தின் உணர்வுகளை
புரிந்துகொள்ளாத
உலகத்தின் சொந்தங்களிலிருந்து
தப்பித்யோடிவிட
உன்னிப்பாய் இசை தேடுகிறாயா?
உயிரே . . .!

R.சாலினி.
யாழ்ப்பாணம்.

## சின்னக்குயிலே..!
சின்னக்குயிலே!
நீ வாசிக்கும் இக்கருவியே
உன் எதிர்காலத்தை
இசையுலகிற்கு
கொண்டு செல்லும் என்று
நம்பினாயோ நீயும்.

ஜதுஷா,
காரைநகர்.

## நம்பி விடாதே!
ஆண்களின் காதலை இவ்வுலகில்
நம்பிவிடாதே என்று பாடவா
உன் இசைக்கருவியை தயார்
செய்கிறாய் குட்டிப் பெண்ணே.

கை.சர்மிளா,
கொக்குவில்.

## சின்னக் கண்ணம்மா!
சின்னக் கண்ணம்மா!
வாத்தியத்தில் உனக்கு
ஆசையா..?
வாத்தியத்துக்கு உன் மேல்
ஆசையா...?
இரண்டையும் பார்த்ததால்
எனக்குள்ளும் ஆசை
தோன்றி விட்டதே.

ந.சாரங்கன்,
மூத்தவிநாயகர் வீதி.

## முடியாத முகாரிகள் !
மழலையே!
நாளைய விடியலுக்கு
பூபாளம் பாடவா
நீ யோசிக்கிறாய்
சற்றுப் பொறு
முகாரிகள் இங்கு இன்னும்
முழுமையாக முடியவில்லை.

நந்தன்,
புலோலியூர்.

## பிரதிபலிப்பு!
சிறுமியே!
இனிய குழலில் நீயும்
உன்னில் இனிய குழலும்
பிரதிபலிக்கப்படுவது போல்
மனித மனங்களின் பிரதிபலிப்பும்
ஒவ்வொருவரிற்கும் தெரிந்து விட்டால்
உன்னைப் போல் நானும்
மகிழ்ச்சியுடன் இருப்பேன்.

எஸ்.சுஜா,
நல்லூர்.

## மாறப் போகும் உலகம்!
யுத்தகளமாக இருக்கும்
இவ்வுலகை உன்
இசைக் கருவியால்
இசைக்களமாக மாற்றப்
போகிறாயா குழந்தாய்.

நா.ரவி, தாவடி.

## நீயே காவியமா?
கருவியோடு கன்னம்
வைத்து கதை பேசும்
மழலையே!
கவி பாடும் எண்ணத்தில்
கருவறையிலேயே நீ
காவியம் படைத்தாயோ?

கவியன்பன்,
வாதரவூர்.

மௌனத்தின்



தேடல்கள் – 28

அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கித் தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 21.09.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் – 28
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்



## வலிக்கிறதே....!

நண்பா...!
அடிப்பதும்
நீதான்
அணைப்பதும்
நீதான்
ஆனாலும்
எனக்குள்
அதிகம்
வலிக்கிறதே...!

எஸ்.எஸ்

## உறுதியோடு இரு....!

காதலியின்
மோகப் பார்வைக்காய்
காத்திருந்த நானின்று
விடுதலைப் போரின்
சுதந்திரப் போராளியாய்
எல்லையில் எதிரியின்
வரவை எதிர் பார்த்து
நிற்கின்றேன்



உன் மடியில்
உறங்கவேண்டிய நான்
உரிமைப் போர் தொடுக்க
உறுதி எடுத்துக்கொண்டிருக்கிறேன்
ஈழத்தாயின் மடியில்
உறுதியோடு நீ இரு.

வ.காந்தரூபன்.

## புரட்டிப் பாருங்கள்..!

மதுவெனும் போர்வைக்குள்
மயங்கும் மானிடரே...
காதலெனும் கடலுக்குள்
மூழ்கிடும் மங்கையரே....
வரலாற்று ஏட்டைக்கொஞ்சம்
புரட்டிப் பாருங்கள்
கடந்து வந்த பாதைகளை
திரும்பிப் பாருங்கள்

காலையில் மலர்ந்து
மாலையில் உதிரும்
பூக்களாய் போன விடிவுகள்
நிம்மதி எல்லாம்
கனியும் முன்னே
கனவாகிப் போய்விட்டன....
நிலையற்ற உலகில்
நியாயப் பணிகளுக்காய்
நீங்களும் விழித்தெழுங்கள்.

சி.இன்பராஜ், மீசாலை.

## காத்திருக்க நேரமில்லை!



காதலுக்காக
காத்திருப்புப் போல
கவிதைக்காகவும்
காத்திருக்க வேண்டும்
இரண்டுக்கும் நேரம் இல்லை
காதலுக்காக காத்திருந்து
தோற்றேன் கவலையில்லை
கவிதைக்காகக் காத்திருந்து
தோற்கும் போது
அவஸ்தை தொல்லை

பிரசவ வேதனை
குழந்தையின் பிறப்பில் மட்டுமல்ல
கவிதைப் பிறப்பிலும் இருக்க வேண்டும்
வலியில்லாமல் வந்த கவிதை
உயிரில்லாமல் போகிறது

காகிதமும் பேனாவும் இருக்கும் போது
வார்த்தைகள் வருவதில்லை
வார்த்தைகள் வரும் போது அவை
இரண்டும் இருப்பதில்லை.

தென்சீலன்.

## பிரிவு ஒரு துயரமா....?






பிரிவு ஒரு துயரமா? அது பிரியும்போது
உனக்கு புரியுமா?
உறவு என்று இருந்தால்
ஒரு நாள் பிரிவு என்பது உண்மையடா!
பிரிவை நீ சுகமாய் நினைத்தால்
ஒரு முழுமனிதன் நீயடா
மரத்தை விட்டு பூப் பிரிந்தால்
அந்த பூவுக்கேது மதிப்பு

முத்துக்கள் சிற்பிக்குள் இருப்பதால்
யாருக்கு என்னலாபம்?
தேனை விட்டு வண்டைப் பிரிக்கலாம்
கல்லில் இருந்து வைரத்தைப் பிரிக்கலாம்
ஆனால் என்னில் இருந்து உன்னை
யாராலும் எப்போதும்
என்றும் பிரிக்க முடியாது!

பிரிவை நினைத்து வருந்தாதே
உன் பிரிவு எனக்கு சோகமே - ஆனாலு
சுகமாய் தோன்றுவது ஏன்?
உடலால் தானடா நம் பிரிவு
உள்ளத்தால் இல்லையடா.

ஷாயினி,
உடுவில்.

## காற்றோடு சுவாசம்!



உன்னோடு நான்
கண்ட கனவுகள் (!)
உயிரோடு
பகிர்ந்த நினைவுகள்!
மறந்தும் மறக்க
முடியாத இன்பங்கள்!
உன்னுடன் பழகுகையில்
உண்டாகும் துன்பங்கள் (!)

உனக்குள் என்னைத்தேடி
எனக்குள் உன்னைத்தேடிய
காதலடா - நம்
காதல்!

உன் இதயத்தைத்
தொட்டுப்பார்.
அதன்,
ஒவ்வொரு துடிப்பும்
என் பெயர் சொல்லும்.

என்னவனே!
பழகிப் பார்த்த உள்ளங்களிலே
பாசத்துடன் பழகியவன் நீ...!
அதனால் தானே
பாசத்திற்கு - உயிர்
கொடுத்து - பத்திரமாய்
பாதுகாக்கின்றேன்!

காதல் என்றால்
என்னவென்று
புரியவைத்தவன் நீ...!

ந. நிஷா,
அனலை-6.

## புரியாதா என் அன்பு!

என் இதயத்துடிப்போ உன்
வார்த்தைகள் தான் எனும் போது
உனக்கே புரிந்திருக்கும்
கண்ணே! என் இதயமே
உன் உதடுகள் தான் என்று.......!

என் கவிதைகளின் கருப்பொருளே!
என் கண்களின் ஒளியே!
புரியாத என் அன்பு?
அறியாமை என் சோகம்
காதல் ஒரு இன்ப வேதனை
என்றுதான் நினைத்தேன்
நினைக்கவில்லை அதுவே
ஆலகால விஷமாகும் என்று.....!

மௌனமாய் அழுகிறேன்
மனதிலவளே!
உன் பிரிவு எனும் வேதனையால்
போகுதடி என்னுயிர்
சீக்கிரம் வந்து காப்பாற்றடி
(உன்)என் உயிரை........!

உன்னைப் பார்த்த பின்பு தான்
நான் கவிதை எழுதக்கற்றுக்கொண்டேன்
இன்று கவிஞனாகி நிற்கும்
கவிதை எழுதுகிறேன் உனக்காக.

T. [illegible],
நல்லூர்.

## இதயத்தின் குமுறல்!





அழிந்து விடாதோ?
சித்திரக் காதற் செவிலியே
இங்கே பசியால் அழுத உன்
பச்சைக் குழந்தையை
பாற்கடலுக்குள் மூழ்கடித்தாயே
உனக்குத் தெரியுமா ஒரு நாள்
உந்தன் அழகுப் பெயரை
யாரோ! கொஞ்சம்
அழுத்தி உச்சரித்ததற்காய்
அழுதிருக்கின்றேன் அன்பே பார்
என் அமுத சுரபிகள்
பட்டினி கிடப்பதைப் பார் பார்!
அவற்றில் உப்புக் கசிவுகள்

காலங்காலமாய்க் காத்திருந்து
நம் காதல் தூரிகை
கடைசியில் வரைந்தது
கன்னங்களில் சில கண்ணீர்க் கோடுகள்
கண்ணீர் விழுந்து கரைக்கும் என்றா
உன் கண்மை தொட்டு
நான் கவிதை எழுதினேன்

நீயழுங் கண்ணீரில் நிலவே
எந்தன் ஆயுள் ரேகை

ஊற்றெடுக்கின்றன
செல்லப் புறாவே திரும்பிப் பார்
உன் பல்லாங்குழிக்குப் பரல்களாக
என் கண்ணீர்த்துளிகள்
காத்திருக்கின்றன
மதுவனப் பூச்சிகளின் மாலையே
இந்த உதடுகள் திறவா
ஊமைக் குமிழி
உன் பெயர் சொல்லியே
உடைந்து போகட்டும்.

வாசகன்.

## பயங்கரவாதி நீ...!



சற்றுமுன்
அவள் நடந்துபோன தடயம்
எதுவுமின்றி
அமைதியாய்க் கிடக்கிறது வீதி ஆனால்
அதிவேகப் புகையிரதம் போன
தண்டவாளம்போல்
அதிர்கிறது என் இதயம்
கண்களால் என்னை வீழ்த்தினாய்
பட்டப்பகலில் இதயத்தில்
கன்னம் வைத்தாய்
முத்தம் எனும் பெயரில் முழுவதுமாய்
என்னை ஆட்கொண்டாய்
ஆனால் இராணுவத்தினரோ
உன்னை விட்டு விட்டு
யார் யாரையோ பயங்கரவாதியென
கைதுசெய்கின்றனர்.

ஜி. ரிஷான்,
கல்வியங்காடு.




இளமைத்துடிப்பில் நீ
இன்னது செய்வதறியாது
இழி நிலைக்கு செல்கின்றாய்
இனியாவது விழித்தெழு


தட்டிக் கேட்க ஆள் இல்லையென்று
தண்ணியடித்துத் தள்ளாடி
தன்மான வாழ்வை - நீ
தலை கீழாக்குகின்றாய்
நாகரிகம் என்று சொல்லி
நங்கையரைக் கேலி செய்து உன்
தங்கையரைத் தலை குனிய வைத்திருக்கிறாய்

சற்று சிந்தித்துப்பார் எம்
சமூகம் எங்கு செல்கிறதென்று
தமிழனாய்ப் பிறந்த நீ
தன்மானத்தை இழக்கலாமா?

விழித்தெழு - நீ
வீறுநடை போடு
வீரத்தமிழ் மண் - உனை
வாஞ்சையோடு வரவேற்கும்.

முல்லை முருகன்.

## சிறகடிக்கும்



உன் இதயத்தால் என்னை
சிறை பிடித்தவளே இன்று
நீ சிறைக்குள்ளே எனக்குள் நீ
உனக்குள் நான் எமக்கு சிறையா?
புனித உறவைப் புதைக்கநினைக்கும்
மனிதர்களே நம் காதல்
சிறைக்குள்ளே சிதறடிக்கப்படாது
சிறகடிக்கும்....

எஸ்.கவிதரன், சண்டியூர்

## ரெலிபோன் குயிலே...!



கேட்ட...
நாளிலிருந்து......
தொலைத் தேனடி
என்.........
இதயத்தை
உன்
இதய.......
சாம்ராஜ்ஜிய....
வலயத்தினுள்.........

அன்பே..........
தொலைவிலிருந்த
உன் குரலை
தொலைபேசியில்

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

## சுவாசிப்பு!

ஏறத்தாழ
நானும்
ஏமாற்றப்பட்டவனே!
நான்
உண்மையிலே
இறந்துவிட்டேன்!
ஆனால்
உலகம் சொல்கிறது
நான்
உயிருடன் உள்ளேன்
என்று!
ஏனெனில்
விஞ்ஞானிகளின்
கருத்துப்படி
சுவாசிப்பன எல்லாம்
உயிர் வாழ்வனவே!

சிவா சசிகாந்த்.

# ஊனங்கள்

சிறுகதை

ப.பங்கஜமலர்

அன்று ஞாயிற்றுக்கிழமை. அருந்ததி அலுவலகம் செல்லவில்லை. அன்று மிக ஆறுதலாகவே நித்திரை விட்டு எழுந்தாள். ஞாயிற்றுக்கிழமையானால் அவள் மனதில் பரபரப்புக் கிடையாது. மாறாக அமைதியும் ஆனந்தமும் நிறைந்திருக்கும். ஆமாம்! அலுவலகம் செல்வதென்றால்தானே அவசரமும், பரபரப்பும் தானாகவே வந்து விடுகின்றது. காலையில் எழுந்து பரபரப்பதும் அலுவலகத்துக்குப் பறப்பதும் வழமையாகி விட்டது. என்ன தான் கஷ்டப்பட்டாலும் சம்பளம் எடுக்கும் நாளில் மனம் துள்ளத்தானே செய்கின்றது. எப்படி இருந்தாலும் வீட்டில் அவள் மூத்தபிள்ளை. அதுவும் பெண்பிள்ளை. வயது, முப்பதைத் தொட்டுக் கொண்டிருந்தது. கீழே ஜீ.ஏ.கியூ செய்யும் தங்கை வதனி, ஏ.எல் படித்துக் கொண்டிருக்கும் தம்பி பரதன், எட்டாந் தரத்தில் இருக்கும் சின்னத்தங்கை சிந்து என அவள் குடும்ப அங்கத்தவர் பட்டியல் நீண்டிருந்தது. அம்மா பாவம் வீட்டு வேலைகளைக் கவனிப்பதோடு அப்பாவோடு தோட்ட வேலைகளில் பங்கேற்பதே அவளின் வேலை. அதனால் தான் அம்மாவிற்கு உதவியாக அருந்ததி சில வேலைகள் செய்ய வேண்டியிருக்கும். ஆனால் ஞாயிற்றுக் கிழமைகளில் அம்மா அவளைக் கஷ்டப்பட விடுவதில்லை. ''நீ வீட்டில நிக்கேக்க எண்டாலும் ஆறுதலாய் இரு'' என்பாள். அருந்ததி.... அருந்ததி... அம்மாவின் அன்பான அழைப்பினால் சுயநினைவுக்கு வந்தாள் அருந்ததி.

''வாவன்... சாப்பிட. நீ இன்னும் முகம் கூடக் கழுவேல்லையே. அம்மாவின் அன்பான அதட்டலைத் தொடர்ந்து அவள், ''வாறன் முகம் கழுவிட்டு என்று முற்றத்தில் இறங்கினாள். முற்றத்தில் நின்ற றோஜாச் செடிகளின் பூக்கள் இவளைப் பார்த்துச் சிரித்தன. ம்... என்ன வடிவான பூக்கள். அவள் மனம் பூக்களில் லயித்துக் கிடந்தது. இந்த றோஜாச் செடிகள் அவள் நண்பி சுகந்தி அவளுக்குக் கொடுத்தவை. அவள் நண்பி சுகந்தியை அவளால் மறக்க முடியவில்லை. அவளை எப்படி நண்பி என்பது உடுக்கை இழந்தவன் கைபோலாங்கே என்று வள்ளுவன் சொன்னானே. அதல்லவா நட்பு? இதுவும் நட்பா? சிரிக்கவும் சேர்ந்து திரியவுமே நட்பு? உள்ளே பொறாமையை நிறைத்து வைத்துக் கொண்டு வெளியே சிரித்துப் பேசும் உறவுகளை எப்படி இனம் காணுவது. அவளுள் அடிக்கடி எழும். வினாதான் இது.

முற்றத்தில் இறங்கிப் போகும் மகளை வாஞ்சையோடு பார்த்துக் கொண்டிருந்தாள் அம்மா. ம்... அம்மாவிடம் ஆழமான பெருமூச்சொன்று உறவாடி மறைந்தது. அருந்ததிக்கும் 30 வயதாகிறது. குடும்பம்... குடும்பம் எண்டு எங்களுக்கெல்லோ உழைச்சுத் தாறாள். அவளிலும் வயசு குறைஞ்சதுகள் பிள்ளை குட்டியள் புருசன் எண்டு திரியுதுகள். எத்தினை இடத்தில பாத்திட்டம்.. ஒண்டும் தான் இவளுக்குச் சரிவருகுதில்லை. தாய் மனம் தவியாத் தவித்தது. இண்டைக்குப் புறோக்கர் வாறதெண்டவர். கடவுளே! நல்லூரானே. இண்டைக்கு வாற சம்பந்தமெண்டாலும் பிள்ளைக்குப் பொருந்தவேணும். பொருந்தினால் வாற வருடம் கந்த சட்டி விரதம் இருப்பேன். பெற்றவள் மனம் புழுங்கினாள். என்ன மாதிரி வெளிநாட்டுச் சம்பந்தம் ஒண்டு வந்தது. எல்லாம் அவள் சுகந்தி தானே அள்ளி வைச்சவள். வந்த மாப்பிள்ளைக்கு அருந்ததியைப் பற்றி இல்லாதது பொல்லாததுகளைச் சொல்லி தன்ர தங்கையாருக்குப் பொருத்தி வைக்கப் பார்த்தாள். மனிசரை ஏமாத்தலாம். கடவுளை ஏமாத்த ஏலுமே. அந்த வெளிநாட்டு மாப்பிள்ளை அருந்ததியையும் செய்யேல்ல. சுகந்தீன்ர தங்கையையும் முடிக்கேல்ல. வேற எங்கையோ செய்திட்டானாம். அதிலயிருந்து அருந்ததி சுகந்தி நட்பு பிரிந்தே விட்டது. அம்மா பெருமூச்சோடு குசுனிக்குள் தன்னைப் புகுத்திக் கொண்டாள்.



திங்கட்கிழமை காலை அருந்ததி அலுவலகத்திற்கு ஆயத்தமானாள். அம்மா வாசலில் வந்து நிற்பது தெரிந்தது. என்னம்மா? என்றாள். அருந்ததி. நேற்று வந்த புறோக்கர் ஒரு குறிப்புத் தந்தவர். அது தான்... அம்மா இழுத்தாள். ஏன் பொருத்தம் பார்க்கவே... பாருங்கோவன் அருந்ததி சொன்னாள். உன்னைக் கேளாமல் என்னெண்டு பிள்ளை அம்மா ஆறுதலாகச் சொன்னாள். என்னம்மா இதுவரையில் நீங்கள் பார்த்த எந்த மாப்பிள்ளைக்கொண்டாலும் நான் மாட்டன் எண்டிருப்பனே. எல்லாத்துக்கும் ஓம் தானே. எத்தினை தரம் என்னை அலங்கரிச்சுக் கொண்டு மாப்பிள்ளை வீட்டார் முன் போய் நிண்டிருப்பன். ஏதோ ஒருகாரணத்தால் குழம்பிப் போயிருக்கும் அல்லது குழப்பியிருப்பினம். தன் மன ஆற்றாமையை வெளியே காட்டாமல் சரியம்மா பொருத்தம் பாருங்கோ. நான் போட்டு வாறன்.

அலுவலகப்படியில் கால் வைத்ததுமே ரேவதியின் சிரிப்பொலி அவள் காதைத் தொட்டது. ரேவதியும் அவள் அலுவலகத்தில் வேலை பார்ப்பவள். எப்போதுமே கல கல என இருப்பாள். அலுவலகத்தில் எல்லோரையும் சிரிக்க வைத்து விடுவாள். ஹாய் அருந்ததி குட்மோனிங் என்றாள் ரேவதி. இவளும் குட்மோனிங் சொன்னபடி தன் மேசையை நோக்கி நடந்தாள். ரேவதி எவ்வளவு பாவம். அவளால் மட்டும் எப்படிச் சிரித்துச் சீவிக்க முடிகிறது என்று அருந்ததி நினைப்பதுண்டு. ரேவதி வயதில் 38ஐத் தொட்டவள். கல்யாணமாகாதவள். அவளை ஒருவன் காதலித்தான். அவளும் உயிருக்குயிராய் நேசித்தாள். ஆனால் அவளுடைய அத்தான் சங்கர் வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்ததும் சங்கரைத் திருமணம் செய்யும்படி வீட்டில் வற்புறுத்தினார்கள். ஆனால் ரேவதியோ தன் அத்தான் சங்கரிடம் தன் காதல் விடயத்தைக் கொட்டி விட்டாள். அத்தான் அவள் விருப்பத்தின் படி ஒதுங்கிக் கொண்டான். பின்பு சங்கர் வேறு திருமணம் செய்து கொண்டு வெளிநாடு போய் விட்டான். ரேவதியின் காதலனோ ரேவதியைக் கைகழுவி விட்டு எங்கோ கொழுத்த சீதனத்தோடு பெண் பார்த்து மணந்தும் விட்டான். அதிலிருந்து ரேவதி கன்னியாக, கண்ணியமாக வாழ்ந்து வருகின்றாள். யாராவது காதலனின் கதையை எடுத்தால் என்னமோ அவனின் சுயரூபம் கல்யாணத்தின் முன்பே தெரிந்து விட்டதே. பின்னர் தெரிந்தால் எவ்வளவு ஏமாற்றமும் வேதனையும் என்பாள். சில வேளைகளில் தத்துவம் பேசத் தொடங்கி விடுவாள்.

என்ன அருந்ததி? எங்க போயிட்டே என்ற ரேவதியின் குரலில் அருந்ததி நினைவிலிருந்து மீண்டவாறே ஒண்டுமில்லை என்றாள். ஒண்டுமில்லையோ? ஏதோ இருக்கு சொல்லு தூண்டினாள் ரேவதி. எப்படி உன்னால எல்லாவற்றையும் மறந்து சிரிக்க முடிகிறது என்றாள் அருந்ததி. நினைப்பதெல்லபம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை. நான் சொல்லலேல்ல. கண்ணதாசன் சொன்னது சிரித்தபடியே தன் மேசையை நோக்கி நடந்தாள் ரேவதி.

சிறிது நேரத்தில் அலுவலகம் அமைதியில் மூழ்கிப் போனது. தத்தம் கடமையே கண்ணாகினர் அனைவரும். மதியமானது.

அமைதி கலைந்தது. எல்லோரும் சாப்பிட ஆயத்தமானார்கள். சாப்பிட்டபடியே வீட்டுக்கதை, நாட்டுக்கதைகளை அலசி ஆராய்ந்தனர். அப்போதுதான் ரைப்பிஸ்ற் கல்பனா தன்னைப் பெண்பார்த்த கதையைச் சொல்லித் தனக்குக் கல்யாணம் பிடிக்கவில்லை என்றாள். ஏன் ரேவதி மாப்பிள்ளை வோச்சர் வேலையாம். எனக்குப் பிடிக்கேல்ல என்றாள். இஞ்ச பார் கல்பனா ஒருநாளும் ஒருத்தற்ர தொழிலை இழிவா நினைக்கக் கூடாது. அந்தந்தத் தொழில் தான் அவையவைக்குச் சோறு போடுது. இனிமேல் உனக்கு ஒரு கூலிக்காரன் கூடக் கிடைக்காமற் போயிடுவான் என்றாள் ரேவதி. அருந்ததியும் எதையும் ஏற்கும் மனப்பாங்கு இருக்கோணும் கல்பனா. ஒவ்வொருத்தருடைய மனமும் ஒவ்வொன்றை விரும்பும். அது இயல்புதான். இது உன்ர குற்றமில்லை. உன்ர மனதின் நிலை தான் அப்படி என்றாள். கல்பனா ஸ்ரைலாக தலையைச் சிலுப்பிக் கொண்டாள். அவள் டொக்டர், எஞ்சினியர் மாப் பிள்ளை கனவில் ஆழ்ந்தே போனாள். கல்பனா அல்லவா? கற்பனையில் இறங்கி விட்டாள்.

நேரம் கரைந்து மாலையான போது அலுவலகத்திலிருந்து எல்லோருமே விடை பெற்று வீடு நோக்கி விரைந்தனர். அருந்ததியும் தன் சயிக்கிளை மிதிக்கத் தொடங்கினாள்.

வீட்டு வாசலை அண்மித்த போது புறோக்கர் வந்திருப்பது தெரிந்தது. இவள் வீட்டை அடைந்தாள். அம்மாவின் முகத்தில் கவலையின் ரேகைகள் கோடிட்டிருந்தன. அப்பா ஏதோ யோசனையில் இருப்பது தெரிந்தது. இவள் உள்ளே சென்றாள். சின்னத்தங்கை சிந்து ஓடி வந்து அக்கா அக்கா உங்கட அத்தான் நல்லவடிவு. கார்த்திக் போல என்றாள். என்ன சிந்து? சொல்றாய். ஓமக்கா புறோக்கர் படம் கொண்டு வந்தார் பார்த்தனான். நல்ல பொருத்தமாம். கேட்டபடியே உடையை மாற்றிக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள். என்னமோ நல்ல பொருத்தம். பெடியனும் குணமான பெடியன். நல்ல தொழில் நல்ல குடும்பம். அவைக்கும் பெட்டையைப் படத்தில் பார்த்ததும் நல்லாப் பிடிச்சுப் போச்சு. இப்படி இனியும் அமையாது. விட்டியளோ பிறகு கவலைப்படுவியள். யோசிச்சு முடிவைச் சொல்லுங்கோ. புறோக்கரின் வார்த்தைகள் காற்றோடு கலந்து இவள் காதுள் புகுந்து கொண்டன. புறோக்கர் போனதற்கான அமைதி தெரிந்தது.

அருந்ததி வெளியே வந்தாள். என்னவாம் புறோக்கர்? என்றாள். உன்னைக் கேட்டிட்டுப் பொருத்தம் பார்த்தம். நல்ல பொருத்தம். பெடியனும் குடும்பமும் நல்ல இடம். ஆனால் கொப்பருக்கும் எனக்கும் கொஞ்சம் கூட விருப்பமில்லை. ஏனம்மா? அருந்ததி பெடியனுக்கு ஒரு காலில்லையாம். பொய்க்கால் பொருத்தியிருக்காம். 30 வயதுக்கும் இருந்த உன்னைப் போயும் போயும் காலில்லாதவனைக் கட்டி வைக்கிறதே. ஏனம்மா அந்தக் காலால் நடக்கலாம். சயிக்கிள் ஓடலாம் தானே. நொண்டத் தேவையில்லை. அருந்ததி அதுக்காக ஒரு ஊனமுற்றவனைச் செய்யிறதே அம்மா எதம்மா ஊனம். எங்கட மனம் தான் ஊனம். காலுள்ள ஒருவரைச் செய்த பின் அவரின் கால் இழக் கப்பட்டால் என்ன செய்வது? அதைத் தாங்குவதும் மனம் தானே. தற்செயலாக காலை இழந்த அவர் ஊனமுற்றவரேயல்ல. திருமணத்தைக் குழப்பிய நண்பி, கொழுத்த சீதனத்துக்காக கைவிட்ட ரேவதியின் காதலன், தொழிலை இகழும் கல்பனா இவர்கள் தான் ஊனமுற்றவர்கள். எனக்கு அவரை மணக்க மனப்பூர்வமான சம்மதம். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். ஆகவேண்டியதைக் கவனியுங்கோ என்றாள். பிறகென்ன பிள்ளையும் சொல்லிப் போட்டாள். அலுவலப் பார்ப்பம் அப்பா சொல்லிக் கொண்டே முற்றத்தில் இறங்கினார்.

* * *

# புதுமைச் சீதனம்

சிறுகதை

த.அஜந்தகுமார்

என்னடி கமலம் உங்க இராசம்மாவின்ர பெட்டையை இண்டைக்கு யாரோ பொம்பிளை பார்க்க வாறாங்களாம். யாரோ டவுனிலே படிக்கிற பெடியனாம். உப்படித்தான் எத்தனை தடவையாக பொம்பிளை பார்க்க வந்து பொண்ணு அழகாகவும் குணமாகவும் அடக்கமாகவும் இருக்கிறா ஆன நீங்கதான் நல்ல பணமா நாங்க கேட்கிறதைத் தரயில்லையென்று சொல்லுறியளே என்று சொல்லி, கொடுத்த ரீயையும் பலகாரங்களையும் சாப்பிட்டு விட்டுக் கையை வரிச்சிட்டுப் போறது வழக்கமாப் போச்சு, என்று ஒரு வகையில் பரிதாபப்பட்டுக் கூறினாள் கண்ணம்மா.

இரசம்மா வீடு சிறிய தாயும் ஓரளவு அடக்கமான தாயும் அழகானதாயும் காட்சியளித்தது. இராசம்மாவின் கணவன் ''கான்சராலே'' செத்து இரண்டு வருடமும் கழிந்தாச்சு. கணவனின் துணையில்லாது எவ்வாறு நாலு பொம்பிளைப்பிள்ளைகளையும் கரை சேர்க்கிறது என்று தினம் யோசித்து.. கடவுளையாசித்து... வந்தாள் இராசம்மா. மூத்த பெட்டை பரிமளத்தை முதலில் கரைசேர்க்கலாம் என்று பார்த்தால் சீதனம் என்கின்ற அரக்கன் குரல்வளையை நெரிக்கிறான். சீதன அரக்கனின் கொடூரத் தாண்டவத்தால் தான் இதுவரை நடந்த முயற்சிகள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயின என்ற பெருமூச்சு அந்தக் குடும்பத்தில் உள்ள எல்லோரிடமும் ஏழைகள் என்ற ஏக்கமுடன் வெளிவரும்.

இன்றைக்கும் அப்படித்தான் பரிமளத்தைப் பொண்ணு பார்க்க வருகினம். பெடியன் ராஜசேகர். படிப்பிக்கிறவனாம். நல்ல குணமான பையன் என்ற நம்பிக்கையிலேயே இன்றைய முயற்சி அமைந்திருந்தது. இராசம்மாவின் முகத்திலும் ஒரு ஏக்கமும் ஆதங்கமும் தேக்கமாய் இருந்தன. அயலவரின் ஒத்தாசைகள் ஊக்கமாய் இருந்தன. இன்றைக்கு வா்ற பெடியனாவது பணத்தைப் பார்க்காமல் குணத்தைப் பார்த்து ''ஓகே'' சொல்ல வேண்டும் என்பதே அங்கிருந்த சில பெரியவர்களினதும் எல்லோரினதும் எதிர்பார்ப்பு.

இன்னமும் ஆக்களைக் காணவில்லை யென்று இராசம்மா காத்திருந்தாள். எல்லோரும் காத்திருந்தனர். எல்லோரும் காத்திருக்க... வாசலிலே கார் ஒன்று வந்து நிற்கவும் சரியாக இருந்தது. சில பெரியவர்கள் கார்க் கதவைத் திறந்து கொண்டு ராஜசேகரும், தாயும், தகப்பனும், இன்னும் இருவரும் இறங்கி வந்தனர். அவர்களை வரவேற்றுக் கொண்டு சென்று கதிரைகளிலேயே இருக்க வைத்தனர். சிறிது நேரம் கதைத்த பின்னர்... ராஜசேகரின் தாயும் தகப்பனும் பெண்ணை வரச் சொல்லுங்க என்றதும், இரு பெண்கள் உள்ளே சென்று பரிமளத்தை அழைத்துக் கொண்டு வந்தனர்.

பரிமளம் நல்ல சேலையிலே இரண்டு மூன்று நகைகளுடன் அதிகமான மேக்கப் இன்றி அழகாய் வந்து எல்லோருக்கும் ரீ கொடுத்து விட்டு, ராஜசேகரின் தாய் தகப்பனை நமஸ்கரித்தாள்.அவர்கள் இருவருக்கும், ராஜசேகருக்கும் பரிமளத்தைப் பிடித்திருந்தது. இதை அறிந்த பெரியவர்கள் சிலர் ராஜசேகரின் தாய் தகப்பனிடம் அப்ப மற்ற கல்யாண விடயங்களைக் கதைக்கலாமே எனக் கூறினார்கள்.


இதைக் கேட்டதும் ராஜசேகரின் தகப்பனார் தர்மரட்ணம் சிரித்துக் கொண்டே நாங்கள் இங்கே வர்றத்துக்கு முன்னமே தரகர் மூலமா உங்க நிலவரத்தை அறிந்தே வந்தோம். அத்தோடு எனது மகன் ஓர் ஆசிரியன் மட்டுமல்ல ஒரு சமூக சீர்திருத்தவாதியும் கூட. ஏழைப் பெண்ணுக்கே தான் வாழ்வளிக்க வேண்டும் என்ற இலட்சியத்திலேயே இங்கே எங்களையும் அழைத்து வந்தான். அவனுடைய இலட்சியத்துக்கு எதிராக நாங்களும் நிற்க விரும்பவில்லை. எனவேதான் உங்களுடைய மகளின் குணத்தைப் பார்த்தோம். எங்களுக்குப் பிடித்து விட்டது. திருமணம் சம்பந்தமான எல்லாச் செலவுகளும் நாங்களே பொறுப்பேற்கின்றோம். உங்கள்ுக்குச் சம்மதம் தானே என தர்மரட்ணம் கேட்கவும் எல்லோர் முகத்திலும் சந்தோசம் நிலவியது.

பரிமளத்தின் முகத்தில் நாணமும் சந்தோசமும் ஒருங்கே சேர்ந்திருந்தது. இராசம்மாவுக்கு இருந்த சந்தோசத்தை வார்த்தைகளால் வடிக்கவே முடியாது. இராசம்மா எழுந்தாள். நா தழுதழுக்க எங்களுக்கு ரொம்பச் சந்தோசம் இந்தக் கலியுகத்திலையும் உங்களை மாதிரிச் சிலர் இருக்கிறதாலேதான் இந்த உலகம் இருக்குது. நீங்கள் நல்லா இருக்கணும் ஐயா என்று சொன்னாள்.

இராசம்மா வீடே மகிழ்ச்சியால் திளைத்துக் கொண்டிருந்தது. எல்லோர் முகத்திலும் புதுக்களை தெரிந்தது. திடீரென ராஜசேகர் தகப்பனின் காதில் ஏதோ சொன்னான். அதைக் கேட்டதும் தர்மரட்ணம் சிரித்தார். இராசம்மாவை நோக்கிச் சொன்னார். பையன் ஒருக்கா உங்கட மகளோட தனியாக் கதைக்கணுமாம் என்றார். இதைக் கேட்டதும் இராசம்மாவும் அதுக்கென்ன கதைச்சாப் போச்சு'' என்றாள். இதைக் கேட்டதும் ராஜசேகர், பரிமளம் நின்ற அறைக்குச் சென்றான்.

கொஞ்ச நேரமாக இருவருக்கும் இடையில் அமைதி நிலவியது. சிறிது நேரத்தில் ராஜசேகர் பரிமளம் என்னை உனக்குப் பிடித்திருக்கா என்றான். பரிமளம் சம்மதம் என்பது போல தலையாட்டினாள். திடீரென்று ராஜசேகர் பரிமளத்தைக் கேட்டான். பரிமளம் எனக்கு நீ ஒரு சீதனம் தர வேணும் என்றான். இதைக் கேட்டதும் பரிமளம் கலவரம் அடைந்தாள். ''என்ன சீதனம்''? என்றாள். ராஜசேகர் சிரித்துக் கொண்டே சொன்னான் ''என்ன பயந்திட்டியா, எனக்கு நீ பணமோ நகையோ தர வேண்டாம். இதை விட உயர்ந்ததான மாறாத அன்பைத்தினம் எனக்குக் காட்டணும்'' என்றான். இருவரும் ஹோலை நோக்கி நடந்தனர்.

ஹோல் பூராய் சந்தோச அலை அடித்துக் கொண்டிருந்தது. ராஜசேகரைப் போலவே எல்லோரும் மாறுவார்களா?




## கறுப்புத் தான் எனக்கும் பிடித்த கலர்

மாறி வரும் ஃபேஷன் உலகில் மாறாமல் இருப்பது கறுப்புத் தான்! புகழ்பெற்ற ஃபேஷன் டிஸைனர்களாலும், மாடல்களாலும், அதிகம் விரும்பப்படுவதும் இந்த நிறம் தான் . அடிப்படை நிறமான கறுப்பின் அழகே தனி. அனைவருக்கும் பொருந்தும் இந்த நிறம். எந்த வயதானாலும் கறுப்பு அணிய யாரும் தயங்குவதில்லை. “சிவப்பு நிற ஸ்கர்ட்டோடு பச்சை நிற டாப்ஸ் நன்றாக இருக்குமா ?” என்று அதிகம் யோசிக்கத் தேவையில்லை. கறுப்போடு சேராத நிறமே இல்லை.

### கறுப்பின் தன்மை

கறுப்பு நிற உடை அணிபவரை மெலிந்தவராக தோன்றச் செய்யும். எங்கு எந்த நிறத்தை உடுத்த வேண்டும் என்று குழம்புபவர்களுக்கு கறுப்பு சிறந்த நிறம். கல்யாணம் போன்ற விசேஷங்களுக்கு கறுப்பு நிறம் அணியக் கூடாது என்ற காலம் போய் விட்டது. கறுப்பு நிறத்தில் காஞ்சிபுரப்பட்டும் கிடைக்கின்றது. மிக்ஸ்–அண்ட்–மேட்ச் காலமான இக்காலத்தில் கறுப்போடு எந்த நிறத்தையும் அணியலாம்.

### கறுப்பு நகைகள்

ஆக்ஸிடைஸ்ட் நகைகள் எந்த விதமான உடையோடும் அழகாகத் தோன்றும். தங்க நகைகள் போல் இல்லாமல் இவற்றை மார்டன் உடைகளோடும் அதிக அளவிலும் அணியலாம்.

### கறுப்பு உடைகள்

ஜீன்ஸ், ஸ்கர்ட், பாப்ஸ் டீ ஷர்ட் போன்றவை கறுப்பு நிறத்தில் இருந்தால் அவற்றை மற்ற நிற உடைகளோடு அணியலாம். கறுப்பு ஜீன்ஸை மஞ்சள் டாப்ஸோடும், கறுப்புடாப்ஸை சிகப்பு ஸ்கர்ட்டோடும் மாற்றி அணியலாம்.



### கறுப்பு நிற ஹாண்ட் பேக், காலணிகள்

கறுப்பு நிற ஹாண்ட் பேக் மிகவும் முக்கியமானதாகும். இதை காலையிலும் மாலையிலும் பயன்படுத்தலாம். பொதுவாக அனைவரும் கறுப்பு நிறத்தில் செருப்பு வாங்கினாலும், அழகான கறுப்பு நிற செருப்பு போல் வேறு எதுவுமே இல்லை.

### கறுப்பு நிற மேக்கப்

தற்பொழுது கறுப்பு நிறத்தில் லிப்ஸ்–ஸ்டிக், நெயில் பாலிஷ் ஆகியவையும் கிடைக்கின்றன. இது ஒரு வித்தியாசமான தோற்றத்தை அளிக்கிறது.

*கலா*

## வேலை செய்யும் இடங்களில் நட்பு

தினமும், வாழ்க்கை நமக்கு பல பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறது. அனுபவம் நம்மை செம்மைப் படுத்துகிறது. புத்திசாலிகள் மற்றவரின் அனுபவம் மூலமாக கற்றுக் கொள்கிறார்கள். முட்டாள்கள் அனுபவித்து பாடம் படிக்கிறார்கள். நீங்கள் புத்திசாலிகள் என்பது எங்களுக்குத் தெரியும்.அதனால் பல்வேறு நிர்வாகம் தொடர்பான நூல்களிலிருந்து திரட்டி, நீங்கள் தெரிந்து கொள்ள சில விஷயங்களை தொகுத்திருக்கிறோம்.நட்பு ஏற்படுத்திக்கொள்ள, வேலை செய்பவர்கள் தங்கள் வேலைகளை மற்றவர்களுடன் இணைந்து செய்ய வேண்டும். உங்களுடன் வேலை செய்பவர்கள் பலதரப்பட்ட குணங்களைக் கொண்டவர்களாக இருக்கலாம். திறமை மிக்க வேலை, நல்ல பெயர் மற்றும் வெளிப்படையான நடவடிக்கைகள் உங்களுக்குஎந்தசூழ்நிலையிலும் வெற்றியைத் தேடித்தரும் .உங்கள் நட்பினால் எப்படி நீங்கள் திறமையுடன் செயல்படலாம் என்பதற்கு சில குறிப் புகள்.



1. சண்டை சச்சரவுகளை அவை ஏற்பட்டவுடன் தீர்த்து வையுங்கள். இது சற்று கடினமானது என்று நீங்கள் நினைக்கலாம்.

(தொடரும்)

## ஓமப்பொடி

தேவையான பொருட்கள் :



அரிசி மாவு :1 சுண்டு
கடலை மாவு :2 சுண்டு
உப்பு :தேவையான அளவு
பெருங்காயம் : கொஞ்சம்
வெண்ணெய் / நெய் :1 கரண்டி
ஓமம் : ½ பிடி
மிளகாய்: 7 அல்லது 8
எண்ணெய் : தேவையான அளவு

செய்முறை :

ஓமத்தைக் களைந்து, கல்லரித்து, அதனுடன் மிளகாய் வற்றலை சேர்த்து நன்கு அரைத்துக் கொள்ளவும்.

அரிசி மாவு, கடலை மாவு, உப்பு, பெருங்காயம், நெய், ஓமம், மிளகாய்ப் பொடி எல்லாவற்றையும் போட்டுக்கெட்டியாகப் பிசைந்து கொண்டு, ஓமப்பொடி வில்லையைப் போட்டுக் கொண்டு பிழியவும்.

## குறிப்புகள்

* ஆலம் பால்லக் கொண்டு வந்து கால் வெடிப்புகளில் தினந்தோறும் தடவி வர சீக்கிரத்தில் குணமாகும்.

* அப்பளம் மற்றும் பட்சணங்களை எண்ணெயில் போடும் போது, அதிக எண்ணெய் குடித்து விடும் எனப் பலர் பயப்படுவது உண்டு. இதைத் தவிர்க்க... எண்ணெயை காய்ச்சும் போது அதில் புளியை கொஞ்சம் போடவும். எண்ணெய் காய்ந்ததும், புளி மிதக்கும். அப்போது அதை அகற்றி விட்டு, அப்பளம் மற்றும் பட்சணங்களைப் பொரித்தால் எண்ணெய் குடிக்காது...!

* கரட்டைப் பிழிந்து சாறு எடுத்து, தேன் கலந்து குடித்து வர உடல் அழகு ஏற்படும், தேகம் மினுமினுப்படையும். வயிற்றுக் கிருமிகள் ஓழியும், ரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவு குறையும். இரத்த விருத்தி ஏற்படும். நரம்புகளை பலப்படுத்தும். மகப்பேறுக்குப் பின் கருப்பையை சுருக்க வைக்கும்.

## சின்னச் சின்னப் பாடங்கள்





தொலைப்பேசியில் புன்னகையுடன் “ஹலோ” சொல்லுங்கள்.•
டி.வி. பார்ப்பதைவிட நூல்களை அதிகமாகப் படிப்பது நல்லது.•
தனிமையில் சிறிது நேரததை செலவிடுங்கள்.•
காதலிதது ஏமாற்றம் அடைவது காதலிக்காமல் இருப்பதை விட மேலானது•
மாறுதல்களை ஏற்றுக் கொள்ளுங்கள். ஆனால் பண்பை விட்டுக் கொடுக்காதீர்கள்.•
பல நேரங்களில் மௌனமே சிறந்த பதிலாக அமைந்துவிடும்.•
உங்கள் குணங்களும், பண்பும் உங்கள் எதிர்காலததை நிர்ணயிப்பவை.•
விரும்பியது கிடைக்காமல் போவதும் சில நேரங்களில் நல்லது தான்.•
முடிந்த அளவு மற்றவர்களுக்கு உதவுங்கள்.•
மற்றவர்கள் உங்களைப் புகழும் போது அதைத தடுக்க முயலாதீர்கள்.•
வீட்டில் அழகான அமைதியான சூழலை உருவாக்குங்கள்.•
எழுததும், அதன் அர்த்தமும் ஒன்றுதானா என்பதை யோசிததுப் பாருங்கள்.•
உங்களுக்குத தெரிந்ததை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்.•
வயதாக ஆக வாழ்க்கைத துணைவரின் உரையாடல் தனிமையைப் போக்கும் அவர் அழகு அல்ல.

## குடும்பம் நந்தவனமாகிட...



ஒவ்வொரு குடும்பத்திலும் புரிந்துணர்வு காணப்பட வேண்டும். வீட்டுக்கொடுத்தல், வரவுக்கேற்ற செலவு போன்ற விடயங்கள் வாழ்வில் காணப்பட்டால் பாசப்பிணைப்பு அதிகமாகும். பிரச்சனையாக்கும் மனக்கசப்பிற்கும் இடமேயில்லை.

குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற குடும்பத்தில் வரவு அறிந்து அதற்கு ஏற்ப செலவு செய்பவள் மனைவி. வரவினை மிஞ்சி அதிகமாக செலவினைச் செய்வதால் கடன் பெருகும். இதனால் கணவனுக்கும் மனைவிக்கும் மனக்கசப்பு ஏற்படும். கணவன் மனைவிக்குள் கசப்பு ஏற்பட்டால் குடும்பத்தில் நிம்மதி இருக்காது. காற்றிலாடும் மெழுகுதிரி போன்று வாழ்வு அல்லாடும். மனக்கசப்பினால் அன்பு, பாசம் என்பதற்குப் பதிலாக கோபமே முன் நிற்கும். காரணம் இல்லாமலே எல்லோர் மேலும் வெறுப்பு ஏற்படும். வேதனை, கோபம், வெறுப்பு எல்லாமே கடனால் வந்தது தானே! வரவுக்கு ஏற்ற செலவு செய்தால் இவை எல்லாம் இலவம் பஞ்சாக பறந்து விடும். குடும்பத்தின் பாசப்பிணைப்பு என்றுமே உடையாது.

வரவுக்கு ஏற்ற செலவு செய்ய வேண்டும் என்பது இல்லாளுக்கு மட்டுமே கூறும் அறிவுரை அல்ல. கணவனுக்கும் தான். பிள்ளைகள் கூட அதனை எண்ணியே செயற்பட வேண்டும். வரவு குறைவாக வரும் போது உலகில் உள்ள மற்றவரைப் பார்த்து ஆடம்பரமாக வாழக் கூடாது. நினைத்த உடனேயே நினைத்த பொருள் வாங்க



வேண்டும் என அடம் பிடித்தால் கையிலே காசு இலலாத அன்னையோ அல்லது தந்தையோ தன் பிள்ளையை ஏச வேண்டி ஏற்படும். இதனால் பிள்ளையின் மனதில் பெற்றோரைப் பற் றிய தான ஒரு கோபம் உண்டாகும்.

(தொடரும்)

## இல்லம் இனிய இல்லம்

தங்கள் இல்லம் அழகாக இருக்க வேண்டும் என்பதுதான் ஒவ்வொரு பெண்ணின் ஆசை. அதைப் பூர்த்தி செய்ய அவர்கள் வெவ்வேறு விதத்தில் முயற்சிக்கின்றனர். அழகிய, சுத்தமான, அமைதியான முறையில் அமைந்துள்ள இல்லம் அனைவரையும் கவரும். ஒழுங்கான முறையில் அலங்கரிக்கப்பட்ட வீடு, ஒருவரின் விருப்பத்தையும் தனித் தன்மையையும் வெளிப்படுத்துகிறது. வீட் டை அலங்கரிக்கு முன் கீழே உள்ள குறிப்புகளை நினைவில் கொள்வது மிகமிக அவசியமாகும்.



* சுவற்றில் டார்க் கலர் அடிப்பதை தவி ர்த்து லைட் கலர் அடித்தால் அறை பெரிதாகத் தோன்றும். வீடு முழுவதும் இயற்கையின் நிறங்களில் வண்ணம் பூசினால் அதிக இடம் இருப்பது போல் தோற்றமளிக்கும். ஆயினும் உங் கள் விருப்பத்துக்கேற்றவாறு நிறங்களை அமைத்துக் கொள்ளலாம்.

* ஒரு அறையில் இரண்டுக்கும் அதிகமான கதவுகள் இருந்தால், அவற்றை சுவற்றின் நிறத்திலே அமைக்கவேண்டும். ஏனென்றால் அப்போதுதான் ‘பேக்கி ரவுன்டோடு’ ஒன்றித் தோற்றமளிக்கும்.

* அறையில் ஜன்னலுக்கு எதிரே ஒரு பெரிய கண்ணாடியை வைத்தால், அது அறையை மேலும் பிகாசமாக்கும்.

* அறையின் மூலைகளிலும் சோபாவின் அருகிலும் டேபிள் அல்லது ஷெல்ஃப் அமைத்து அதில் அழகிய பொருட்களை வைக்கவும்.

* அறையில் ‘கர்ட் டன்’களில் நிறததையும் சுவற்றின் நிறதது க்கு ஏற்ப அமைக்கவும். அதனால் அறை ஒரே மாதிரியான தோற்றம் அளிக்கும்.மேலே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை மனதில் கொண்டு உங்கள் வீட்டை நீங்கள் அலங்கரிததால், நிச்சயம் அது அனைவரின் மனதையும் கவரும்.

# மரண விளையாட்டு

தொடர்கதை

மாயவன்

அங்கம் 24

ஜெகனை நோக்கி சுரிக்கன் எனும் ஜப்பானிய மார்ஷியல் ஆர்ட்சின் எண்முனை கூர்ப்புகள் கொண்ட வட்ட ஆயுதம் ஒன்று சக், ரக், ரக், ரக் என்று காற்றில் சுற்றி பாய்ச்சலில் குரல்வளையில் செருகியது. ஒரு முறை ஆடிவிட்டு வேரறுந்த மரம் போலச் சரிந்தான் ஜெகன்.

மீதியாயிருந்த அரவிநதும், விஜயும் வாசலில் நின்ற தீவிர வாதிகளைக் கண்மூடித்தனமாகச் சுட்டுப் பொசுக்கி விட்டு உள்ளே நுழைந்தனர்.

அர்ஜுன், அபிநாஷ், எட்வேட், ரஞ்சித் ஆகியோர் அகப்பட்ட எல்லாத் தீவிரவாதிகளையும் தீர்த்துக் கட்டிய வண்ணம் உள்ளே நுழைய முற்பட்டனர்.

தீடீரென்று இரண்டு ஹெலி கொப்டர்கள் இவர்களை நோக்கி தோட்டா மாரி பொழிந்த வண்ணம் வந்தன. சிதறிய அர்ஜுனும் அவன் சகாக்களும் மறைவிடம் தேடிப் பதுங்கினர். ஆஜுன் ரெட் ஐ மிசின் கன்னை எடுத்துத் தோளில் பொருத்திக் ஹெலிகொப்டரை நோக்கி உயர்த்திக் குறி பார்த்தான். இதன் சுடு தூர எல்லைக்குள் ஹெலிகொப்டர் வந்ததும் மிஸின் கன்னை இயக்கினான்.

சரியாக பெற்றோல் ராங்கில் குண்டுபட்டு ஹெலி கொப்டர் புகை கக்கிப் பின் பூமி அதிரும்படியான ஓசையுடன் வான வெடிகளின் வர்ண ஜாலம் காட்டி வெடித்துச் சிதறியது. மற்றைய ஹெலி தன் தாக்குதலை அகோரப்படுத்தியது.

அதன் இலக்குக்கு அபிநாஷ் உட்பட்டு தோட்டாக்களை உடலில் வாங்கிச் சரிந்தான்.

அர்ஜுனும் ஆவேசத்துடன் மீண்டும் ரெட் ஐ மிஷின் கன்னை இயக்கி அதனையும் சிதறடித்தான். இரத்த வெள்ளத்தில் கிடந்த தன் சகாவை ஒரு கணம் நோக்கி அவனின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து விட்டு அரண்மனையினுள் நுழைந்தான்.

ஆங்காங்கு நின்ற தீவிரவாதிகளை மரணதேசம் அனுப்பி விட்டு அப்துல் ரகீமை நோக்கி பின்புறமாக முன்னேறினான் அர்ஜுன்.

அரவிந்த் ரென்ற் அடித்து சுற்றி வரக்காத்து நின்ற தீவிரவாதிகளை நோக்கி கை எறி குண்டுகளை வீசினான். தங்களைத் துரத்தி வரும் காவலாளிகளின் பாதையில் கண்ணி வெடிகளை மறைத்து வைத்து விட்டு மறைந்திருந்து ரிமோட் கொன்ரோலை அமுக்கினான். துரத்தி வந்த காவலாளிகள் சக்தி வாய்ந்த அக்கண்ணி வெடிகளில் சிக்கி மாமிசத் துண்டங்களாயச் சிதறினார்கள்.

தங்களின் முன்னால் தாக்க வரும் தீவிரவாதிகளை நோக்கி மிசின் கண்களில் இருந்து தோட்டாக்களை அனுப்பி வைத்து விட்டு அசுர வேகமாய் அரண்மனையில் நுழைந்து முன்புறமாய் அப்துல் ரகீமை நோக்கி முன்னேறினான்.

அர்ஜுனும், அரவிந்தும் எதிர் எதிர்ப்புறமாய் அப்துல் ரகீமை நோக்கி முன்னேற அப்துல் ரகீம் தன் தளபதி கிரீம்கானுடன் இருவரையும் எதிர் கொண்டான்.

நான்கு எதிரிகளும் ஒன்றாகச் சந்தித்தனர். அப்துல் ரகீம் அரவிந்தை நோக்கி ''அரவிந்த் நான் நினைத்ததிலும் பார்க்க நீ மிக்க சாமர்த்தியசாலி. வீரனும் கூட. உனக்கு ரம்யாவும், ப்ரியாவும் உயிருடன் தேவையென்றால், வா நாமிருவரும் தனித்தனியே மோதிப் பார்ப்போம். நீ வெற்றி பெற்றாயானால் ரம்யா, ப்ரியாவை அழைத்துச் செல்லலாம் என்றான்.



அப்துல் ரகீம் இரண்டு கைகளையும் விநோதமாய் இணைத்துக் கோபுரம் அமைத்து மனதை ஒரு நிலைப்படுத்தி உடலின் சக்தினைத் தூபமேற்றினான். பின் கைக்கு ஒவ்வொரு கத்திகள் வீதமாய் இரண்டு கத்திகளை எடுத்துக் கொண்டான்.

அரவிந்த் குட்டை நின்ஜா வகைக்கத்திகளை எடுத்துக் கொண்டான். இடது காலை முன் நீட்டி உடலை ஸ்டென்ஸ் அமைத்தான். நடப்புச் சூழ்நிலை மரண அமைதி எல்லோர் கண்களிலும் எதிர்பார்ப்பு இருந்தது. தனித் தனியாக அடைக்கப்பட்ட அறைகளிலிருந்த வண்ணம், ப்ரியாவும், ரம்யாவும் நடக்கப் போகும் மரணப் போரை காணத்தயாராகினர் ரீ.விஸ்கிறினில்.

அரவிந்தின் மீது கத்திகளைச் சொருகும் நோக்கில் அப்துல் ரகீம் துள்ளினான். குதித்தான், பாய்ந்தான். இன்னும் என்ன வெல்லாமோ செய்தான்.

அப்துல் ரகீம் கைக் கத்திகளை அகல உயர குறுக்கு திசைகளில் பாய்ந்து பாய்ந்து அரவிந்திற்கு மரணகாயம் ஏற்படுத்த முயன்றான்.

கூச்சல்களைத் துணையாக்கிக் கொண்டு ஒவ்வொரு வீச்சையும் லாவகமாகத் தடுத்தான் அரவிந்த். இம்முறை புதுப்பிக்கப்பட்ட பலத்துடன் பாய்ந்து குட்டை நின்ஜா வகை கத்திகள் இரண்டை வைத்துச் சாகசம் காண்பித்தான். அப்துல் ரகீம் தன் பையில் இருந்து 'ப்புக்கியா' எனும் குழலை எடுத்து அரவிந்தின் கழுத்தைக்குறி வைத்து ஊதினான்.

வந்த குறியிலிருந்து மைக்ரோ செகண்ட் இடைவெளியில் இலக்கு விலகினான் அரவிந்த். குசாரி பண்டோ என அழைக்கப்படும் 30 இன்ச் நீளமுள்ள ஆயுதத்தைக் கத்திக்குப் பதிலாக எடுத்துக் கொண்டான். சரக் சக், சாக், சக், சக் அரவிந்த் புகுந்து விளையாட ஆரம்பித்தான். அப்துல் ரகீமின் தலைப்பகுதிக்கு வீசிக் கக்கத்தில் நிறுத்தினான்.

அடுத்து குசோரி பண்டோவைச் சுழற்றி முகத்தில் ஒரு அடி, கத்திக் கையில் ஒரு அடி. ஆவேசமாய்ச் சுழன்று பின்புறம் வயிற்றுப் பகுதியில் ஒரு அடி என்றவாறு சுழற்சி முறையில் தாராளமாகக் கொடுத்தவன் கடுமையான தாக்குதலின் பின்னர் தன்னாயுதத்தால் அப்துல் ரகீமின் இரு கத்திகளையும் சிதறடித்தான்.

மெட்சிபிசி எனப்படும் பொடியை அப்துல் ரகிம் அரவிந்தின் முகத்தில் வீச எத்தனித்ததை அறிந்தவன் குசாரி பண்டோவினால் பொடிவைத்திருந்த கையை நொறுக்கினான். கம்பியை அப்துல் ரகீமின் கழுத்தில் வீசி முறுக்கினான். முறுக்க முறுக்க உணவு மண்டலப் பாதையும் சுவாசப்பாதையும் ராட்சததனமாய் நசுக்கப்பட்டு அலறினான். கண்களிரண்டும் பிதுங்கிக் கீழே விழ எத்தனித்த அதே சமயம். சரமாரியாக உடலின் பின்புறம் தாக் கப்பட்டான்அப்துல் ரகீம். கழுத்தை நசுக்கும் குசாரி பண்டோவை உலக ஆவேசமாய் விலக்க பகீர தப் பிரயத்தனம் செய்தான். அதன் விளைவு.

முழு உந்து உந்தி அரவிந்தை இழுத்து சுழற்றி விட்டு தானும் அவனுடன் சாமர்சால்ட் அடித்து தாக்கும் இலக்கு தாண்டினான். அப்துல் ரகீமுடன் மல்லாந்து விழுந்த அரவிந் கங்காரு மகனாய்த் துள்ளி எழுந்தான். உந்தி ஓடிவந்து முகத்தில் ஒரு பேய்க்குத்து, தொடர்ந்து வயிற்றில் குத்து ஹேய்ய் என கூவித் தொடர்ந்து இரு சாமர் சாட்கள் அடித்து 3வது சாமர்சால்டில் அப்துல் ரகீமின் நெஞ்சில் உதைத்தான். தரையில் அப்துல் ரகீம் சிதறினான். எழுந்த அவனுக்கு முஷ்க்டிகுத்தை வேகமாய் பாய்ந்து பரிசளித்தான்.

அதேநொடியில் அவனது இடது பின்னங்காலை கெத்தி அவனுடலை மடக்கி அரவிந் தன் இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து அப்துல் ரகிமின் இதயத்தில் செருகினான். மீண்டும் மீண்டும்.... கடைசியாக. அவன் நெஞ்சைக் கிழித்தான். ட்ராகுலா பார்வை பாாத்து சரியும் அவனை கவனித்த வண்ணம் நின்ற போது பின்னால் அவனைப் பயங்கர ஆபத்து நெருங்கியது.

தோற்கவே மாட்டான் என நினைத்த ரகீம் மண்ணைக் கவ்வியதும் தளபதி கரீம்கான் வாளை உருவிய வண்ணம் அரவிந்தை நோக்கி பாய்ந்தான். அரவிந்தை நெருங்கும் ஆபத்தைக் கண்டு அர்ஜுன் அருகில் நின்ற விஜியிடம் வாளைப் பறித்துக் கொண்டு அர ங்கத்திற்குத் தாவினான்.

அரவிந்தை நோக்கி பாய்ந்த வாளை மின்னல் வேகத்தில் தடுத்து அதே விநாடியில் அரவிந்தை போகச் சொல்லிவிட்டு வாளைப் பின்புறம் இழுத்து மீண்டும் எதிரியின் வாளைநோக்கிப் பாய்ச்சினான். தளபதி கரீம் கான் தன் இடத்தை விட்டு நகரமால்ப் போராடினான். அர்ஜுனனின் வாள் எந்த திசையில் திரும்பி வந்தாலும் அதைச் சமாளிக்க தயாராய் இருந்தது கரீம் கானின் வாள். ஆசியாவிலேயே இணையற்ற வாள் வீரன் எனப் பிரசித்தி பெற்றவனும், பயிற்சியின் போதும், போரின் போதும் எந்த வீரனையும் சில விநாடிகளில் வாளை இழக்கச் செய்யக் கூடியவனான அர்ஜுன் இன்று தன்னையும் தேக்கி விடக் கூடிய ஓர் எதிரியை சந்தித்து விட்டதை உணர்ந்து எச்சரிகையுடனேயே போராடினான். கரீம் கானின் வாள் நேரம் ஏற ஏற கடுமையுடன் தன்னை நோக்கி வருவதையும் அவன் நின்ற இடத்தில் நின்று அனாயசமாய் போராடாமல் இடம் மாறி மாறி போரிடுவதையும் கண்ட அர்ஜுனும் தனது வாள் வித்தையைக் காட்டலானான். அவனும் இடம் மாறியும் கை மணிக் கட்டை அசுரவேகமாய் சுழற்றி எதிரியின் வாளின் பாதுகாப்புக்குள் ஏதுமொரு இடத்தில் நுளையவும் முயன்றான்.

அர்ஜுன் நேராக வாளை பாய்ச்சியும் உடலை சுழற்றிக் கொண்டும் போராடினான். அந்த புதுவித போராட்டத்தில் அர்ஜுனின் வாள் எங்கு வருகிறது என்பதை ஊகிக்கத் திணறினான் கரீம் கான். இருமுறை கரீமின் வாள் அர்ஜுனின் இடது தோளில் கீறிவிட்டது. இருப்பினும் நிதானத்தை இழக்காது போராடினான்.

எதிரியின் வாட் போர் முறையைக் கவனித்த அர்ஜுன் தன் குருநாதர் தனக்கு மட்டும் இரகசியமாகக் கற்பித்த முறையைகையாளலானான். கரீம் கானின் வாளை அவன் வாள் நேரிடையாக சந்திக்காமல் பக்கவாட்டில் சந்திக்கலானாது. இந்தப் போர் முறை கரீம் கானைத் திணறடித்தது. இது புதிதாக இருக்க அதைச் சில நொடிகளில் கற்றுக் கொண்ட கரீம் அதே முறையில் தானும் வாளைச்சுழற்றினான். நுனியில் தொட்ட வாட்கள் நடுவில் தொடலாயிற்று.

தொட்டு தொட்டு பின் வாங்கி மீண்டும் நீண்டன உராய்ந்தன.


(தொடரும்)



# கம்பியூட்டர்க் கல்வி



## இன்ரநெற் ரெலிபோன்



பண்டைக் காலத்தில் இருந்து மனிதர் தொலைதூர தொடர்புகளை பல வழிகளில் மேற்கொண்டு வந்திருக்கின்றனர். ஆனால் வேகமாக மாறிவரும் சமூக, பொருளாதார மாற்றங்கள் தொலைதூரத் தொடர்புகளை துரிதப்படுத்த வேண்டிய சூழலை ஏற்படுத்துகின்றன. தொலைதூரத் தொடர்புகள் தூரம், நேரம் ஆகியவற்றுடன் தொடர்புபட்டுள்ளதால் நாம் கூடிய செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. தொலைபேசியினூடு தொடர்பை ஏற்படுத்தும். போது இதை உணரக் கூடியதாக உள்ளது. ஆனால் குறைந்த செலவில் சாதாரண தொலைபேசியில் உரையாடுவதைப் போல், இன்ரநெற் (Internet) ஊடாக உரையாட முடிகிறது. இது எவ்வாறு சாத்தியப்படுகிறது என்பதைப் பார்ப்போம்.

இன்ரநெற் மூலமாக உலகெங்கும் பல கோடிக்கணக்கான கம்பியூட்டர்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. **E.Mail** எனப்படுகின்ற மின் அஞ்சல் மற்றும் இன்ரநெற் **Chat (Internet Chat)** முறைகளைக் கொண்டு நாங்கள் இன்ரநெற் வசதி வைத்திருக்கின்ற இன்னொரு நண்பருடன் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இன்ரநெற் ஊடாக பேசுவது இன்ரநெற் ரெலிபோன் **(Internet Telephone)**என்று அழைக்கப்படுகின்றது. இந்த முறையில் பேசுவதன் மூலம் ஏற்படும் செலவானது சாதாரண தொலைபேசிக் கட்டணத்தை விட மிகவும் இலாபகரமானது. ஆயினும் இன்ரநெற் இணப்பை உங்களுக்குத் தரும் இன்ரநெற் சேவை வழங்குநருக்கு நீங்கள் மாதாந்தம் கட்டணம் செலுத்த வேண்டும்.

இன்ரநெற் ரெலிபோனைப் பாவிப்பதற்கு உங்களிடமும், நீங்கள் தொடர்பு கொள்பவரிடமும் இன்ரநெற் இணைப்புள்ள கம்பியூட்டர்கள் இருத்தல் வேண்டும். அவற்றுடன் ஒரு ஒலிபெருக்கியும் **(Speaker)** ஒலிவாங்கியும் **(Micro Phone)** அவசியமாகும். இந்த ரெலிபோன் வசதியைப் பயன்படுத்துவதற்கு ஒரு சொவ்ற்வெயர் அவசியம். இந்த சொவ்ற்வொயரை இன்ரநெற்றில் இருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். பல்வேறு கம்பியூட்டர் ஸ்தாபனங்கள் இந்த சொவ்ற்வெயாரை இலவசமாக வழங்குகின்றன. இவற்றில் **Netscape** இன் **Cool Talk, Microsoft** இன் **Net Meeting, Vocal Tec** இன் **Internet Phone** போன்றவை பிரபலமானவை. **Microsoft** இனுடைய நெற் மீற்றிங்கை

**http://www.microsoft.com/netmeeting**

எனும் இன்ரநெற் முகவரியில் இருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த சொவ்ற்வெயாரை கம்பியூட்டரில் பதிவு செய்ததும் நீங்கள் இன்ரநெற் ரெலிபோனைப் பாவிக்கத் தயாராகி விடுவீர்கள். இத்துடன் உங்களிடம் கம்பியூட்டர் வீடியோ கமரா இருக்குமானால், உங்களை மற்றவர் பார்க்கக் கூடியதாகவும் இருக்கும். அதே போல் அவர்களையும் நீங்கள் பேசும் போது பார்த்துக் கொள்ளலாம். நெற்மீற்றிங்கை நீங்கள் திறக்கும் போது அடுத்த பக்கத்திலுள்ள படம் உங்கள் கம்பியூட்டர் மொனிற்றரில் தோன்றும்.

**Servers** என்ற பகுதியிலுள்ளவை, நீங்கள், உங்கள் பேச்சை ஆரம்பிப்பதற்குத் தேவையான மையங்களைக் காட்டும். அவற்றில் ஒன்றைத் தேர்வு செய்தால் அந்தமையத்தைப் பாவித்துப் பேசிக் கொண்டிருப்பவர்களின் விபரங்களை அது காட்டும். நீங்கள் அவர்களில் ஒருவருக்கு உங்களுடன் பேச வருமாறு அழைப்பு விடுக்கலாம். அவர் உங்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டால் நீங்கள் இருவரும் உரையாடலாம்.

(தொடரும்)

# சர்ச்சைக்குரிய ICC விளம்பர ஒப்பந்த விவகாரம்

# நாடா? நாணயமா?

குறித்த வயதில் கற்க வேண்டிய கல்வி; அக்கல்வியால் அடையக் கூடிய பட்டம், பதவி, பணம்; தனித்துவமான லௌகீக வாழ்க்கை; சம்பிரதாய பூர்வமான சமூகவாழ்வு போன்ற சராசரி மனிதனின் உலகியல் அனுபவங்களில் பெரும்பாலானவற்றை இழந்து இயல்பாக ஊறிய திறமையை மட்டுமே மூலதனமாக வைத்துத் தொழில்புரிபவர்கள் தான் விளையாட்டு வீரர்கள். அதிலும் கிரிக்கெட்வீரர்களைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. ஆடத்தொடங்கினால் ஓர் அரைநாட்பொழுது பூராவும் ஆட வேண்டும். டெஸ்ற் ஆட்டமென்றால் தொடர்ந்து ஐந்து தினங்கள், அவற்றிலும் பெரும்பாலானவை மாதக் கணக்கில் திட்டமிடப்பட்ட வெளியூர் விஜயங்களுடன் கூடிய போட்டிகள். சரி, அந்தச் சங்கடங்கள்தான் போகட்டும் என்றாலும் ஒரு ''காட்சை'' விட்டால் போதும், அணியிலிருந்து விரட்டப்படும் அந்தவீரர் பின்னர் அதிர்ஷ்டமும், கட்டையானவராக இருந்தால் ஆட்டத்தில் மட்டுமன்றி வாழ்க்கையிலுமே திவாலாக வேண்டியதுதான்! ஆக மொத்தத்தில் கிரிக்கெட்டும் உலகின் ஸ்திரமற்ற தொழில்களிலொன்றாகி விட்டது.

இந்நிலையில் தமது திறமைக்குக் கிடைத்த பிரபலம் என்ற ''போனஸை''உரிய முறையில் வீரர்கள் பயன்படுத்துவதில் தவறில்லை. விளம்பரங்களில் தொடங்கி விழா நிகழ்ச்சிகளைக் களைகட்டச் செய்வதுவரை தமக்குக் கிடைத்த ''பிரபலம்'' என்ற அங்கீகாரத்தை வருமானத்தை மையமாகவைத்து அவர்கள் பயன்படுத்தியே ஆகவேண்டும். ஏனெனில், இவ்வாறான ''ஓவர் ரைம்'' தொழில்பார்த்துக் காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளத் தவறிய பல முன்னாள் ஆட்டக்காரர்கள்(எல்லாவிதமான விளையாட்டுக்களையும் சேர்ந்தோர் தமது பின்னைய காலங்களில் பட்ட, படுகின்ற அவஸ்தைகள் இந்நாளைய வீரர்களிற்கு ஓர் அடுப்பங்கரைச் சூடாக அமைந்து விட்டது. அப்படிப் பார்க்கின்ற போது தாம் ஆடநினைக்கும் ஆட்டத்திற்கு உடல் ஒத்துழைக்க மறுக்கும் சமயம் ஓய்வடையப்போகும் வீரர்கள் (ஆற அமர அறுபது வயதுவரை கூட தொழில்புரிய முடியாது. பெரும்பாலும் சராசரியாக 35-40 இலேயே நிற்கவேண்டிவரும் என்பதையும் கவனிக்க!) தாம் விளையாடும் காலத்தில் சேர்க்க வேண்டியதைச் சேர்த்தேயாக வேண்டும். அதற்காக ஆட்டத்தை நிர்ணயித்து சூதாடுவதென்பது பொருளல்ல!

இவ்வாறான பிரச்சினைகளின் பின்னணியிலேயே அண்மையில் கிரிக்கெட் உலகையே கலக்கிய விளம்பர ஒப்பந்த விவகாரம் அமைந்திருந்தது. சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் (ICC) எழுப்பிய இந்தப் பிரச்சினை சரியான சமயத்தில் சூடுபிடித்து ஆட்ட நிர்ணயச்சதி ஒரு காலத்தில் முழு உலகையுமே கிரிக்கெட் பக்கம் திரும்ப வைத்ததுபோல் விசுவரூபமெடுத்தது. கிரிக்கெட் துறைசார் வல்லுனர்கள் பலரினதும் கடும் விமர்சனத்திற்குள்ளாயிருக்கும் இப்பிரச்சினை அப்படி எதைத்தான் அடிப்படையாக வைத்து இவ்வளவு பாரதூரமானதாக மாறியது?

## ஒப்பந்தக் குழப்பம்

இன்றைய விளையாட்டுக்களிலேயே முன்னிலை பெற்றுத் திகழ்வதும் ஆசியப் பிராந்திய நாடுகளில் வெளியாகவே உருவெடுத்துள்ளதுமான கிரிக்கெட் விளையாட்டை உலுப்பிய இவ்விடயம் 2000ஆம் ஆண்டின் மையப் பகுதிகளில் கால்கோளானது. **ICC இனால் ஒழுங்கு செய்யப்படும் சுற்றுப் போட்டிகளில் ICC உடன் ஒப்பந்தம் செய்துள்ள அனுசரனையாளர்களுடனான வர்த்தக உடன்படிக்கைகள் தவிர வேறு எவற்றிலும் குறித்த போட்டிக்கு முன்பாகவும் பின்பாகவும் முப்பது தினங்களிற்குச் சர்வதேச வீரர்கள் ஈடுபடக்கூடாது** என்பதே ICCயின் வர்த்தக ஒப்பந்தத்தின் மையக்கருத்தாகும். இந்த முடிவினை எடுத்த ICCயின் நிர்வாகக்குழு 2001 ஜூலை அளவில் அதன் விவரணத்தினை தனது உறுப்பு நாடுகளின் கிரிக்கெட் சபைகளிற்கு அறிவித்தது. அன்றிலிருந்து சுமார் ஒரு வருட காலம்வரை இப்பிரச்சினை ஆங்காங்கே சில ''புகைச்சல்'' களுடன் தீய்ந்து போயிருந்தது.

> **''வெல்லம் உண்பது யாரோ? விரலை நக்குவது யாரோவா?'' வீரர்களின் திறமையில் ICC இலாபம் காண்பதா எனக் கொதிப்போர் பலர் ஒரு புறம்;**
> **தேசத்திற்காக ஆடும் போது காசைப் பார்ப்பானேன் என்கின்ற கம்யூனிசிய வாதிகள் சிலர் மறுபுறம்.......**
> **ஆட்டம் நிர்ணய சதியின் பிற்பாடு கிரிக்கெட் உலகைக் கலக்கிய பெரிய சர்ச்சையே -**
> **ICC விளம்பர ஒப்பந்தம்!**

அதற்குப் பிரதான காரணம் வெள்ளம் வந்தபின் அணையைக் கட்டுவோம் எனச் சம்பந்தப்பட்ட அனைவரும் இருந்தமையே ஆகும்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ICC வெற்றிக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகச் சில மாதங்களிற்கு முன்பே மேற்படி விவகாரத்தின் தாற்பரியத்தை எல்லோரும் உணரத் தொடங்கினர். ''மினி உலகக் கிண்ணப் போட்டி'' என வர்ணிக்கப்படும் அவ்வாட்டத்தைத் தொடர்ந்து 2003இல் உலகக் கிண்ணப் போட்டிகளும் நெருங்கியதனால் ICCயின் ஒப்பந்தத்தின் மீதான விழிப்புணர்வு அதிகமாகத் தொடங்கியது. உண்மையைச் சொல்வதானால், பல முன்னணி வீரர்கள் கூட இந்த உடன்படிக்கை பற்றிய முழுமையான விபரங்களை மிக அண்மையிலேயே புரிந்து கொண்டனர்!

இவ்வாறு ஒப்பந்த விதி முறைகள் கைச்சாத்தாகிய காலத்திலிருந்து இற்றைவரை ICC ஒழுங்கு செய்யும் சுற்றுப் போட்டிகள் நடைபெறாதிருந்தமையினால் அடங்கிப் போயிருந்த சர்ச்சை ICC சாம்பியன்ஷிப் நெருங்கியதைத் தொடர்ந்து பீறிட்டுக் கிளம்பியது. ICC உடன்படிக்கைக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்கள் எழும்பத் தொடங்கின. ஒவ்வொரு நாட்டு அணிகளும் என்னதான் செய்யப் போகின்றன என்பதில் ஆரம்பித்த எதிர்பார்ப்புக்கள், ICC கிண்ணப் போட்டிகள் இம்முறை நடைபெறுமா என்ற அங்கலாய்ப்புக்கள் வரை போய்நின்றன.

## அணிகளின் நிலைப்பாடு

குறித்த IICயின் ஒப்பந்தம் வீரர்களின் தனிப்பட்ட நலன்களிற்கு எதிரானதுதான் என்ற ஏகோபித்த எண்ணத்தையே அனேகமானோர் கொண்டிருந்த நிலையில் இந்த உடன்படிக்கையை ஏற்பதா, நிராகரிப்பதா என்பதில் உலக அணிகள் திணறிய விதங்கள் சுவாரசியமானவை. பாரம்பரியமும் தரமும் மிக்க ஏனைய பத்து நாடுகளுடன் போட்டியிடக் கிடைத்ததையே பாக்கியமாகக் கருதி பங்களாதேசும் ஒல்லாந்தும் அடங்கிக் கொண்டனர். சிம்பாப்வே அணிக்கோ நிறத்துவேசப் பிரச்சினையின் முன் இது அடிபட்டுப்போக, கென்யாவும் இவ்விவகாரம் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. (மடியில் கனமில்லையோ என்னவோ!)

ஏனைய எட்டு அணிகளில் பாகிஸ்தானின் போக்கு விசித்திரமாயிருந்தது. பிரபலமான அணிகளுள் ICCயின் ஒப்பந்த நிபந்தனைக்கு மறுபேச்சில்லாமல் ''ஓ'' போட்டது பாகிஸ்தான் மட்டுமே. ஜம்மு-காஷ்மீர் மக்களிற்குச் செய்த பாவமோ, பின்லேடனிற்கு ஆதரவளித்துத் தேடிய புண்ணியமோ பாகிஸ்தானில் அண்மைக் காலங்களாக வேறுநாட்டு அணிகளின் சுற்றுப் பயணங்கள் இடம்பெறவில்லை. என்னதான் நடக்கும் நடக்கட்டுமே! என வருகைதந்த நியூசிலாந்து 'தமது தங்குமிடத்திற்கருகில் நடந்த குண்டுவெடிப்பைத் தொடர்ந்து துண்டைக் காணோம், துணியைக் காணோமென விமானமேறினர். அதன்பிற்பாடு நடுநிலையான இடங்களில் போட்டிகள் இடம்பெற்றதனால் ''காய்ந்து'' போயிருந்த பாகிஸ்தானியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, போட்டியில் பங்குபற்றுவதற்காக ICC வீசும் 165 000 டொலர் ரொட்டியை ''லபக்'' கென்று கௌவிப்பிடிப்பதற்காய் ICC சொல்வதற்கெல்லாம் ஜால்ரா போட்டது!

மறுபுறம் ஏனைய அணிகள் ஆரம்பத்தில் முற்றுமுழுதாகவே ICC உடன்படிக்கையை நிராகரித்தன. சரியான பரிபாலனமின்றித் தூர்ந்துபோய் தற்போது புனரமைக்கப்பட்டுள்ள மேற்கிந்தியக் கிரிக்கெட்சபை கூட வீரர்களின் நலன்கருதி ICCஇற்கு மண்டியிட மறுத்தது. இந்த உடன்படிக்கை விவகாரத்தின் கதாநாயகனாகக் கருதப்பட்ட இந்திய அணியை முதன்மைப்படுத்தி இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்றவையெல்லாம் ICC உடன் முரண்டு பிடித்தன. ICCயும் தனது நிலையிலிருந்து தளர மறுத்ததைத் தொடர்ந்து பிரச்சினை அதன் உச்சக் கட்டத்தை அடைந்தது. அச்சமயம் பார்த்து ஆஸ்திரேலியக் கிரிக்கெட்சபை ஓர் ஆலோசனையை முன்வைத்தது.

அதாவது ICC யின் அனுசரனையாளர்கள் தவிர்ந்த வேறு நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களில் குறித்த அந்தப் போட்டிக் காலங்களில் ஏற்படும் இழப்பை வீரர்களிற்கு அவர்களின் கிரிக்கெட் சபைகள் வழங்கலாம் என்பதே அந்த யோசனையாகும். இதற்கு இங்கிலாந்து, நியூசிலாந்து ஆதரவு தெரிவித்துப் பின்பற்ற மேற்கிந்தியாவும் தனது அணி வீரர்களுடன் உரையாடி ஏதோ சமாளித்து முடித்தது. இலங்கை வீரர்களோ போட்டியில் பங்குபற்ற ஒதுக்கப்படும் தொகையில் 30% தமக்குத் தரப்படவேண்டுமென நிபந்தனை விதித்து, திக்குமுக்காட வைத்து ஒருவாறு சமாதானமாகினர். தென்னாபிரிக்கா அதன் களத் தடுப்புப்போலவே தீர்மானமெடுப்பதிலும் பலமுறை ''பல்டி''களும் ''டைவ்''வுகளுமாய் அடித்து ஒருவாறு தேறிக்கொண்டனர். ஆக, இந்தியா மட்டும் ''அம்போ''வென இறுதியில் மலங்க விழித்தவாறு நின்றது.

## இந்தியா பட்டபாடு!

விவாதத்திற்குரிய இந்த வர்த்தக ஒப்பந்தத்தால் உண்மையிலேயே அதிகம் திணறியவர்கள் இந்தியக் கிரிக்கெட் துறையினரே அதுமட்டுமன்றி எதற்கும் துணிந்து நின்று ICCயினையே மிரட்டினர் இந்திய வீரர்கள். குறிப்பிட்ட உடன்படிக்கை விதியின பிரகாரம் அதிகம் பாதிக்கப்பட்டவர்களும் இந்திய வீரர்களே முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களையெல்லாம் துவம்சம் செய்யவல்ல ரெண்டுல்கர், கங்குலி, ட்ராவிட் போன்றோர் ''கிரிட்கெட் எமது மதம்; சச்சின் எமது கடவுள்'' என்ற தீவிரப் போக்குடைய பாரத இரசிகர்களின் நம்பிக்கை நட்சத்திரங்கள் - ''பௌன்சர்களையும் ஜோர்க்கர்களையும்'' எதிர்கொள்ளத் தயங்கினார்கள்.

இந்தநிலையில் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற் கொண்டிருந்த இந்திய வீரர்கள் குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதில்லை என ஏகமனதாகத் தீர்மானித்தனர். அத்தோடு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு தலையிடி தொடங்கியது. உடனடியாக அவ்வமைப்பின் (BCCI) செயலாளர் நிரஞ்சன்ஷா இங்கிலாந்திற்குப் பறந்து வீரர்களுடன் கலந்தார். தொடர்ந்து 30நாட்கள் என்ற எல்லையை 17நாட்களாகக் குறைக்குமாறு வீரர்கள் போட்ட நிபந்தனையை ICC ஏற்க மறுத்தது. சரி, பார்ப்போம் ஒருகை! என வீரர்களும் துணிந்துவிட, வீரர்களா? ICCயா? என மாட்டிக் கொண்டு முழித்தது BCCI. சாம்பியன்ஷிப் போட்டிகள் நெருங்கிக் கொண்டிருந்ததனால் வேறுவழியின்றி இரண்டாந்தர அணியொன்றைத் தெரிவு செய்து வைத்துக் கொண்டு வீரர்களிற்கும் ICC இற்குமிடையே சமரசம் செய்து கொண்டிருந்தார் BCCI தலைவர் டால்மியா.


ஆஸ்திரேலியாவின் ஆலோசனையும் இந்தியாவைப் பொறுத்தமட்டில் நடைமுறைச் சாத்தியமற்றிருந்தது. விளம்பர ஒப்பந்தங்களிற்கான இழப்பீடாக ரெண்டுல்கரிற்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகையே BCCI இனை ஒட்டாண்டி ஆக்கிவிடும் போல் இருந்தது. இவ்வாறான சிக்கல்களின் மத்தியில் ஆட்டத்தின் தரம் கருதி இந்திய வீரர்கள் மனம் மாறுவார்கள் போன்றிருந்த நேரத்தில் ICC சுற்றுப்போட்டியில் ஆடாதவர்கள் அடுத்த உலகக் கிண்ணத்திலும்பங்குபற்ற முடியாதென்ற எச்சரிக்கையை ICC விடுத்தது. இவ்வறிவித்தல் இந்திய வீரர்களை மேலும் சீண்டி அதிக உள எரிச்சலை ஏற்படுத்தியது. ஆனாலும் அச்சமயம் லீட்ஸில் நடந்த இங்கிலாந்துடனான மூன்றாவது டெஸ்ற்றில் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் மூவரினதும் கொழுத்த சதங்களுடன் வரலாறு காணாப் பெருவெற்றி பெற்றது இந்தியா. இதன் மூலம் இதுவரை இருமனதுடன் இருந்தவர்களைக் கூட தமது பக்கம ஈர்த்து ஏகோபித்த ஆதரவை இந்திய வீரர்கள் பெற்றனர். சகர்கள் வரை இருந்த பக்கபலம், ஒற்றுமையும் திறமையும் கொடுத்த உளத்திடம் ஆகியவற்றால் தம்மைப் புறக்கணிக்கும் ICC இனைச்சட்டரீதியாகச் சந்திப்போம் என்ற குண்டை வீரர்கள் தூக்கிப் போட்டனர். இந்த நடவடிக்கை இதுவரை அசையமறுத்த ICCயை ஒரு கணம் அசரவைத்தது. ஏற்கனவே தென்னாபிரிக்காவில் நடந்த டெஸ்ற் போட்டியொன்றில் சில வீரர்களிற்கெதிராகத் தேவைக்கு அதிகமாகவே நடுவர் தண்டனை வழங்கினார் என்பது இந்தியப் பாராளுமன்றத்திலேயே எதிரொலித்திருந்தது. இவ்வாறான சம்பவங்கள் அணிக்குத் திறமையுண்டோ இல்லையோ இந்தியக் கிரிக்கெட் துறைக்கிருக்கும் செல்வாக்கை ICCஇற்கு அப்போதே கோடிகாட்டியிருந்தன.

க. சேந்தன்

ஆகவே வீரர்களுடன் மேலும் பகைக்க விரும்பாத ICC, டுபாயில் நிகழ்நத ICC நிர்வாகக்குழுக் கூட்டத்தில் ஜக்மோகன் டால்மியா விடுத்த கோரிக்கையை வாய்ப்பாகப் பயன்படுத்தி இந்திய வீரர்களுடன் கலந்தாலோசிக்க இணங்கியது. அதன் பிரகாரம் முன்னணி வீரர்கள் ஐவருடன் ICC நிறைவேற்று அதிகாரி மால்கம் ஸ்பீட் இங்கிலாந்தில் பேச்சுக்கள் நடாத்தினார். மாதக் கணக்காக இழுபறிப்பட்ட பிணக்கு சில மணித்தியாலங்களில் இரு தரப்பும் மனம் விட்டுப் பேசியதன்மூலம் சுமுக நிலைக்கு வந்தது. ICC தலைமையின் உள்ளத்தைத் தொடும் வண்ணம் தம்பக்கமிருந்த நியாயத்தை இந்திய வீரர்கள் புரிய வைத்திருக்க வேண்டும். பேச்சுக்கள் முடிந்து குறுகிய காலத்திலேயே வீரர்கள் முன்வைத்த கோரிக்கைகளையும் உள்வாங்கி ICC தனது நிலைப்பாட்டைத் தளர்த்திப் பிரச்சினையை முடிவிற்குக் கொணர்ந்தது.

எப்படியோ தற்போது சர்ச்சைகள் அடங்கி போட்டிகள் ஆரம்பித்து விட்டிருந்தாலும் இவ்விடயம் ஒரு நீறுபூத்த நெருப்பாகவே இருக்கும். எனவே மறுபடியும் அசட்டையாக இருந்து விட்டு உலகக் கிண்ணம் நெருங்கும்போது அவதிப்படுவது ஆரோக்கியமானதல்ல. அதற்கிடையில் முறையில் அணுகி, வீரர்களின் நலன்களைப் பாதிக்காத வகையில் தீர்த்துகொள்வதே சாதுரியமானதாகும். அதுவே பாரம்பரியமும் பெருமையும் மிக்க கிரிக்கெட் விளையாட்டின் நீடித்த நிலவுகைக்கு உத்தரவாதம் என்பது இரசிகர்களின் ஏகோபித்த எண்ணமாகும்.

* * *




ICC இற்கே சவாலான இந்திய வீரர்கள்

## ஜோக்ஸ்



ஆசிரியர் :- பட்டம் பறக்கிறது. இது என்ன காலம்?

மாணவன் :- காற்றுக் காலம் சார்.



யானைக்கால் வியாதிக்கு மருந்து சாப்பிடா விட்டா என்ன நடக்கும்?

தும்பிக்கை முளைக்கும்.




## படம் பார் பாடம் படி







முதலையின் மீது படுத்து ஆனந்தமாக உறங்கிக் கொண்டிருக்கும் இந்த சிறுவனின் பெயர் வாட்னா. தாய்லாந்தில் வாழும் இந்த பத்து வயதுச் சிறுவன் உறங்கிக் கொண்டிருப்பது ஒரு மீட்டர் நீளமும், 40 கிலோ எடையும் கொண்ட முதலையின் மீது. வாட்னாவின் தந்தை, மூன்று வருடங்களுக்கு முன்பு இந்த முதலையைக் கண்டெடுத்து வீட்டில் வளர்த்து வருகிறார்.



*இந்தப் புகைப்படம் வாஷிங்டனில் ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நதியின் அருகில் எடுக்கப்பட்டது. துள்ளி ஓடும் இந்தப் புள்ளி மான் இவ்வளவு வேகமாக எங்கே போகிறது...*



சீனாவின் பீஜிங் நகரில், உள்ள ஒரு கடையின் வாசலில் வைக்கப் பட்டுள்ள சிலையைப் போன்று பாவனை செய்யும் சீனக்குழந்தை.

*லண்டனின் மத்தியப் பகுதியில் நடைபெற்ற குழந்தைக[ள்] தினப் பேரணியில் பல்லாயிரக்கணக் கான குழந்தைகள் பங்கேற்ற னர்.பேரணியில் கலந்து கொண் ட குழந்தைகள் அவரவர்களின் திறமைகளை வெளிப்படுத்தினர்.*





ம.ஜனகன்
யாழ். மத்திய கல்லூரி.



க.குபேந்திரன்
யா. கொ.அ.மி.த.க பாடசாலை.

## விடுகதை

- இருட்டு வீட்டுக்குள் குருட்டு வெளிச்சம் அது என்ன?
  *சுருட்டு*
- அம்மா கொடுத்த தட்டில் நீர் விட்டால் நிற்காது அது என்ன?
  *தாமரை இலை*
- வெள்ளைப் பாம்பு கல்லைத் தூக்குது அது என்ன?
  *புடோலங்காய்*

ந. சஞ்சேயன்,
யா.சா. இந்துக்கல்லூரி

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப் பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத் தயார்தானே?



வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

## அறம் வெல்லும்

தை மாதம் மெல்லப் பிறக்குதம்மா
தரணியும் நன்றாய்ச் சிறக்குதம்மா
வையகம் பனியில் நனையுதம்மா
வெய்யோன் ஒளியைப் பொழியுதம்மா

கோவிலிற் சங்கொலி முழங்குதம்மா
குழந்தைகள் பண்ணிசை கேட்குதம்மா
நாவினிற் செந்தமிழ் இனிக்குதம்மா
நாவலரை நினை வூட்டுதம்மா

சுற்றாடல் எங்கும் மலர்களம்மா
சுகந்தம் மூக்கைத் துளைக்குதம்மா
பற்றைகள் முழுதும் பழங்களம்மா
பார்க்கப் பார்க்க வாயூறுதம்மா

வயலிற் கதிர்கள் சிரிக்குதம்மா
வளைந்து மண்ணை முத்தாடுதம்மா
அயலில் மந்தைகள் மேயுதம்மா
ஆறு சலசலத் தோடுதம்மா

கடலிற் படகு விரையுதம்மா
களிப்பில் அலைமே லெழுகுதம்மா
படகில் மீன்கள் நிறையுதம்மா
பணமும் மடியிலே சேருதம்மா

அல்லல் இனிமேல் இல்லை யென்றே
அழகுப் பட்சிகள் பாடுதம்மா
வெல்லுவ தறமேதான் என்றென்றும்
விண்ணிலிருந் திவ்வோசை வருகுதம்மா.

*சாந்தன் சத்தியகீர்த்தி,அரியாலை.*

## சாரணியத் துளிகள்

- சாரணியத்தின் தந்தை ரொபேட் ஸ்ரீவின்சன் ஸ்மித் பேடன்பவல் ஆவார்.
- 1907இல் பிறவுன்சி தீவில் சாரணியம் ஆரம்பிக்கப்பட்டது.
- தற்போதைய சாரணியத்தலைமையகம் 1968 முதல் சுவிஸ் ஜெனீவாவில் இயங்கிவருகிறது.
- இன்று உலகில் 218 நாடுகளில் இயங்கி வருகிறது.
- இலங்கையில் 1996ஆம் ஆண்டில் மட்டும் 25,290 சாரணர்கள் இருந்துள்ளனர்.
- தற்போது உலகில் 25 மில்லியன் சாரணர்கள் உள்ளனர்.

*ஸ்ரீ. ஆனந்தஸ்ரீ, யா. இந்துக் கல்லூரி.*

## உலக நாடுகள் சிலவற்றின் தேசியப் பறவைகளின் விபரம் வருமாறு

| | |
|---|---|
| இலங்கை | - காட்டுக் கோழி |
| இந்தியா | - ஆண்மயில் |
| டென்மார்க் | - வானம்பாடி |
| கனடா | - வாத்து |
| ஜேர்மனி | - வெள்ளைக் கொக்கு |
| கொலம்பியா | - பருந்து |
| அமெரிக்கா | - கழுகு |
| தென்னாபிரிக்கா | - நீலக்கொக்கு |
| இங்கிலாந்து | - ரொபின |

வின்சன்ட்.டெபோ,
யா.கன்னியர் மடமகா வித்தியாலயம்.

## இளமையிற் கல்!

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் தந்தை அவனைப் படிக்க வைக்கப் பல வகையில் முயன்றார். ஆனால் அவனோ படிப்பில் சிறிதும் நாட்டமின்றி இருந்தான்.

இப்படியே சில ஆண்டுகள் கழிந்தன. அவன் கல்வி அறிவு இல்லாதவனாகவே வளர்ந்தான். இதனால் ஊர் மக்களும், உற்றார் உறவினர்களும் அவனைக் கேலியாகப் பேசினார்கள்.

இதைக் கேட்டு மனம் உடைந்த அவன், 'கடுந்தவம் புரிந்தாவது கல்வி அறிவு பெற்றுத் திரும்புவேன்' என்று உறுதி செய்தான்.

காட்டிற்குச் சென்ற அவன் அங்கே தவத்தில் ஆழ்ந்தான். அருகே கங்கையாறு ஓடிக் கொண்டிருந்தது.

அவனுக்கு நல்லறிவை உணர்த்த வேண்டுமென்று நினைத்தான் இந்திரன். ஒரு முதிய அந்தணன் வடிவம் கொண்டு அவனிருக்கும் இடத்திற்கு அருகே அமர்ந்தான். தன் கையால் மண்ணை அள்ளி அள்ளிக் கங்கையாற்றில் போட்டுக் கொண்டிருந்தான்.

இதைக் கண்ட அவன் ''ஐயா! எதற்காக இப்படி மண்ணை அள்ளி அள்ளிப் போடுகின்றீர்கள்?'' என்று கேட்டான்.

அதற்கு அந்தணன்



''மனிதர்களும், விலங்குகளும் ஆற்றைக் கடப்பதற்குப் பாலம் கட்டுவதற்காக மண்ணைப் போட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று பதில் தந்தான்.

''வெறும் மணலால் கங்கையில் பாலம் கட்ட முடியுமா? நீங்கள் போடும் மண்ணை எல்லாம் தண்ணீர் அடித்துக் கொண்டு சென்றிருக்குமே. முதியவரான நீர் அறிவில்லாத இந்தச் செயலைச் செய்யலாமா? இனியாவது ஏதாவது பயனுள்ள செயலில் ஈடுபடுங்கள்'' என்றான் அவன்.

அந்தணன் உண்மையான இந்திரன் ஆனான். ''நீயும் என்னைப் போலப் பயனற்ற செயல் தானே செய்தாய். எழுத்துக்களைத் தெரிந்து கொள்ளாமலும், பாடம் படிக்காமலும், ஆசிரியரிடம் கேட்காமலும் வெறும் தவம் இருப்பதால் அறிவு கிடைக்காது. இன்னும் காலம் கடந்து விடவில்லை. நல்ல ஆசிரியரை நாடி முனைப்புடன் கல்வி கற்க முயற்சி செய். நீ சிறந்த அறிஞனாவாய்'' என்று அவனை நோக்கிக் கூறி மறைந்தான்.

**சிறுவர்களே! கதையைப் படித்தீர்களா? நீங்களும் இளமையிலேயே கற்கவேண்டியவற்றைத் தேடிக்கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் கல்வி என்றும் உங்களிற்குக் கைகொடுக்கும்.**


*தொகுப்பு:- சுஜா*

## சென்றவார விவேகப் புதிருக்கான விடைகள்

| | | |
|---|---|---|
| 8 | 1 | 6 |
| 3 | 5 | 7 |
| 4 | 9 | 2 |

*ந.சஞ்சேயன், யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி.*

## இவ்வார கணிதப்புதிர்



1-8 வரையான எண்களைப் பயன்படுத்தி ஒரு எண்ணை ஒரு முறை மாத்திரம் உபயோகித்து அடுத்து வரும் எண்கள் பக்கத்தில் வராது காலியாக உள்ள கட்டங்களைப் பூர்த்தி செய்ய முயலுங்கள் பார்க்கலாம்.

*வி.நிரஞ்சன், புனித பத்திரிசியார் கல்லூரி.*

## சிந்தனைத் துளிகள்

- அடக்கம் ஆயிரம் பொன் - தமிழ் நாட்டுப் பழமொழி
- உரிமை இருந்தால் தைரியம் வந்து விடும் - சீனப்பழமொழி
- பண்பில்லாதவன் ஆடையில்லாதவன் - இங்கிலாந்துப் பழமொழி
- வல்லவன் மணலிலும் பம்பரம் விடுவான் - யப்பானியப் பழமொழி
- வாழ்க்கையில் வாழ்வதைக் காட்டிலும் செயல்தான் அவசியம் பிரான்சியப் பழமொழி
- இனிமையாகப் பேசினால் கெட்ட சரக்கும் விற்றுப் போகும் ஜெர்மனியப் பழமொழி

ர.பிரணவா,
யா.அருணோதயக் கல்லூரி.

**வைத்தியர்களில் சிலர் முதியவர்களை மிகவும் கீழ்த் தரமாக மதிப்பது ஏன் அங்கிள்?**

தற்கால உலகில் ஜாதி, மத பேதம கலைந்து பணம், பதவி பேதம உருவாகி விட்டதே. இது எப்போது கலையும்?

❖ **கலையவே மாட்டாது.**

முதலாம்முறை தவறு செய்யும் போது மனிதன், இரண்டாம் முறை தவறு செய்யும் போது முட்டாள். மூன்றாம் முறை தவறு செய்தால் அவன் யார்?

❖ **மிருகம்.**

வாய்க்கு வந்தபடி பேசி பிறரை இம்சைப்படுத்துபவர்கள் பற்றி....?

❖ **கனியிருக்கக் காய் தின்கிறார்கள்.**

வியாசரே! அநேகமான தனியார் கல்வி நிறுவனங்கள் ஆட்களற்ற வீடுகளிலே நடைபெறக் காரணம் யாது?

❖ **கல்வி கற்பதற்குத் தனிமை அவசியமென்பதை அறியவில்லையா? முன்பெல்லாம் முனி வர்கள் காடுகளில் இருந்து தானே கற்பித்தார்கள்.**

அந்தக்கால வியாசர் மகா பாரதம் எழுதினாராமே.... நீர் என்ன எழுதிக் கிழிக்கிறீர்?



❖ **சிலர் எழுதிக் கிழிக்கிறார்கள் நான் கிழித்து எழுதுகிறேன்.**

*ராஜ"* *வேலணை*

ஊரில் இருப்பவர்களிற்கெல்லாம் 'சமாதான நீதவான்' பட்டம் கிடைக்கிறது. உமக்கும் கிடைத்திருக்கிறதா?

❖ **எல்லோரும் சமாதான நீதவானென்றால் சத்தியக் கடதாசி வேண்டுவது யார்?**

மனிதர்களின் தேசிய குணம் எது?

❖ **அட இதுகூடத் தெரியாதா? தம்மை உயர்த்தி மற்றவனை தாழ்த்துவதுதான்.**

*தர்மேந்திரா* *நயான்மார்கட்டு*

வியாசர் ஐயா! ஆண்களின் ஆடைகளைப் பெண்கள் அணியும போதுபெண்களின் ஆடைகளை ஆண்கள் அணிந்தால் நிலமை என்னவாகும்?



❖ **ஐயா! நீர் நாஸாவில் இருக்க வேண்டியவர்.**

வியாசர் அங்கிள! "கடமையைச் செய்பலனை எதிர்பாராதே" என்று பகவான் கூறியுள்ள போதும பலர் பலனையே முக்கியமாக எதிர்பார்க்கின்றார்களே?

❖ **பகவானின் கருத்து இன்றைய பொருளாதாரத்திற்குப் பொருந்தாது.**

அடுத்த வீட்டுப் பெண்ணை நான் விரும்புகிறேன் அவள் என்னை விரும்புகிறாளா என அறிய என்ன செய்யலாம்?

❖ **காலில் செருப்பு இல்லாத நேரம் பார்த்து I LOVE YOU சொல்லிப் பாரும்.**

*து.சோதிநாதன்* *யாழ்*

வியா மாமா A9 பாதை திறப்பால் குடாநாட்டிற்கு நன்மை கிடைத்தஅதே நேரம் அங்கிருந்து வருவோர் பல தீய செயல்களையும் புரிகின்றார்களே?

❖ **இங்கிருந்து அங்கு செல்வோர் மட்டும் என்னவாம்.**

வியாசார் அங்கிள்! நீங்கள் விநாயகரை நேரிற் கண்ட சமயம் ஏதாவது வரம் கேட்டீரா?

❖ **விடுவேனா! ஈழத்தமிழராய் பிறவாதிருக்க வரம் தரல் வேண்டுமென வேண்டிக்கொண்டேன்.**

கடவுள் நமக்கென விசேட கொடைகளைத் தந்திருப்பினும் வாழ்க்கை வெறுக்கிறதே. ஏன் அங்கிள்?

❖ **கடவுள் என்றொருவர் இருப்பதை மறந்து நடப்பதால்.**

## வியாசரின் பதில்கள்

**வியாசர் ஐயா! ஆண்களின் ஆடைகளைப் பெண் கள் அணியும் போது பெண்களின் ஆடைகளை ஆண்கள் அணிந்தால் நிலைமை என்னவாகும்?**

*R.சங்கீதா* *கொடிகாமம்*

வியாசர் சார்! காதலித்துத் திருமணம் செய்து கொண்ட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது ஏன்?

❖ **அவர்கள் கண்ட அனுபவம் அதனால் எதிர்க்கிறார்கள்.**

*லேகா* *கிளிநொச்சி*

தமிழர் பிரச்சினைக்கு பிரதமரின் தீர்வுதான் என்ன?

❖ **அமெரிக்கா எதைச் சொல்லியதோ அதுதான் தீர்வு.**

*கிருஷ்சின்* *ஆனையூர்*

பகைவர்களை மன்னித்து விடலாமா?

❖ **மன்னிக்கலாம் ஆனால் மறுக்கக் கூடாது.**

மனிதனுக்கு நிரந்தர நிம்மதி கிடைப்பது எப்போது அங்கிள்?

❖ **அமரத்துவம் பதவி கிடைக்கும் போது.**

வியாசரே! உமது ஒப்பீட்டு அறிவுக்கு ஒரு சோதனை பெண் களையும் நிலவையும் ஒப்பிடும் பார்க்கலாம்?



❖ **சும்மா போய்யா....! பெண்களை ஒப்பிட்ட கவலையால் நிலவு தேய்ந்து போகிறது.**

உயர்ந்த மனிதனுக்கும், தாழ்ந்த மனிதனுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?

❖ **உயர்ந்தோன் தாழ்ந்தவனையும் மதிப்பான். தாழ்ந்தவன் உயர்ந்தவனையும் தாழ்த்துவான்.**

சில வைத்தியர்கள் நோயாளிகளைப் பார்த்து 'முட்டாதே தள்ளி நில்' என்று கூறுவது ஏன்?

❖ **நோயாளிகள் "முட்டப் போனால்" வேறு என்ன சொல்வதாம்.**

*ஆர்.சுலோசனா* *பருத்தித்துறை*

வைத்தியர்களில் சிலர் முதியவர்களை மிகவும் கீழ்த்தரமாக மதிப்பது ஏன் அங்கிள்?



❖ **மோட்சறிக்கு போக வேண்டியவர்கள் மருந்தெடுக்க வந்து விட்டார்கள்என்ற கோபத்தால்.**

**வியாசரே! உமது ஒப்பீட்டு அறிவுக்கு ஒரு சோதனை. பெண்களையும், நிலவையும் ஒப்பிடும் பார்க்கலாம்?**


*T.தனரூபினி* *பருத்தித்துறை*

கோபங்கள் உள்ள நட்பில் தான் உரிமைகள் அதிகம் இருக்கும் என்கிறார்களே. இதைப் பற்றி உங்கள் கருத்து....?

❖ **கோபத்தால் நட்புக் குலையக் கூடாதென்பதற்காக சொல்லப்பட்ட (வெறும்) வாசகம்.**

*து.சோதிநாதன்* *யாழ்*

அன்பின் வியாசரே! தற்போது பெண்கள் வீதிகளில் நிற்பது மட்டுமல்லாது வீதியால் செல்லும் ஆண்களையும் கிண்டல் செய்வதைக் காண முடிகின்றதே?



❖ **ஆண்கள் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் எனக் கோஷமிடும் புதிய பாரதி விரைவில் தோன்றுவான்.**

*பாரதி* *கொக்குவில்*

ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டால் அவரின் நிலை என்னவாகும்?

❖ **காரைக்காலம்மையார் பேயுருப் பெற்ற காதை தெரியாத உமக்கு.**

ரஜனியின் ஸ்ரைலில் பெண்கள் நடித்தால் எப்படி இருக்கும்?

❖ **தியேட்டர் காலியாக இருக்கும்.**

*T.அனோஜினி* *ஸ்ரான்லிவீதி*

வியாசர் அங்கிள் சீதனம் இல்லாமல் பெண் கேட்கும் வெளிநாட்டவர் பற்றி.....?

❖ **வீட்டு வேலை செய்வதற்காக இருக்கலாம் கவனம்.**

*வே.சஞ்சீவன்* *ஓட்டுமடம*

வியாசரே! பெண்கள் மென்மையானவர்களாகவும், ஆண்கள் வலிமையானவர்களாகவும் படைக்கப்பட்டிருப்பதேன்?

❖ **பெண்கள் மென்மையானவர்கள் என்ற கற்பனைக் கதையை இன்னமுமா நீர் நம்புகிறீர்.**

*சிவா* *நல்லூர்*

தாய்லாந்துப் பேச்சுவார்த்தை அனைவரிற்கும் நிரந்தர சமாதானத்தைப் பெற்றுத தருமா வியாசரே?

❖ **சமாதானத்தைப் பெற்றுத் தரும் ஆனால் அனைவருக்குமென்பது சந்தேகமே.**


*அஹமட்* *யாழ்*

யாழ் குடாநாட்டில் தற்போது மலிந்து போயிருப்பது.........?

❖ **கலாசார சீரழிவு**

**அன்பின் வியாசரே! தற்போது பெண்கள் வீதிகளில் நிற்பது மட்டுமல்லாது வீதியால் செல்லும் ஆண்களையும் கிண்டல் செய்வதைக் காண முடிகின்றதே?**

## வாசகர் இதயநாதம்



சங்குநாதமே
உன்னை நாம் பிரதி
திங்கள்
தோறும் தேடுவது
உனக்குத் தெரியாதா?
நல்லைக் குமரனின்
திருவிழாவிற்கு நீயும்
சென்றாயா..?
உன் ஆக்கங்கள்
காணாது நாம் கலங்கி
விட்டோமே அது
உனக்குப் புரியாதா
சங்குநாதமே வாசகரை
ஏமாற்றாது திங்கள்
தோறும் எம் கைகளில்
தவழ்வாயா...?

சு.கிரிஷா,
கிளிநொச்சி.

சங்குநாதமே!
நீ தரும் அனைத்து
ஆக்கங்களும் அருமை
ஆனாலும் ஒரு
வேண்டுகோள்
உன்னுடைய
ஆக்கங்கள் பொது அறிவு
விடயங்களையும்
சேர்த்துப் கொள்ளலாமே.
ஒவ்வொரு திங்களும்
உன்னை எதிர்பார்த்துக்
காத்திருப்போம்.

சொ.சசிகாந்தன்,
ஏழாலை மேற்கு.

இளம் எழுத்தாளர்களுக்கு புதிய
களம் அமைத்து.....
வளம் மிகு ஆக்கங்களை
வளம் மகிழ்வோடு தருகின்றாய்

இளமையாய் என்றென்றும்
இனிமையாய் நீ ஒலித்த
புதுமையாய் பல ஆக்கம்
இனிமையாய் நீ தருவாய்

ஆக்கம் பல எழுதும்
ஏக்கம் கொண்டோர்க்கு
ஊக்கம் அளித்து இன்பத்
தாக்கும் கொடுக்கின்றாய்!

வலம்புரியின் வாரமலரே
பலம் கொண்ட வீரமலரே இந்த
நிலம் உள்ள வரை உந்தன் நாதம்
வலம் வரட்டும் எப்போதும்!

த.அஜந்தகுமார்,
யாழ்.நெல்லியடி மத்திய
மகாவித்தியாலயம்.

நான்கு வர்ணத்துடனும்
நடு நிலமையோடும்
அறிவை வளர்க்கும்
ஆக்கத்துடனும்
வாழ்திடுவாய். திங்களில்
அன்பான நாதமே
உன் ஆக்கங்கள் மிகவும் நன்று
ஆனாலும் சினிமாச் சிதறலில்
கவர்ச்சிப் படங்களைக் குறைத்து
உன் ஆக்கத்தை மென் மேலும்
வளர்ப்பாயாக
எமக்கு அறிவு நீர் சொரிவாயாக.

S.S.சிவகுமார்,
மிருசுவில் வடக்கு.

சங்குநாதமே! எங்கள் நாதமே!
உன்னை எங்கும் தேடினோம்
இரண்டு வாரமே - யாழ் மண்ணிலே
வந்த நாதமே எங்கள் சங்குநாதமே!
நீ திங்கள் தோறுமே
எம்முன் நீ என்றும் வர வேண்டுமே.

புஷ்பம்,
பருத்தித்துறை.

இரண்டு வாரமாக சங்கு நாதமே!
எம் கரம் கிட்டவில்லை. எங்கே சென்றாய்
ஏனோ இந்தக் காலதாமதம்
இனிமேலும் நடக்கக் கூடாது

வாரத்தின் திங்கள் தினத்தில்
வசந்தம் போல் வந்திடுவாயே
உன் வரவை எதிர்பார்த்திருந்து
காத்திருந்த விழிகளும் பல்லாயிரம்

கதையளந்த நெஞ்சங்களோ எத்தனையே
அப்பப்பா எவ்வளவு ஏமாற்றம்
இனி ஒரு போதும் ஏற்படாது
என்றே நம்புகிறோம்.

மரண விளையாட்டு மனதைப்பறி கொடுத்ததே
மங்கையர் உலகம் மகளிர் மனதைக் கவர்ந்தது
சிறுவர் அரங்கத்தில் சிந்தனை விருந்துண்டு
சினிமா சிதறிலில் சிக்குண்டு தவித்தேன்

அரசியல் விமர்சனத்தில் அமர்க்களப்படுத்தி விட்டு
அர்த்தமுள்ள இந்து மதம் அபாரமாய்
இருக்கிறது. விஞ்ஞானத் துளியில் விந்தை பல
புரிந்து கம்பியூட்டர் கல்வியில் மாணவரின்
தேவையை உணர்த்தி

கவிதைக் கலசமதில் கவிகளை மோதவிட்டு
சங்குநாதமே எங்கே சென்றாய்
வாழ்க உன் புகழ் வளர்க உன் சேவை
யாழ் மண்ணிற்கு தேவை உன் பணி.

கந்த.ஞானமுத்து,
கைதடி, மேற்கு.



# சினிமாச் சிதறல்

## திரிரோசஸ் படத்திற்கு பாடல் பதிவு



இன்போகஸ் என்ற பட நிறுவனம் சார்பாக உஷாராணி, வாசு இருவரும் இணைந்து மிகபிரம்மாண்டமான முறையில் தயாரிக்கும் படம் 'திரிரோசஸ்'. இந்தப் படத்தில் ரம்பா, லைலா, ஜோதிகா மூவரும் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள். மற்றும் விவேக், ஊர்வசி, புதுமுகம் ரேகா, மனோபாலா, அனுமோகன், மதன்பாப், ஜெயமுரளி, சித்ரா, மீரா கிருஷ்ணா, விஜய் ஆதிராஜ், ராஜன், பி. தேவ், வின்சென்ட் ராய், ஆகியோரும் நடிக்கிறார்கள்.

இந்தப் படத்துக்காக கார்த்திக் ராஜா இசையமைப்பில் ஆறு பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"செவ்வாய் தேச சொர்க்கம் சென்று காதல் செய்ய வேண்டும் லாலி பப்பே"
"தில் ஓ தில்சே பியார் தில் தில் சே பியார்"
"செக்கி பேபி... ஓ ஹோ செக்சி பேபி"

போன்ற பாடல்களுடன் மொத்தம் ஆறு பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து பாடல்களையும் தேவாவின் மருமகன் பார்த்தி பாஸ்கா எழுத, கார்த்திக், சுஜாதா, பவதாரணி உட்பட முன்னணி பாடகா - பாடகிகள் பாட பதிவு செய்யப்பட்டு உள்ளது. இசை கார்த்திக் ராஜா கதை இன்போகஸ் கதை இலாகா வசனம் பாண்டியன் திரைக்கதை, இயக்கம் பரமேஷ்வர் தயாரிப்பு உஷாராணி, வாசு

## இளமைக் கலாட்டா பண்ண ரெடியாகிவிட்டது ரன்



"ரன்" படம் ரெடியாகிவிட்டது. ஆகஸ்ட் ரிலீஸ் என்று சொல்லப்பட்ட படம் இப்போது செப்டம்பர் 6 என்று தேதி குறித்திருக்கிறார்கள்!

தாமதத்துக்கான காரணம் என்ன? இயக்குநர் லிங்குசாமியிடமே கேட்கலாம் என்று போன் போட்டால் "ஏவி.எம்க்கு வாங்க சொல்றேன்" என்றார். அதைவிட நமக்கென்னவேலை. அடுத்த அரைமணி நேரத்தில் ஆஜரானேன். லிங்குசாமியோடு தயாரிப்பாளர் ரத்தினமும் இருந்தார்.



"ஆனந்தம் படத்துக்கப்புறம் நான் பண்ற படம். அதில் ஃபாமிலி பேக்ட்ராப்ல மொத்தக் கதையும் சொல்லியிருந்தேன். இது டோட்டல் காண்ட்ரஸ்ட். காதல், கலாட்டான்னு செமரகளை பண்ணியிருக்கோம். இந்தக் கதைக்கு என்ன தேவையோ அந்த எல்லைக்குள் எல்லாம் பண்ணியிருக்கோம். தவிர... மாதவன் ஃபர்ஸ்ட் டைம் ஆக்ஷன் பண்றார். ஆக்ஷன் படத்துக்கு மாதவனான்னு என்கிட்டக் கேள்வி கேட்டவங்க உண்டு. ஆனால் படம் பார்த்தீங்கன்னா... சாஃப்டா இருக்கிற கேரக்டர் கதையோட்டத்தோட ஆக்ஷனுக்கு மாறும்போது இயல்பா இருக்கும். ரொம்பப் பெரிய அளவில் பேசப்படுவார்" அடுக்கிக் கொண்டு போன வரை ஸ்பீட் பிரேக் போட்டு நிறுத்தினேன்.

"கேட்ட கேள்விக்கு பதில் வரலையே நண்பா?!"

"அதைத்தான் சொல்லிச் கிட்டிருக்கேன்" என்று மறுபடியும் தொடர்கிறார். "12பி படத்தின் மூலம் டைரக்டரான கேமெராமேன் ஜீவா ஸார் இந்தப் படத்தில் கேமெரா பண்ணியிருக்கார். பிரம்மாண்டம்னு பேரெடுத்தவர் ரத்னம் ஸார். ஸோ.. இவ்வளவு எதிர்பார்ப்பு உள்ள ஒரு படத்துக்கு அதிகம் டைம் எடுத்துக்கறது தப்பில்லை என்று தயாரிப்பாளர் சொன்னார். எடிட்டிங், கரெக்ஷன்ஸ்னு கொஞ்சம் டைம் எடுத்துக்கிடோம். அதான் லேட். இப்போ பக்காவா ரெடியாகிடுச்சு. ட்ரெயிலர் கூட ரெடி பண்ணியாச்சு, பாருங்க" என்று சொல்லிவிட்டு படத்திலுள்ள நான்கு பாடல்களையும், ட்ரெயிலரயும் போட்டுக் காட்டினார்.

"சும்மா சொல்லக்கூடாது செமத்தியான இளமைக் கலாட்டா... வித்யாசாகரிடம் சரியாக வேலை வாங்கியிருக்கிறார் லிங்குசாமி!

"காதல் பிசாசே... காதல் பிசாசே பாடலில் மீரா ஜாஸ்மின் இளசுகளை அள்ளிக் கொண்டு போவது நிச்சயம். "தேரடி வீதியில் தேவதை வந்தால் திருவிழான்னு தெரிஞ்சுக்கோ" என்று ஆட்டம் போட வைக்கிறது இன்னொரு பாடல்! மொத்தத்தில் இளசுகளுக்கு பிடிச்ச படமாக இருக்கும் என்பதற்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

கடைசியாக ஒரு விஷயத்தை "ஜொள்ளி"த்தான் ஆகவேண்டும். கோடம்பாக்கத்துக்கு இன்னொரு தேவதை கிடைச்சிடுச்சுப்...............பா!



## மைசூர் "பேலசில்" கிங் படப்பிடிப்பு



இந்தியன் தியேட்டர் புரொடக்ஷன்ஸ் சார்பில் எஸ்.கே. கிருஷ்ண காந்த் தயாரித்து வரும் படம் "கிங்".

அதென்ன "பப்பு" கடையறது... எனக்கு கொஞ்சம் சொல்லித்தரமாட்டியா.. என்று ராஜா தமிழிடம் கேட்க.... ஒன்றும் தெரியாதவளாய் முழிக்கிறாள். அதான்... நேத்து குழந்தைகளுடன் விளையாடிட்டிருந்தியே.. அம்மாவுக்கு கொஞ்சம் "பப்பு", அப்பாவுக்கு கொஞ்சம், அணிலுக்கு கொஞ்சம் "பப்பு"ன்னு விளையாடிட்டிருந்தீங்களே... என்று சொல்லி முடிப்பதற்குள், ஆங்... அந்த விளையாட்ட என்று சொல்லிகொண்டே... உங்களுக்கெல்லாம் சொல்லி தரமாட்டேன்.. என்று படாரென்று சொல்லிவிடுகிறாள்.

சரி.. "பப்பு" விளையாட்டு சொல்லித்தராட்டாலும் பரவாயில்ல.. ஐ லவ் யுன்னு என்கிட்ட சொல்லிடணும் என்று சொல்ல.. அது சொல்லமாட்டேன் என்று முரண்டு பிடிக்கிறாள். இப்ப பாரு.. நீயே சொல்லப்போற என்று அவள் உதட்டை இரண்டையும் பிடித்து கொண்டு ஐ லவ் யூ என்று உதட்டாலேயே சொல்ல வைக்கிறார். இப்ப என்ன சொல்ற.. என்று கேலியாக கேட்க.. அதெல்லாம் முடியாது என்று கோபமாக செல்ல

"சகியே போகாதே போகாதே...
போடாதே போடாதே - பொய்
வேஷம் போடாதே..."

என்று கிண்டல் செய்து பாட்டு பாடி ஆடுகிறான் ராஜா.

இதில் ராஜாவாக விக்ரம், தமிழாக சினேகா நடித்தார்கள். மைசூர் பேலஸ், கார்டன் மற்றும் உள்ள இடங்களில் ஆறு நாட்களாக படமாக்கப்பட்ட வருகின்றன. தேவன் எழுதிய இந்த பாடலை வைரமுத்து எழுதியுள்ளார்.

விக்ரம், சினேகா, வடிவேலு, நாசர், ஜனகராஜ், சுமித்ரா, சபீதா ஆனந்த், அனுமோகன், மதன்பாப், சிசர் மனோகர் மற்றும் பலர் நடிக்கிறார்கள். கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் : எ.எக்ஸ். சாலமன் இசை தினா ஒளிப்பதிவு : ஜி. ரமேஷ் எடிட்டிங் : லான்சி - மோகன் ஸ்டன்ட் : கனல் கண்ணன் கலை : எஸ்.எ.சி. ராம்கி தயாரிப்பு மேற்பார்வை : கே.கே. ரவி



நீ வரும் பாதையெல்லாம்! இது சத்யா மூவிஸ் நிறுவனத்திலிருந்து புதிதாக கிளை விரித்திருக்கும் சத்யா மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் முதல் படம். தெலுங்கை போல் தமிழிலும் புது முகங்களுக்கு பச்சைக் கொடி காட்டப்படுவதையடுத்து விமல் என்ற புதுமுகத்தை களம் இறக்கியிருக்கிறார்கள். இவரை எங்கே பிடித்தார்கள்? அதுதான் ஆச்சர்யம், விமல் டப்பிங் ஆர்டிஸ்டாம். அப்பாஸ், வினித், குணால் போன்றவர்களுக்கு குரல் கொடுத்தவர். டப்பிங் தியேட்டரில் இவரை பார்ப்பவர்கள் எல்லாரும் நீங்க நடிக்கபோயிருக்கலாமே என்று கேட்க கேட்க, ஒரு வழியாய் நடிக்கவே வந்துவிட்டார். டயலாக் சொல்லும்போதே முகத்தை அந்த பாவத்தில் வைத்துக் கொண்டு சொல்வேன். அது எனக்கு ரொம்பவே யூஸ் ஆகுது நடிக்கும்போது என்கிறார் விமல். அப்பாஸ், வினித், குணாலுக்கு குரல் கொடுத்ததோடு மட்டும் நிறுத்திக்குங்க! அவங்களை மாதிரி நடிச்சு....?

## இன்னொரு விஜய்

சிரிப்பிலும் கலகலப்பிலும் இன்னொரு விஜயாக உருவாகி வருகிறார் சிலம்பரசன். அவ்வளவு ஜாலியாக இருக்கிறாரா என்று ஆச்சர்யப்படாதீர்கள். மனிதர் வாயை திறந்து சிரிப்பதற்கு கூலி கேட்பார் போலிருக்கிறது. முன்பெல்லாம் கலகலப்பாக இருப்பவர் இப்போது சிடுசிடுவென்று தன் முகத்தை வைத்துக் கொள்கிறார். சிலம்பரசனின் இந்த மாற்றத்திற்கு காரணம், "விஜய் இப்படிதான் இருப்பார். நீங்களும் அப்படியிருந்தால் விஜய் இடம் உங்களுக்குதான்" என்று யாரோ சில ஜால்ராக்கள் சொல்லி வைக்க சிலம்பரசன் அந்த ஸ்டைலை ஃபாலோ பண்ண ஆரம்பித்துவிட்டார்.




ஏப்ரல் மாதத்தில் படத்தில் ஸ்ரீகாந்த் நடிக்கும் ஒரு பாடலை சிலம்பரசன் பாடியிருக்கிறார். அவர் பாடும்போது நேரில் சென்று பாராட்டு தெரிவித்திருக்கிறார் ஸ்ரீகாந்த். அப்பவாவது சிரிச்சாரா சிலம்பு?




இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது


# உலகப்புகழ் பெற்ற LG மின்சார சாதனங்களை இப்போது யாழ் நகரில் உங்களின் விருப்பத்திற்கு ஏற்பவும் வசதிக்கேற்பவும் வாங்கலாம்.



**LG** வர்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் மின்சாரத்திலும் பற்றரியிலும் இயங்கக் கூடியவை. (Televisions) **LG** தட்டையான திரை தொலைக்காட்சிகள் கண்ணுக்கு இதமானதுடன் பார்வை திறனை பாதுகாக்கின்றது. (Flatron Televisions)





**LG** குளிர்சாதனப் பெட்டிகள் உணவின் தரத்தை பாதுகாக்கின்றது. துருப்பிடிக்காத உலோகத்தாலானது. உணவின் ஊட்ச்சத்து இழப்பை தடுக்கின்றது. (Refrigerators)



**LG** சலவை இயந்திரங்கள் பாதுகாப்பானதும் உறுதியானதுமான அடிதளத்தைக் கொண்டது. கடினமான அழுக்கையும் இலகுவில் சலவை செய்யக்கூடியது. துருப்பிடிக்காத உலோகத்தாலானது. (Washing Machines)


**LG** குளிரூட்டிகள் சுத்தமான சூழலை ஏற்படுத்துகின்றது. கிருமிகளை அழிக்கவல்லது. துருப்பிடிக்காத உலோகத்தாலானது. குறைந்த மின்சார நுகர்வில் இயங்கக் கூடியது. (Air-Conditioners)





**LG** இன்ரலோவேவ் மைக்றோவேவ் அவன்கள் அதி விரைவாகவும் ஆரோக்கியமாகவும் சுகாதாரமாகவும் சமைக்கக்கூடியது. குறைந்த மின்சார நுகர்வில் இயங்கக் கூடியது. (Microwave Oven)

**LG** வீடியோ டெக் மின்சாரத்திலும் பற்றரியிலும் இயங்கக் கூடியதுடன் பல நவீன அம்சங்களையும் கொண்டது. (VCR)



LG

Abans

498, காலி றோட், கொழும்பு-03. தொலை பேசி: 565265-79.

யாழ் நகரில் எமது அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்.

யாழ்ப்பாண மின்னகம் (Jaffna Electricals), 94(6)-ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். உஷா ஏஜென்சி (Usha Agency), 145, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

# இவ்வார இராசி பலன்கள்

## (16.09.2002 முதல 22.09.200 வரை)

| | | | |
|---|---|---|---|
| | | சனி ராகு | |
| | இராசிச் சக்கரம் | | குரு |
| | | | செவ், புதன் |
| சந் | கேது | சுக் | சூரி |

### மேடம்

**(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

உங்களுக்கு மனோதைரியம் தன்னம்பிக்கை, சுய உழைப்பு, கருமங்களில் வெற்றி, தன்மானம், குடும்பத்தில் மன அமைதி முதலியன தோன்றும். கல்வி ஸ்தானத்தில் செவ்வாய் நீசபங்க யோகமும், 6இல் சூரியன் இருப்பதால் கல்வி விருத்தி மாதா சுகம். தனம், பொருள், மனை, வாகன விருத்திகள் ஏற்படும். உறவினர், சினேகிதர் உதவி ஒத்தாசைகள் உண்டு. செய்யும் தொழிலில் விருத்தியும், கணிசமான இலாபமும் கிடைக்கும்.வியாபாரிகள புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் நன்று. விவசாயிகளுக்குச் சந்தைப்படுத்தல் சீராகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அகலும். பெண்களுக்கு இவ்வாரம் யோகமாகும். மாணவர்க்குக் கல்வியில் ஏற்றமுண்டாகும்.

### இடபம்

**(கார்த்திகை 2, 3, 4 ரோகினி மிருகசீரிடம் 1, 2ஆம் பாதம்)**

இவ்வாரம் உங்களுக்கு காரியத்தடை உண்டு. செய்யும் வேலைகளில் தாமதம் அல்லது பதவியில் முடக்கம் ஏற்படும். உறவினர், நண்பர் விரோதம் உண்டு. நெருப்பால் பீதியுண்டு. அந்நிய நாட்டுப் பயணங்களில் தடை தாமதங்கள் ஏற்படும். சிலருக்கு கள்வர் பயம், எதிரிகளால் தொல்லை உண்டு. ஆட்சி வெளளியால் களத்திர சுகம் ஏற்படும். தான தருமங்களில் ஈடுபட வாய்ப்பேறபடும். செய் தொழிலில் கணிசமான இலாபம் கிட்டும். உத்தியோகத்தர்க்கு வேலைப்பழு உண்டு. வியாபாரம் இடையிடையே மந்தநிலை பெறும். புது வியாபாரங்களை ஆரம்பிக்கலாகாது. விவசாயிகள் பயிர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தலில் சிரமம் ஏற்படும். வங்கியிருப்புகள் திருப்தியளிக்காது. பெண்களுக்கு இவ்வாரம் தேகசுகம் பாதிப்பால் வைத்தியச் செலவுண்டு மாணவர்க்கு கல்வியில் மந்தநிலை காணப்படும்.

### மிதுனம்

**(மிருகசீரிடம் 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் நன்மை, தீமைகள் கலந்த பலாபலன்களே ஏற்படும். குரு (2ஆம்) தன ஸ்தானத்தில் உச்ச யோகமடைவதால் தனம், பொருள், மனைவிருத்திகள் உண்டாகும். குடும்பசுகம், அமைதி கிட்டும், புத்திர வழிமூலம் சுகம், தூரதேச வாசம் கிட்டும். சத்துரு ஜெயம், நோய் நிவர்த்தி, கடன் தொல்லை அகலல், வழக்கு விடயங்களில் வெற்றி கிடைக்கும். செய் தொழிலில் மேன்மையும் விருத்தியும் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவிச் சிறப்பும், அதிகாரிகளின் பாராட்டும் கிட்டும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் கணிசமான இலாபமடைவர். சுகஸ்தானத்தில் சூரியன் இருப்பதால் பெண்கள் சிலருக்கு உஷ்ணரோகத்திற்கு இடமுண்டு. மாணவர்க்கு கல்வியில் ஊக்கமும், விடாமுயற்சியும் அவசியம்.

### கடகம்

**(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)**

உங்களுக்கு இவ்வாரம் 3இல செவ்வாய் பகை தோஷமிருப்பதால் இடையிடையே தேகசுகம் பாதிப்படையும். முதலீடுகளில் பாதிப்போ அல்லது எதிர்பாராத சோதனைகளோ உண்டாகலாம். சத்துரு பயம் வழக்கு விடயங்களில் ஈடுபாடு, மன உளைச்சல் முதலியன ஏற்படலாம். களத்திர சுகம் உண்டு. பிதுர் வழி இலாபமும், தான தரும காரியங்களில் வாய்ப்பும் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகச் செல்வாக்கு அதிகரிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்புண்டு. வியாபாரிகளின் வியாபாரம் கணிசமான முன்னேற்றத்தைக் கொடுக்கும். பெண்களுக்கு இவ்வாரம் தேகாபிமானம் அவசியம். மாணவர்க்கு கல்வியில் விடாமுயற்சியும், ஊக்கமும் அவசியம் ஆசிரியர் - மாணவர் உறவு சீராகும்.

### சிங்கம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் வரவுக்கு மிஞ்சிய செலவு, ஆரோக்கிய குறைவு செல்வாக்கு குன்றல், இனசன, நண்பர் பகை. அடிக்கடி பிரயாணம் அல்லது வெளிநாட்டுச் சஞ்சாரம் முதலியன உண்டாகும். அந்நிய நாட்டுத் தொடர்புகளால் ஆதாயம் கிட்டும். பெரியோர் உறவினர் உதவி ஒத்தாசைகள் உரிய நேரத்தில் கிடைக்கும் அரசு சார்ந்த எந்த உதவியும் உங்களுக்கு அனுசரனையாக அமையும். உத்தியோகத்தர்க்கு இவ்வாரம் ஏற்றமுண்டு. வியாபாரிகளுக்கு வங்கியிருப்புகள் மன நிறைவைத் தரும். விவசாயிகளுக்கு பயிருற்பத்தி அதிகரிக்கும். பெண்களுக்கு தேகாபிமானம் அவசியம். இல்லத்தில் சுப மங்கள கொண்டாட்டம் இடம்பெற வாய்ப்புண்டு. மாணவர்களுக்கு கல்வி விருத்தியும், பரீட்சைச் சித்தியுமுண்டு. ஆசிரியர் - மாணவர் உறவு சீர்நிலை பெறும்.

### கன்னி

**(உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் நினைத்த காரியம் வெற்றியுண்டாகும். தனவரவும், உறவினர், நண்பர், பெரியோர் அயலவர் உதவி, ஒத்தாசைகளும், புத்தி பலமும், புத்திர வழிமூலம் அனுகூலமும் கிடைக்கும். ஜென்மத்தில் சூரியன் இருப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. வைத்தியச் செலவேற்படும். 2இல் வெள்ளி ஆட்சி பெறுவதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்ப விருத்திகள் இவ்வாரம் உண்டாகும். ஜீவன ஸ்தானம் சுப யோகமாகும். உங்களுக்கு நன்மதிப்பு, மரியாதை, கௌரவம் இருக்கும். தொழில் நிமித்தம் அயல்நாட்டுப் பயணங்கள் கிட்டும். உத்தியோகச் செல்வாக்கு அதிகரிக்கும். வியாபாரிகளின் வியாபாரம் நல்ல இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும். புதிய வங்கியிருப்புக்கள் மன நிறைவைத் தரும். விவசாயிகளும் இவ்வாரம் ஏற்றமடைவர். பெண்களுக்கு சௌபாக்கிய யோகம் கிட்டும். மாணவர்கள் கல்வியில் விருத்தியும், ஊக்கமும் அடைவர்.

### துலாம்

**(சித்திரை 3, 4, சுவாதி, - விசாகம் 1, 2,3ஆம்பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் வெள்ளி 1இல் பலமாவதால் நன்மையான பலன்கள் எதிர்பார்க்கலாம். தனம், பொருள், மனை, வாகன, குடும்ப விருத்திகள் உண்டாகும். களத்திர சுகம் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியங்களும் இடம் பெறும். மாதா சுகம், கல்வி விருத்தி உண்டு. செய்தொழில் விருத்தியுண்டு. 12இல் சூரியன் இருப்பதால் எதிரிகள் தொல்லைகள் அகன்று, வழக்கு விடயங்களில் ஜெயமுண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அகலும். சக உத்தியோகத்தர்களின் உதவி, ஒத்தாசைகள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு நல்ல இலாபம் கிட்டும். விவசாயிகளுக்கு சந்தைப்படுத்தலால் மன நிறைவுண்டாகும். வங்கியிருப்புக்கள் திருப்திகரமாகும். பெண்களுக்கு இவ்வாரம் சௌபாக்கிய யோகமாகும். மாணவர்க்கு கல்வியில் ஆர்வமும், புதுத்தெம்பும் ஏற்படும். ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் உதவி பலமாகும்.

### விருச்சிகம்

**(விசாகம் 4, அனுஷம், கேட்டை)**

உங்களுக்கு இவ்வாரம் கண்டக ஸ்தானங்களில் பாவக்கிரகங்கள் இருப்பதால் இடையிடையே தேகசுகம் பாதிப்படையும். 12இல் வெள்ளி வரவுக்கு மிஞ்சிய செலவைக் கொடுக்கும். களத்திர சுகம் ஏற்படாது, பிதாவழிமூலம் அனுகூலம் இவ்வாரம் ஏற்படாது. தான, தர்ம காரியங்களில் தடைதாமதங்கள் கிட்டும். 11இல் சூரியன் இருப்பதால் தொழில்களுக்குரிய சிக்கல்கள் நீங்கி நல்லதொரு நிவாரணம் அமையும். உத்தியோகத்தர்களுக்கு இவ்வாரம் ஏற்றம் உண்டு. ஆனால் வேலைப்பழு இருக்கும், வியாபாரிகள், விவசாயிகள், வருமானம் கணிசமானவரை உண்டாகும். பெண்களுக்கு பெரும்பாலும் வைத்தியச் செலவுண்டு. தேகாபிமானம் அவசியம். மாணவர்க்கு கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் அவசியம்.

### தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் 10இல் சூரியன் திக்கு பலமடைவதால் செய்தொழில் விருத்தியும், தனலாபமும் உண்டாகும் 12இல் அசுப கிரகங்களின் பார்வை இருப்பதால் அலைச்சல், அகாலஉணவு, உறக்கமின்மை, வீண் விரயம், நீண்ட பயணம், விருப்பற்ற இடமாற்றம், சிறை பயம், வழக்கு விடயங்களில் சிக்கல் என்பவற்றில் ஏதேனும் ஒன்று இடம்பெற வாய்ப்புண்டு. சிலருக்கு வயிற்றில் கோளாறு அல்லது உஷ்ண வருத்தம் தோன்றும். தொழில் ரீதியாக நன்மைகள் கிட்டும். நிதி நெருக்கடிகள் சீராகும். கடன் தொல்லைகள் அகலும் உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகரிக்கும். அதிகாரிகளின் அழுத்தம் ஏற்படும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சுமாராக அமையும். விவசாயிகளுக்கு விவசாய உற்பத்திகள் அதிகரிக்கும் வங்கியிருப்புக்கள் மனநிறைவைத் தரும். பெண்களுக்கு உடலில் பாதிப்பும் சிலருக்கு வயிற்றில் கோளாறு ஏற்படும். மாணவர்க்கு கல்வியில் கவனஞ் செலுத்த ஊக்கமும், விடாமுயற்சியும் அவசியம்.

### மகரம்

**(உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் பாதம்)**

உங்களுக்கு 10இல் வெள்ளி ஆட்சி பெறுவதால் தொழில் வளம் அனுகூலமாகும். செய்யும் காரியங்கள் இவ்வாரம் ஜெயம் பெறும் தனம், பொருள் விருத்தியுண்டாகும். இல்லத்தில் இனசன கொண்டாட்டத்திற்கு இடமுண்டாகும். சிலருக்கு வெளிநாட்டுப் பயண முயற்சிகள் கைகூடும். உங்கள் இராசியைச் சுபக்கிரகம் நேரடியாக நோக்குவதால் தேக சுகம் அதிகரிக்கும். நோய், கஷ்டங்கள்அகலும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைகூடும். குடும்பப் பெண்களுக்கு கணவன், மனைவி, பிள்ளைகள், பாசபந்தங்கள் ஏற்படும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழில்கள் மூலம் இலாப முன்னேற்றமடைவர். வங்கியிருப்புக்கள் மன நிறைவைத் தரும். மாணவர் கல்வி வளர்ச்சி காண்பர்.

### கும்பம்

**(அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதம்)**

உங்களுக்கு இவ்வாரம் நன்மை, தீமைகள் கலந்த பலாபலன்களே உண்டாகும். 7இல் செவ்வாய் 8இல் சூரியன் இருப்பதால் இடையிடையே உஷ்ணரோகம் ஏற்படும். அதிக அலைச்சல், இடமாற்றம், தொழிலில் அமைதி குன்றல் தேக நலம் பாதிப்பு, உறவினர் அயலவர்களோடு கலகம் முதலியன தோன்ற வாய்ப்புண்டாகும். கடன் தொல்லையும், வழக்கு விட யங்களில் இழுபறியும் இவ்வாரம் ஏற்படும். உத்தியோகத்தர்க்கு வேலைப்பழு அதிகரிக்கும். வியா பாரிகளுக்கு வியாபாரம் மந்த நிலைபெறும். எதிர்பார்த்த இலாபம் கிட்டாது. விவசாயிகளுக்கு அரசமானியங்கள் உரிய வேளைகளில் கிடைக்காது. வங்கியிருப்புக்கள் நிதி வரவுகள் திருப்தியளிக்காது. பெண்களுக்கு தேக நலம் பாதிப்பால் வைத்தியச் செலவுண்டு. மாணவர்க்கு கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் அவசியம்.

### மீனம்

**(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)**

உங்களுக்கு இவ்வாரம் சுப யோக வாரமாகும். மனக்கவலை நீங்கி, குடும்பத்தில் அமைதி தோன்றி தனம், பொருள், மனை, வாகன, குடும்ப விருத்திகள் உண்டாகும். 7இல் சூரியன் இருப்பதால் இவ்வாரம் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டாகும். 9ஆம் இடத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் தான, தரும, கர்மங்களில் ஈடுபட வாய்ப்பேறபடும். உங்கள் இராசியை சுபக்கிரகம் நோக்குவதால் எதிலும், நிதானம் நிலவும். பேச்சு வன்மை, வழக்கு விடயங்களில் ஜெயமும் கிட்டும் உத்தியோகத்தர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். சக ஊழியர்களின் உதவி, ஒத்தாசைகள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பான இலாபத்தைக் கொடுக்கும். விவசாயிகளுக்கு வங்கியிருப்புக்கள் மனநிறைவைத் தரும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைகூடும். குடும்பப் பெண்களுக்கு இவ்வாரம் சௌபாக்கிய யோகமாகும். மாணவர்க்கு கல்வியில் ஆர்வமும் ஊக்கமும் கிட்டும்.

த.சத்தியதாஸன்
சத்யா

---

# என்னவள்

சி.சாமினி
உரும்பிராய்.

மழை இன்னும் வெளியில் தூறிக் கொண்டுதான் இருந்தது. எனினும் அவள் எவ்வாறு என் அறைக்குள் நுழைந்தாள்? என்பதுதான் இன்னும் எனக்கு புரியாத புதிராக இருந்தது.ஒரு வேளை மழை பெய்யத் தொடங்கு முன்னே வந்து ஒளிந்திருந்து கொண்டு என் தனிமையை எதிர்பார்த்துக் காத்திருந்தாளோ என்னவோ என் அப்பா வேலைக்குச் சென்றதும் அம்மா காய்கறி வாங்க சந்தைக்குச் சென்றவுடன் என் அறைக்குள் ஏதோ வேலையாக வந்த என்னைப் பின் புறமாக பாய்ந்து அணைத்து விட்டாள்.

ஒரு கணம் திகைத்த நான் மறு கணம் அவளது அணைப்பின் ஸ்பரிசத்தையும் அவளுக்கே உரிய வாசனையையும் கொண்டு அவள் என்னவள் தான் என்பதை உணர்ந்து கொண்டேன். அவள் கோபத்துடன் என் முதுகிலே தன் கை நகங்களால் கீறினாள். தன் முழிக் கண்ணை அங்கும் இங்குமாக புரட்டி தன் செல்லக் கோபத்தைக் காட்டினாள்.

அவளது கோபம் நியாயம் தான். ஆதலால் நான் கோபப்படாது அதை மௌனமாக இரசித்தேன். ஏனெனில் நான் ஒரு கிழமைக்கு முதல் திடீரென கொழும்பு செல்ல வேண்டி இருந்ததால் என்னவளிடம் சொல்லாமல் புறப்பட்டதும் நேற்று மாலை திரும்பி வந்தவுடன் அவளைச் சந்திக்காது இருந்ததும் தான் அவளது கோபத்திற்கான காரணங்கள்.

இன்று கூட அவளைச் சந்திப்பதற்காகத்தான் கம்பஸ்"க்கு போகாமல் காத்திருக்கிறேன் என்று சொன்னால் அவளுக்குப் புரியுமா? அல்லது . புரிய வைக்கும் நிலையிலா அவள் இருக்கிறாள் என நினைத்துக் கொண்டே அவளது மென்மையான கரங்களை என் முதுகிலிருந்து பிரித்தெடுத்து அவளை என் மடியில் சாய்த்த வண்ணம் கட்டிலில் சாய்ந்தேன். மெதுவாக அவளது தலையை வருடிக் கொடுத்தேன்.


அது கூட என்னவளின் கோபத்தைத் தணிக்கவில்லை போலும். என்னை உதறிவிட்டு அருகிலிருந்த மேசையில் ஏறி முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள். இதிலும் நான் தோற்று விட்டேன்.

என்னவளிற்கு பால் என்றால் உயிர் என்பதை அறிந்த நான் அதைக் கொடுத்து சமாளிக்க எண்ணி திருட்டுத்தனமாக குசினிக்குள் சென்று அம்மா காய்ச்சி வைத்த பசுப்பாலை கொண்டு வந்து அவளிடம் கொடுத்தேன். அப்புறம் அவள் என்பக்கம் திரும்பாது கருமமே கண்ணானாள். பாலின் இனிமையால் அதை ரசித்துக் கொண்டு அவள் தன் கண்களை மூடியபடி குடிக்க நான் அவளைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தேன்.


அப்போதுதான் அந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது. என் லக்கிக்கு என்னவளை பிடிக்காது என்பது எனக்கு முன்பே தெரியுட. ஆனால் இந்த இனிமையான நேரத்தில் அவன் அங்கு வருவான் என நானோ, அவளோ சற்றும் எதிர்பார்க்கவில்லை. என் அறைக்கு பாய்ந்து வந்த லக்கி எங்களையும் நாங்கள் இருந்த நிலையையும் கண்டு கோபாவேசத்துடன் உறுமியபடி என்னவள் மீது பாய, அவள் பாறசட்டி கவிழ்ந்து உருள யன்னலுக்கால் பாய்ந்து ஓடிவிட்டாள். ஆம் என்னவள் என் (பூனைக்குட்டி) பாய்ந்து என்னைவிட்டு வெகுதூரம் வரை சென்று விட்டாள்.


# இந்தியாவில் விரைவில் மல்ரீமீடியா மெசேஜிங் சேவை

மொபைலில் படங்களை அனுப்ப உதவும் மல்ரிமீடியா மெசேஜிங் சேவை (**MMS**) அநேகமாய் இன்னும் சில வாரங்களில் இந்தியாவுக்கு வந்துவிடும். எம். எம். எஸ். மையம் ஒன்றை வழங்க ஒரு இந்திய செல் சேவை நிறுவனம் நோக்கியா நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. எம்.எம்.எஸ். வசதிக்கு இப்படி ஒரு மையம் அவசியம். செல் சேவை நிறுவனங்கள் எம். எம். எஸ். வசதியைத் தர எம். எம். எஸ். மையம் தவிர ஜி. பி. ஆர். எஸ். அல்லது தடையற்ற இன்ரநெற் இணைப்பு அவசியம். வாடிக்கையாளர்களுக்கு எம். எம். எஸ். / ஜி. பி. ஆர். எஸ். வசதியுள்ள செல் ஃபோன்கள் தேவை. இதற்கான புதிய செல்கள் இந்திய சந்தையில் வரத் தொடங்கி விட்டன.



விநாயகர் சதுர்த்தி விழா நாடு முழுவதும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி மும்பையில் 5.555 தேங்காய்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட 25 அடி உயர விநாயகர் சிலையே இது. என்ன வாசகர்களே அதிசயமாக இருக்கிறதா. . .!





இப்படம் விமான சாகச நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்டதல்ல. அமெரிக்காவின் கப்பற்படையைச் சேர்ந்த இந்த ஐந்து விமானங்களும் மிசிசியின் மேல் பறக்கும்போது எடுக்கப்பட்டது.



இந்தோனேஷியாவின் லேங்கேட் தேசிய பூங்காவில் யானை மீது அமர்ந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்கள். கரடு முரடான மலைப் பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பாதுகா வலர்களுக்கு யானையின் உதவியால் பணி எளிதாகியுள்ளது.

## அதிசய உலகம்!



ரே டாம்லின்சன், ஈ-மெயிலின் 'தந்தை'

ரே டாம்லின்சன் (Ray Tomlinson) என்கிற அமெரிக்க விஞ்ஞானிதான் மின்அஞ்சலை அப்போது உருவாக்கினார். பி.பி.என். முதன்மை பொறியியலாளராக உள்ள அவர் இப்போது மீடியா வெளிச்சத்துக்கு வந்திருக்கிறார் - மின்அஞ்சலின் தந்தை என்கின்ற ஸ்டார் ஜொலிப்புடன்.

ஒரே கம்யூட்டரில் ஒருத்தர் இன்னொருத்தருக்கு அஞ்சல் அனுப்பும் வசதியுடன். அந்த மென்பொருள் முதலில் இயற்றப்பட்டது. பிறகு இன்ரநெற்றின் முன்னோடி கம்யூட்டர் வலைப் பின்னலான ஆர்ப்பாநெட் (Arpanet) மூலம் அது செயல்படத் தொடங்கியது.

முதன்முதலில் அனுப்பப்பட்ட மின் அஞ்சலில் ஆபிரகாம் லிங்கனின் பேச்சு வாசகம் ஒன்று இடம்பெற்றதாகவும், அந்த வாசகம் முழுக்க 'கப்பிரல் லெட்டரில்' இருந்ததாகவும் நினைவு கூரும் ரே, அதை யாருக்கு அனுப்பி வைத்தேன் என்பது நினைவில்லை என்கிறார். அவர் எழுதிய முதல் ஈ-மெயில் புரோகிறாம் வெறும் 200 நிரல்வரிகளையே கொண்டிருந்தது என்றால் நம்பமாட்டார்கள் இன்றைய புறோகிராமர்கள். சிரிப்பார்கள்.


மிக மோசமான சூழலிலும் நம்புவதற்குரிய தொடர்பு கருவியாக வாய்த்திருப்பது இப்போது மின்அஞ்சல் தான்.

பரபரப்பில்லாமல் வாழ்க்கையை ஓட்டிவரும் ரேவை பலரும் பாராட்டுவதில் வியப்பில்லை. அவருக்கு பாராட்டு மின்மடல்கள் பொழியப்படுவதில் ஆச்சரியமுமில்லை. ஆனால் அவர் ஆச்சரியப்படுவது ''ஏண்டா ஈ-மெயிலைக் கண்டுபிடித்தாய்'' என்றும் சிலர் அவரைக் கேள்வி கேட்பதுதான் அத்தகைய கேள்விகளும் ஈ-மெயில் மூலமே வருகின்றன என்பதுதான் வேடிக்கை.




சீனா ஷங்காயில் நடைபெற்ற கண்காட்சியில் பேப்பர் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றின் விளம்பரத்திற்காக வில்லைப் போன்று தனது உடலை வளைத்துள்ள சீனப்பெண்.

மத்திய பிரதேசத்தின் உஜ்ஜைனில் உள்ள சந்தை ஒன்றில் விற்பனைக்காக வந்திருந்த பாகற்காயைக் கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தனர். இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறதென்றால் இதன் நீளம் 2 அங்குலம், சுற்றளவு மூன்றரை அங்குலம். இது கமல் சின்ஹா என்பவருக்குச் சொந்தமான நிலத்தில் விளைந்தது.





மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற அழகிப் போட்டியில் மலேசிய அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆந்ட்ரே சோங்கேவுடன் இரண்டாவது மூன்றாவது இடங்களைப் பிடித்த அழகிகள்.



பிரான்ஸ் நாட்டின் தென் பகுதிகளில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் அடித்து வரப்பட்ட கார்கள்தான் இவை.

உப்பு உற்பத்தி நிறுவனம் THE ORGANIZATION FOR PRODUCTION OF SALT

# ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம்

- கழுவிய அயடின் கலந்த கட்டி உப்பு
- அயடின் கலந்த மேசை உப்பு
- கருவாடு பதனடும் உப்பு

- புதிய வடிவம்
- புதிய பக்கற்றுகளில் தரமான ஆனையிறவு உப்பு
- உங்கள் தேவைகளுக்கு ஆனையிறவு உப்பையே பாவியுங்கள்

**உப்பு என்று கேட்காதீர்கள் ஆனையிறவு உப்பு என்று கேட்டு வாங்குங்கள்.**

**ஆனையிறவு அயடின் கலந்த உப்பு ஒரு நோய் நிவாரணி!**

ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்
இல.40, பருத்தித்துறை வீதி,
பருத்தித்துறை.

S.P.O என்ரபிறைசஸ்,
இல.110, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

**உப்பு உற்பத்தி நிறுவனம் ஆனையிறவு**

புதிய தோற்றம்
நம்பிக்கையை வென்ற பெயர்
நியாயமான விலை

# லாவ்ஸ் லங்கா காஸ்

முற்றிலும் பாதுகாப்பு

உலகத்தர நிர்ணயம்
ரெகுலேட்டர் IS 9798 - 1995
கோஸ் பைப் 1.5 மீ. IS 10908







இலங்கையின் முன்னோடியும் முதற் தரமானதுமான காஸ் (எரிவாயு)

## லாவ்ஸ் லங்கா காஸ்

எம்மிடம் எரிவாயு அடுப்பு இணைப்புக்கான ரெகுலேட்டர், கோஸ்பைப், கோஸ்கிளிப் என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

யாழ். குடா நாட்டிற்கான விநியோகஸ்தர்கள்

**ஈஸ்வர பகவான் அன் கம்பனி**

100, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021222 - 2507
தொலைநகல் : 021222 - 2507

**ஈஸ்வர அம்பாள் அன் கம்பனி**

155, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

LAUGFS Lanka Gas
Truly Sri Lankan